# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, மாச்சு மாதம் 13 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 193.00*** ***தபாற் செலவு : ரூபா 27.50***

## 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 1/2007*

### (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *203 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.*

(1) "ஆணையாளர்" என்னும் சொல் முதன்மைச் சட்டவாக் கத்தில் தோன்றுமிடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன்மூலம் ;

(2) "பாதகமான புள்ளிகள்" என்னும் சொற்கள் முதன் மைச் சட்டவாக்கத்தில் தோன்றுமிடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "சாரதி சீரப்படுத்தற் புள்ளிகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) "பெருவழி" என்னும் சொல் முதன்மைச் சட்டவாக்கத் தில் தோன்றுமிடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "வீதி" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ; அத் துடன்

(4) "லொறி" என்னும் சொல் முதன்மைச் சட்டவாக்கத்தில் தோன்றுமிடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக "மோட்டார் லொறி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்துக்கான தலையங் கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங் கம் இடப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் பாகத்துக்கான தலையங்த்தை மாற்றீடு செய்தல்.*

"மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்தலும், உடைமை யில் வைத்திருத்தலும், பயன்படுத்தலும்"

2-PL 003292-1,250 (2008/10)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (2) மற்றும் (2அ) என்னும் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) விற்பனை நோக்கங்களுக்காகப் பதிவு செய்யப்படாத மோட்டார் வாகனமொன்று வியாபாரியொருவரினால் அல்லது உற்பத்தியாளரொருவரினால் உடைமையில் வைத்திருக்கப்படுதலானது, அவ்வாகனம் விற்பனை செய்யப்படாத காலம்வரையும், III ஆம் பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட, விடயத்துக்கேற்ப, வியாபாரியொருவரின் உரிமத்தினது அதிகாரத்தின்கீழ் தவிரவும் அல்லது உற்பத்தியாளரொருவரின் உரிமத்தினது அதிகாரத்தின்கீழ் தவிரவும் ஏதேனும் வீதியின்மீது பயன்படுத்தப்படாதிருக்கும் காலம்வரையும், ஆணையாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காகக் குறித்தளிக்கப்பட்ட வேறு பிரித்துக்காட்டும் இலக்கமொன்றின் மூலம் அடையாளங்காணப்படும் காலம் வரையும், (1) ஆம் உட்பிரிவின் மீறுகையொன்றாக இராதிருப்பதெனக் கருதப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(5) இலங்கையினுள் இறக்குமதிசெய்யப்படுவதன் மேல், சுங்க வளவுகளிலிருந்து அகற்றுவதற்கான நோக்கத்துக்காக மட்டும் அத்துடன் அகற்றும்போது மட்டும் அல்லது ஏதேனும் சாதனத்தை நிறுவுவதற்கான நோக்கத்துக்காக மட்டும் ஒரு வீதியில் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பரீட்சிப்பு அல்லது பதிவு நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடத்துக்கு அல்லது ஏதேனும் இடத்திலிருந்து ஓட்டிச் செல்லப்படுகின்ற ஒரு மோட்டார் வாகனத்தின் பயன்பாடு (1) ஆம் உட்பிரிவின் மீறுகையொன்றாக இராதிருப்பதெனக்

கருதப்படுதல் வேண்டும் ; ஆயின், வியாபாரி உரிமமொன்றினது அதிகாரத்தின்கீழ் அல்லது ஏழு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியானதாக ஆணையாளர் தலைமையதிபதியினால் இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரமொன்றினது அதிகாரத்தின்கீழ் அது பயன்படுத்தப்படுதல் வேண்டும்." ;

(3) அதன் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(4) அதன் (9) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (10)ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(10) இப்பிரிவின் (1) ஆம் அல்லது (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது குற்றத்தீர்ப்பின்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், மூன்றாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :- முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய விரிவை உட்புகுத்துதல்.

"சட்டவிரோதமாக அமைத்துருவாக்கப்பட்ட முதலியதான மோட்டார் வாகனம் பயன்படுத்தப்படுதலாகாது.

2அ. (1) ஆளெவரும் -

(அ) சட்டமுறையற்றவகையில் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மூலமுன்மாதிரிக்கு இசைந்தொழுகவன்றி

வேறுவகையாக உற்பத்தி செய்யப் பட்டதான, பொருத்தப்பட்டதான, அமைத்துருவாக்கப்பட்டதான, புத்தாக் கஞ் செய்யப்பட்டதான இசைவாக்கப் பட்டதான, திரிபுபடுத்தப்பட்டதான அல்லது அதன் அமைப்பு மாற்றப்பட் டுள்ளதான ;

(ஆ) வணிகக்குறியிடப்பட்ட புதிய பாகங்களு டனல்லாது வேறுவகையாக அல்லது அப்பாகங்களின் உற்பத்தியாளரினது அனுமதியின்றிப் பொருத்தப்பட்டுள்ள தான ;

(இ) பொறிமுறை ரீதியில் குறைபாடுள்ள தான ;

(ஈ) விதித்துரைக்கப்பட்ட காப்பு நியமங் களுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற தான ;

(உ) களவாடப்பட்டதான ;

(ஊ) பொய்யான அடையாளத்தைக் கொண் டுள்ளதான ;

(எ) அதன் அடிச்சட்டக இலக்கத்துடன் தலையீடு செய்யப்பட்டுள்ளதான ; அல் லது

(ஏ) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதான, பொருத்தப்பட்டுள்ளதான, இசை வாக்கப்பட்டுள்ளதான, திரிபு படுத்தப் பட்டுள்ளதான அல்லது அதன் அமைப்பு ஏதேனும் முறையில் மாற்றப் பட்டுள்ளதென,

மோட்டார் வாகமொன்றை அவ்வாறானதென அறிந்துகொண்டு பயன்படுத்துதலாகாது.

(2) பிரிவு 2அ என்பதன் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு மாதகாலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும், அத்துடன் இரண்டாவது குற்றத்தீர்ப்பொன்றின்மேல் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு மாதகாலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும், அத்துடன் மூன்றாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்றின் இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதகாலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(1) மோட்டார் வாகனமெதுவும் அவ்வாகனம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அவ்வாகனம் எந்த வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வானங்களைச் சேர்ந்துள்ளதோ அந்த மோட்டார் வாகனங்களின் அமைப்பு, எடை, பரிமாணங்கள் மற்றும் சாதனம் என்பன தொடர்பாக

அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இசைந்தொழுகினாலொழிய, பதிவுசெய்யப்படுதலாகாது." ;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "இரண்டரை மெற்றிக் தொன்களை விஞ்சினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நான்காயிரத்து ஐந்நூறு கிலோகிராம்களை விஞ்சினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (2) ஆம், (3) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுற வேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(2) (அ) ஆணையாளர் தலைமையதிபதி, ஏதேனும் மோட்டார் வாகனத்தை -

(i) அது சட்டமுறையற்றவகையில் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மூலமுன்மாதிரிக்கு இசைந்தொழுகவன்றி வேறுவகையாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, பொருத்தப்பட்டுள்ளது, அமைத்துருவாக்கப்பட்டுள்ளது, புத்தாக்கஞ் செய்யப்பட்டுள்ளது, இசைவாக்கப்பட்டுள்ளது, திரிபுபடுத்தப்பட்டுள்ளது அல்லது அதன் அமைப்பு மாற்றப்பட்டுள்ளது என ;

(ii) வணிகக்குறியிடப்பட்ட புதிய பாகங்களுடனல்லாது வேறுவகையாக அல்லது அப்பாகங்களின் உற்பத்தியாளரினது அனுமதியின்றி அது பொருத்தப்பட்டுள்ளது என ;

(iii) பொறிமுறைரீதியில் குறைபாடுள்ளது என ;

(iv) விதித்துரைக்கப்பட்ட காப்பு நியமங்களுக்கு அது இணங்கியொழுகத் தவறுகின்ற என ;

(v) அது களவாடப்பட்டது என ;

(vi) அவ்வாகனத்தின் அடையாளம் பொய்யானது அல்லது ஐயாகவுள்ளது என ;

(vii) அடிச்சட்டக இலக்கத்துடன் தலையீடு செய்யப் பட்டுள்ள என ;

(viii) அவ்வாகனத்தைப் பதிவுசெய்வதற்கான விண் ணப்பகாரர், முன்னைய பதிவு ஏதேனுமிருப்பின் அது பற்றிய விபரங்களைக் கொடுத்துதவத் தவறியுள்ளார் என ;

(xi) அவ்வாகனத்தைப் பதிவுசெய்வதற்கான விண் ணப்பத்தில் விண்ணப்பகாரர் செம்மையற்ற விபரங்களைக் கொடுத்துதவியுள்ளார் என ; அல்லது

(x) அவ்வாகனமானது போலிபுனையப்பட்ட ஆவ ணங்களின்மூலம் இறக்குமதி செய்யப்பட்டுள் ளது என அல்லது பதிவுக்கான விண்ணப்பம் போலிக் கையொப்பமொன்றைக் கொண்டுள் ளது என அல்லது போலிபுனையப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளது என,

நம்புவதற்குக் காரணமுடையவராகவிருப்பின்,

(ஆ) மோட்டார் வாகனம் உள்ளடக்கியுள்ள சிறப்புக் கூறுகள் -

(i) விண்ணப்பத்தில் உள்ளடங்கியுள்ள விபரங் களுக்கிணங்க இல்லாதிருக்கின்றவிடத்து ;

(ii) அவரது அபிப்பிராயத்தில் அவ்வாகனம் வீதி யில் செல்லுவதற்குகந்ததல்லதாகவிருக்கின்ற விடத்து அல்லது அதன் வடிவமைப்பு, அமைப்பு அல்லது ஏதேனும் நிலைமை அல்லது

அதன் ஏதேனும் சாதனம் காரணமாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழு குவதல்லாதிருக்குமிடத்து ;

(iii) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்தி லான முன்னங்கீகாரம் இன்றி இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றவிடத்து ;

(iv) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்தி லான முன்னங்கீகாரமின்றி உற்பத்தி செய்யப் பட்டுள்ளதாக, பொருத்தப்பட்டுள்ளதாக, அமைத்துருவாக்கப்பட்டுள்ளதாக, இசைவாக் கப்பட்டுள்ளதாக, திரிபுபடுத்தப்பட்டுள்ளதாக அல்லது அதன் அமைப்பு ஏதேனும் முறையில் மாற்றப்பட்டுள்ளதாகவுள்ளவிடத்து,

பதிவு செய்தலாகாது.

(3) பந்திகள் (அ) அல்லது (ஆ) என்பவற்றின்கீழ் ஆணை யாளர் தலைமையதிபதியின் முடிவெடுப்புக்கள் காரணமாக ஒரு மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்யாதுவிடுவதற்கான அவரது முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(4) பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளெவரும் ஒரு மோட்டார் வாகனத்தின் சொந்தக்காராகப் பதிவுசெய்யப்படுதலாகாது :

ஆயின், எவ்வாறாயின், பதினெட்டு வயதுக்குக் குறைந் ஆளொருவர், ஒரு மோட்டார் வாகனத்தின் நன்மைபெறும் சொந்தக்காரராகப் பதிவுசெய்யப்படலாம் ; அப்பட்சத்தில் அத்த கைய ஆளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அதன் சொந்தக் காரராகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(5) போலிபுனையப்பட்ட கையொப்பமொன்றைக் கொண் டுள்ள அல்லது போலிபுனையப்பட்ட ஆவணங்களுடன் சேர்த் தனுப்பப்படும் பதிவுக்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக் கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தா யிரம் ரூபாவுக்குக் குறையாததும் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண் டும்.".

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஒரு பயணப்போக்கு வரத்துச்சேவை அனுமதிப்பத்திரம் ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு பயணப் போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அதன் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத் தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(அ) விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் சைக்கிளாக, பாரமற்ற மோட்டார் சைக்கிளாக, மோட்டார் காராக, இரு நோக்க வாகனமாக, மோட்டார் முச்சக்கரவண்டியாக, மோட்டார் முச்சக்கர வானாக, மோட்டார் லொறியாக, பாரமற்ற மோட்டார் லொறியாக, பாரமான மோட்டார் லொறியாக, மோட்டார் கோச்சாக, பாரமற்ற மோட்டார் கோச்சாக, பாராமான மோட்டார் கோச்சாக, நில வாகனமாக, கை உழவுயந்திரமாக, விசேட நோக்க வாகனமாக, மோட்டார் பிணியாளர் வண்டியாக, மோட்டார் பிணவண்டியாக அல்லது நோயாளர் வண்டியாக இருப்பின், அத்தகையதாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் ;".

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(2) ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் –

(அ) மோட்டார் வாகனம் தொடர்பான இடாப்புக் களிலான ஏதேனும் பதிவீட்டின் செம்மையைப் பாதிக்கின்ற ஏதேனும் சூழ்நிலை அல்லது

நிகழ்வுபற்றி, குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதே நேரத்தில் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவுச் சான்றிதழை, விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் அல்லது அவரிடம் ஒப்படைத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பதிவுச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட வாறான வகுப்பை, ஒட்டுமொத்த அளவீடுகளை, வெளித்தோற்றத்தை, சில்லுத்தளத்தை அல்லது ஆசனக் கொள்ளளவை மாற்றுகின்றவாறாக ஒரு மோட்டார் வாகனத்தில் அத்தகைய மாற்றத்தைச் செய்வதற்கு அவர் உட்கருதுமிடத்து, அத்தகைய மாற்றங்களைச் செய்வதற்கு ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(3) ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரார், அவர் தொடர்பான இடாப்புக்களிலான ஏதேனும் பதிவீட்டின் செம்மையைப் பாதிக்கின்ற ஏதேனும் சூழ்நிலை அல்லது நிகழ்வு பற்றி, குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதே நேரத்தில் மோட்டார் வாகனத்தின் பதிவுச் சான்றிதழை, விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் அல்லது அவரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்.

(4) முற்போந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத்தவறுகின்ற மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும், இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 11அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"கைமாற்றமானது குறித்துரைக்கப்பட்ட படிவங்களில் இருத்தல் வேண்டும்.*

11அ. ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய வாகனத்தைக் கைமாற்ற விரும்புமிடத்து, பொருளளவில், விதித்துரைக்கப்பட்ட அ, அ1, ஆ, ஆ1, இ, இ1 ஆகிய படிவங்களில் அவர் அவ்வாறு செய்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :-

"(2) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் செய்யப்பட்ட தன்னிச்சையான கைமாற்றமொன்றின் மேல் மோட்டார் வாகனமொன்று உடைமை மாற்றப்படுவதன்மீது –

(அ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அத்தகைய உடைமை மாற்றத்தின் பின்னர் பதின்னான்கு நாட்களினுள் –

(i) உரியமுறையில் நிரப்பப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவம் அ என் பதை, ஒன்றில் பதிவஞ்சல்மூலம் அல்லது நேரடியாக ஒப்படைப்பதன் மூலம் ஆணையாளர் தலைமையதி பதிக்கு நேரடியாக அனுப்புதல் வேண் டும் ; அத்துடன்

(ii) உரியமுறையில் நிரப்பப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவங்கள் ஆ, ஆ1, இ, இ1 என்பவற்றையும், மோட்டார் வாகனம் தொடர்பான பதிவுச்சான்றிதழை அல்லது அதன் இணைப்பிரதியொன்றையும் மற்றும் அம்மோட்டார் வாகனத்தின் அரசிறை உரிமத்தையும் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்பதுடன், உடைமை மாற்றத்துக்கான எண்பிப் பாக உரியமுறையில் நிரப்பப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவம் அ1 என்பதைத் தம்வசம் வைத்திருத்தலும் வேண்டும் ;

(ஆ) அத்தகைய மோட்டார் வாகனம், அத்தகைய உடைமை மாற்றத்திலிருந்து பதினான்கு நாட்க ளுக்குப் பின்னர் எந்நேரத்திலும் புதிய சொந்தக் காரர் அதன் புதிய சொந்கதக்காரராகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பித்திருந்தா லொழிய, பயன்படுத்தப்படுதலாகாது :

ஆயின், இவ்வுட்பிரிவானது, வாடகைக் கெடுத்தற் காலப்பகுதி மூன்று மாதங்களை விஞ்சாதவிடத்து, ஒரு மோட்டார் வாகனத்தின் உடைமை மாற்றம் ஒரு வாடகைக்கெடுத்தல் ஒப்பந்தத்தின் விளைவானதாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

(3) (அ) உடைமை மாற்றம் பற்றிப் பதினான்கு நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கத் தவறுகின்ற பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஆறாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) புதிய சொந்தக்காரராகப் பதிவுசெய்யப்படுவதற்கு, உடைமை மாற்றத்தின் பின்னர் பதினான்கு நாட்களினுள் விண்ணப்பிக்கத் தவறுகின்ற ஒரு மோட்டார் வாகனத்தின் புதிய சொந்தக்காரர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், அத்தகைய தவறுதல் ஏற்பட்டதிலிருந்து பதினான்காம் நாளுக்குப் பின்னரும் நாற்பத்திநான்காம் நாள் வரையிலுமான ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(இ) புதிய சொந்தக்காரராகப் பதிவுசெய்யப்படுவதற்கு உடைமை மாற்றத்தின் பின்னர் நாற்பத்திநான்கு நாட்களினுள் விண்ணப்பிக்கத் தவறுகின்ற ஒரு மோட்டார் வாகனத்தின் புதிய சொந்தக்காரர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(ஈ) போலிபுனையப்பட்ட அல்லது போலிக் கையொப்பத்தைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணத்தைச் சமர்ப்பிக்கின்ற பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரொருவர் அல்லது புதிய சொந்தக்காரரொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(உ) உடைமை மாற்றப்பட்டுள்ளதும், வீதியொன்றில் பயன்படுத்தப்படுகின்றதுமான மோட்டார் வாகனமொன்றை, பொலிசு அலுவலரொருவர், சொத்தாண்மையைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக நியாயமான முறையில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குத் தடுத்துவைக்கலாமென்பதுடன்,

(i) அத்தகைய வாகனம் அதன் புதிய சொந்தக்காரரின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதியினால் உறுதிப்படுத்தப்படுவதன்மேல் ; அத்துடன்

(ii) அதன் பதிவுச்சான்றிதழைக் காண்பிப்பதன் மேல்,

புதிய சொந்தக்காரருக்கு அதனை விடுவித்தலும் வேண்டும்.

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் –

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "ஏழு நாட்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினான்கு நாட்களினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "பதினான்கு நாட்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினாறு நாட்களினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(உ) உட்பிரிவு 2(ஆ) என்பதன் ஏற்பாடுகள், பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செய்யப்பட்ட தன்னிச்சையான கைமாற்றத்தின் விளைவாக மோட்டார் வாகனத்தின் உடைமை மாற்றம் ஏற்பட்டிருப்பின் அவை ஏற்புடையனவாகும் அதேமுறையில் அம்மோட்டார் வாகனத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(1) ஏதேனும் மோட்டார் வாகனத்தின் ஏதேனும் உடைமை மாற்றத்தின்மேல் புதிய சொந்தக்காரரொருவரைப் பதிவுசெய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் –

(அ) பொருளளவில், விதித்துரைக்கப்பட்ட படிவங்கள் ஆ மற்றும் இ என்பவற்றில் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) அம்மோட்டார் வாகனத்துக்கு ஏற்புடையற்பாலதாகவிருக்கக்கூடியவாறாக அப்படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட கருமங்களுள் அத்தகையவை தொடர்பில் அம்மோட்டார் வாகனம் தொடர்பான எல்லா விபரங்களையும் தருதல் வேண்டும் ;

அத்துடன் ஏற்றுக்கொண்டமை பற்றிய பற்றுச்சீட்டொன்று ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை அதன் (3) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (2) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(2) (அ) புதிய சொந்தக்காரர், உரியமுறையில் நிரப்பப்பட்டுள்ள விதித்துரைக்கப்பட்ட படிவங்கள் ஆ1 மற்றும் இ1 என்பவற்றைத் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் மீளஇலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "ஆணையாளர்" என்னும் சொல்லிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "சொந்தக்காரர் அத்தகைய நிகழ்வைப் பதினான்கு நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், பதிவுச் சான்றிதழையும் அவருக்கு அனுப்புதலும் வேண்டும் ; அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவை இல்லாதாக்குதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) ஓராம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (2) ஆம், (3) ஆம், (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(2) ஆணையாளர் தலைமையதிபதி, தனது சொந்தப் பிரேரணையின்பேரில், பதியப்படவேண்டிய காரணங்களுக்காக (பதிவுச்சான்றிதழில் பதிவீடுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் முகவரிக்குப் பதிவஞ்சல் மூலமானவோர் அறிவித்தலை அவருக்கு அனுப்புவதன் மூலம்) சொந்தக்காரர் விரும்பக்கூடியவாறான அத்தகைய முறையீட்டைச் செய்வதற்கு அவருக்கு வாய்ப்பொன்றை அளித்தபின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவை இல்லாதாக்கலாம் :-

(அ) (i) அது சட்டமுறையற்றவகையில் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மூலமுன்மாதிரிக்கு

இசைந்தொழுகவன்றி வேறுவகையாக உற்பத்திசெய்யப்பட்டுள்ளது, பொருத்தப்பட்டுள்ளது, அமைத்துருவாக்கப்பட்டுள்ளது, புத்தாக்கஞ்செய்யப்பட் டுள்ளது, இசைவாக்கப்பட்டுள்ளது, திரிபுபடுத்தப்பட்டுள்ளது, அல்லது அதன் அமைப்பு மாற்றப்பட்டுள்ளது என ;

(ii) வணிகக்குறியிடப்பட்ட புதிய பாகங்களுடனல்லாது வேறுவகையாக அல்லது அப்பாகங்களின் உற்பத்தியாளரினது அனுமதியின்றி அது பொருத்தப்பட்டுள்ளது என ;

(iii) பொறிமுறைரீதியில் குறைபாடுள்ளது என;

(iv) விதித்துரைக்கப்பட்ட காப்பு நியமங்களுக்கு அது இணங்கியொழுகத் தவறுகின்றது என ;

(v) அது களவாடப்பட்டது என ;

(vi) அவ்வாகனத்தின் அடையாளம் பொய்யானது என ;

(vii) அடிச்சட்டக இலக்கத்துடன் தலையீடுசெய்யப்பட்டுள்ளது என ;

(viii) அவ்வாகனத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பகாரர், முன்னைய பதிவு ஏதேனுமிருப்பின் அது பற்றிய விபரங்களைக் கொடுத்துதவத் தவறியுள்ளார் என ;

(ix) அவ்வாகனத்தைப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பத்தில் விண்ணப்பகாரர் செம்மையற்ற விபரங்களைக் கொடுத்துதவியுள்ளார் என ; அல்லது

(x) அவ்வாகனமானது, போலிபுனையப்பட்ட ஆவணங்களின்மூலம் இறக்குமதிசெய்யப் பட்டுள்ளது என அல்லது பதிவுக்கான விண்ணப்பம் போலிக் கையொப்பமொன் றைக் கொண்டுள்ளது என அல்லது போலி புனையப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து அனுப்பப்பட்டுள்ளது என ;

நம்புவதற்குக் காரணமுடையவராகவிருப்பின் ; அத்துடன்

(ஆ) மோட்டார் வாகனம் உள்ளடக்கியுள்ள சிறப்புக் கூறுகள் –

(i) விண்ணப்பத்தில் உடங்கியுள்ள விபரங் களுக்கிணங்க இல்லாதிருக்கின்றவிடத்து;

(ii) அவரது அபிப்பிராயத்தில் அவ்வாகனம் வீதியில் செல்லுவதற்குகந்ததல்லதாக விருக்கின்றவிடத்து அல்லது அதன் வடிவமைப்பு, அமைப்பு அல்லது ஏதே னும் நிலைமை அல்லது அதன் ஏதேனும் சாதனம் காரணமாக இச்சட்டத்தின் ஏற் பாடுகளுக்கு இணங்கியொழுகுவதல்லா திருக்குமிடத்து ;

(iii) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரம் இன்றி இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டி ருக்கின்றவிடத்து ;

(iv) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக, பொருத் தப்பட்டுள்ளதாக, அமைத்துருவாக்கப் பட்டுள்ளதாக, இசைவாக்கப்பட்டுள்ள

தாக, திரிபுபடுத்தப்பட்டுள்ளதாக அல்லது அதன் அமைப்பு ஏதேனும் முறையில் மாற்றப்பட்டுள்ளதாகவுள்ள விடத்து,

(V) அதன் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் இறந்திருக்குமிடத்து அல்லது அவரைக் கண்டுபிடிக்க முடியாதிருக்குமிடத்து அல்லது அத்தகைய வாகனம் ஒரு மோட்டார் வாகனமாக இல்லாதொழிந்திருக்குமிடத்து ; அல்லது

(இ) அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு, ஏதேனும் முக்கியமான விபரத்தில் பொய்யானவையாகவிருந்த ஆவணங்களின் அடிப்படையில் அல்லது பொய்யானவையாகவிருந்த நிகழ்வுகளின் பிரதிநிதித்துவத்தின்மூலம் பெறப்பட்டிருக்குமிடத்து அல்லது அதன்மீது பொறிக்கப்பட்ட என்ஜின் இலக்கம் அல்லது அடிச்சட்டக இலக்கம், பதிவுச்சான்றிதழில் பதிவீடுசெய்யப்பட்ட அத்தகைய இலக்கத்திலிருந்து வித்தியாசப்பட்டிருக்குமிடத்து.

(3) ஆணையாளர் தலைமையதிபதியானவர், மோட்டார் வாகனமொன்றுக்கு அடுத்தடுத்த இரு ஆண்டுகளுக்காக அரசிறை உரிமமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லையென்ற பொருள்பட்ட, அத்துடன் உரிமமளிக்கும் அதிகாரியினால் வழங்கப்படும் அக்காலப்பகுதிக்காகப் பயன்படுத்தப்படாமைபற்றியவொரு சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லையென்ற பொருள்பட்ட சான்றை அல்லது தகவலைப் பெற்றதன்மேல், செல்லுபடியான அரசிறை உரிமமொன்றை அல்லது பயன்படுத்தப்படாமை பற்றி உரிமமளிக்கும் அதிகாரிகளினால் வழங்கப்பட்ட அத்தகைய சான்றிதழைக் காண்பிக்கும்படியும் ஒருமாத காலப்பகுதியினுள் பதிவுச்சான்றிதழை மீள ஒப்படைக்கும்படியும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரை உடனடியாகத் தேவைப் படுத்துதல் வேண்டும். இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசிறை உரிமத்தை அல்லது

பயன்படுத்தப்படாமைபற்றிய அத்தகைய சான்றிதழைக் காண்பிப்பதற்குச் சொந்தக்காரர் தவறினால், ஆணையாளர் தலைமை அதிபதி, அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவை இல்லாதாக்குதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியானவர் ஏதேனும் வாகனத்தைப் பரிசோதனை செய்யும்படி கட்டளையிடலாம் ; அத்துடன் அத்தகைய பரிசோதனையின்மீதும், (பதிவுச்சான்றிதழில் பதிவீடுசெய்யப்பட்ட சொந்தக்காரரின் முகவரிக்குப் பதிவஞ்சல் மூலமான அறிவித்தலொன்றை அவருக்கு அனுப்புவதன்மூலம்) சொந்தக்காரர் செய்வதற்கு விரும்பக்கூடிய ஏதேனும் முறையீட்டைச் செய்வதற்கு அவருக்கு வாய்ப்பொன்றை அளித்த பின்னரும், வாகனமானது பயன்படுத்தப்படுவதற்கு இயலாதுள்ள அத்தகையவொரு நிலைமையில் உள்ளதென அல்லது ஒரு பகிரங்க இடத்தில் அதனைப் பயன்படுத்துதலானது பொது மக்களுக்கு ஆபத்தாகவிருக்குமென, அத்துடன் அது நியாயமான திருத்தத்துக்கு அப்பாற்பட்டதென அவர் திருப்திப்படின், அவ்வாகனமானது பதிவழிக்கப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவை இல்லாதாக்குதலும் வேண்டும்.

(5) ஒரு விபத்தின் விளைவாக அல்லது வேறு சூழ்நிலையின் விளைவாக மோட்டார் வாகனமொன்று வீதியில் செல்லுவதற்கு கந்ததல்லாததென வெளிப்படுத்தப்படின், ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவை இடைநிறுத்துதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவமொன்றில் அதன்பின்னர் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது வாகனமானது வீதியில் செல்வதற்கு உகந்ததாக்கப்பட்டுள்ளதென்றும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் அது இணங்கியொழுகுகின்றதென்றும் ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படின், அவர் இடைநிறுத்துகையை அகற்றலாம்.

(6) ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவு (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து

அல்லது வாகனத்தின் அடையாளம் அல்லது அத்தகைய வாகனத்தின் சொந்தக்காரரினது ஆளடையாளம் பிரச்சினையிலுள்ளவிடத்து, அத்தகைய வாகனம் இப்பாகத்தின்கீழ் மீளப்பதிவுசெய்யப்படுவதற்காகக் கவனத்துட்கொள்ளப்படலாம்; ஆயின் –

(அ) சொந்தக்காரர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) வாகனமானது, அந்நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் பரிசோதிக்கப்பட்டு, சொந்தக்காரர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரென்ற பொருள்பட பதிவுச்சான்றிதழிற் புறக்குறிப்பொன்று செய்யப்படுதல் வேண்டும்.

(7) ஒரு மோட்டார் வாகனத்தின் பதிவு இல்லாதாக்கப்படுவதன்மேல், பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய வாகனத்தைப் பயன்படுத்தாதொழிதல் வேண்டுமென்பதுடன், அடையாளத்தகட்டை, அத்தகைய இல்லாதாக்குகைபற்றி அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்குத் திருப்திக்கொடுத்தலும் வேண்டும்.

(8) (அ) விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க, ஆணையாளர் தலைமையதிபதியானவர், பதிவழிக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் ; பதிவழிக்கப்படுகின்ற மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல் அதன்கண் பதிவீடுசெய்யப்படும். அத்தகைய இடாப்பு, அலுவலக நேரங்களின்போது பொதுமக்களினால் பார்வையிடப்படுவதற்காகக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பதிவழிக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய இடாப்பிலான பதிவீடுகள், இதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க மட்டுமே செய்யப்படலாம், திருத்தப்படலாம், அத்துடன் அகற்றப்படலாம்.

(9) ஏழாம், (8) ஆம் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக மோட்டார் வாகனமொன்று,–

(அ) மோதுதல், தீ, வெள்ளம், விபத்து, அத்துமீறுகை அல்லது வேறு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலைகள்மூலம் அவ்வாகனம் சேதமடைந்திருப்பின் மட்டுமே ; அத்துடன்

(ஆ) அவ்வாகனத்தின் நியாயமான அழிவுமீட்புப் பெறுமதியும், வீதியொன்றில் அல்லது வீதி தொடர்பான இடப்பரப்பொன்றில் பயன்படுத்தப்படுவதற்காக அதனைத் திருத்துவதற்கான ஆகுசெலவும், சேதத்தை விளைவித்த நிகழ்ச்சிக்கு அல்லது சூழ்நிலைகளுக்கு நேர்முன்னர் அதன் நியாயமான சந்தைப் பெறுமதியிலும் பார்க்கக்கூடுதலாகவிருக்குமென அவ்வாகனத்தின் காப்புறுதியாளர் அல்லது காப்புறுதியாளர் எவரும் இல்லாதிருப்பின், அவ்வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தீர்மானமொன்றைச் செய்யின் மட்டுமே,

பதிவழிக்கப்படுதல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வாகனமொன்றின் காப்புறுதியாளரொருவர்,

(அ) அவ்வாகனத்தின் முழுமையான காப்புறுதிசெய்யப்பட்ட பெறுமதிக்கான உரிமைக்கோரிக்கையொன்றை அனுமதித்தால் ; அல்லது

(ஆ) அவ்வாகனத்தை மூன்றாம்திறத்தவரொருவருக்குக் கையுதிர்த்தால்,

அக்காப்புறுதியாளர் (9) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானமொன்றைச் செய்துள்ளாரெனக் கொள்ளப்படுகின்றது.

(11) உட்பிரிவு (9) (ஆ) என்பதிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அவ்வாகனத்தை ஒரு மோட்டார் பாடழிவுசெய்பவருக்குக் கையுதிர்த்தால், அப்பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அப்பிரிவின்கீழ் தீர்மானமொன்றைச் செய்துள்ளாரெனக்கொள்ளப்படுகின்றது.

(12) ஆணையாளர் தலைமையதிபதிக்கு பதிவழிக்கப்பட்ட வொரு வாகனம்பற்றி அறிவிக்கின்ற அல்லது பதிவழிக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய இடாப்பில் உள்ள பதிவீடொன்று திருத்தப் படுவதற்கு அல்லது அகற்றப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஆளொருவர், (விடயம் தேவைப்படுத்துகின்றவாறாக) அறிவிப்புக் கொடுக்கப்படும் அல்லது விண்ணப்பஞ்செய்யப்படும் நேரத்தில் அவ்வறிவிப்பு அல்லது விண்ணப்பம் சம்பந்தமாகக் கொடுக்கப் பட்ட ஏதேனும் தகவல் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணம் அல்லது அத்தகைய ஆவணத்தின் பிரதியொன்று, நுண்ணாய்வு, சட்டவலுவுறுத்துகை மற்றும் இணைந்த நோக்கங் களுக்காக வெளியிடப்படலாம் அல்லது பயன்படுத்தப்படலாம் என்பதுபற்றி அறிவிக்கப்படுகின்றார் என்பதனை ஆணையாளர் தலைமையதிபதி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(13) பதிவழிக்கப்பட்ட வாகனங்களைக் கையுதிர்த்தலும், அது தொடர்பாக வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகளும் தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(14) இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற எவரேனு மாள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்ன ரான குற்றத்தீர்ப்பொன்றின்மேல், இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 18ஆ என்னும் புதிய பிரிவை உட்புத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கின்றதுடன், இது, அச்சட்டவாக்கத்தின் 18ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"பதிவுச் சான்றிதழை மோசடியான முறையில் பயன்படுத்துதல் அல்லது சிதைத்தல் முதலியவற்றுக்கான தண்டம்.*

18ஆ. மோட்டார் வாகனமொன்றின் பதிவுச் சான்றிதழொன்றை –

(அ) மோசடியானமுறையில் பயன்படுத்து கின்ற அல்லது வேறெவரேனுமாள் பயன்படுத்துவதனை அனுமதிக்கின்ற ; அல்லது

(ஆ) போலியாகச் செய்கின்ற, மாற்றுகின்ற, சிதைக்கின்ற, உருக்குலைக்கின்ற அல்லது அழிக்கின்ற,

எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பென்றின்மேல் முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 அம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை அதன் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (2) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(2) குறிப்பாகவும் மேற்போந்த ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றியும், அமைச்சர் பின்வருவனவற்றுக்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) வாகனங்களினதும் இழுவைவண்டிகளினதும் அகலம், உயரம், சில்லுத்தளம், நீளம் மற்றும் மேற்கவிந்திருக்கை என்பவற்றையும் அவற்றின்மீது கொண்டுசெல்லப்படும் சுமையையும் அத்தகைய வாகனங்களினதும்

இழுவண்டிகளினதும் சில்லுகளின் விட்டத்தையும், தயர்களின் அகலத்தையும், தன்மையையும், நிலைமையையும் ஒழுங்குபடுத்துதலும் விதிகளுக்குச் சேதம் விளைவிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட எவையேனும் தயர்களைப் பயன்படுத்துவதனைத் தடைசெய்தலும் ;

(ஆ) எச்சரிக்கை உபாயங்களிலிருந்தான மிதமிஞ்சிய சத்தத்தையும், என்ஜின் புறம்போக்கினால் வெளியேற்றப்பட்ட சத்தத்தையும், மோட்டார் வாகனத்தின் வடிவமைப்பு அல்லது நிலைமை அல்லது அதில் பண்டங்களை ஏற்றுதல் காரணமான சத்தத்தையும் தடைசெய்தல் ;

(இ) வாகனங்களினதும் இழுவைவண்டிகளினதும் ஆகக்கூடிய பாரமேற்றப்படாத மற்றும் பாரமேற்றப்பட்ட எடையையும், வீதியுடன் தொடுப்புடைய ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான மோட்டார் வாகனத்தினால் அல்லது அத்தகையவொரு வாகனத்தின் ஏதேனும் பாகத்தினால் அல்லது பாகங்களினால் வீதிக்கு அல்லது அதன் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்துக்கு அனுப்பப்படவேண்டிய ஆகக்கூடிய இருசுப் பாரத்தையும் அத்தகைய எடைகள் எந்த நிபந்தனைகளின் கீழ் பரீட்சிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படலாமோ அந்த நிபந்தனைகளையும் ஒழுங்குபடுத்துதல் ;

(ஈ) வாகனங்களின்மீதும் இழுவண்டிகளின் மீதும் அடையாளமிடப்படவேண்டிய விபரங்களை விதித்துரைத்தல் ;

(உ) வாகனங்களின்மீதும் இழுவைவண்டிகளின் மீதும் உள்ள பாய்வுகளினதும் நெம்புகோல்களினதும், எண்ணிக்கையையும் தன்மையை

யும் குறித்துரைத்தலும், பாய்வுகள், நெம்புகோல்கள், மௌனமாக்கிகள், வெளியேற்றுகை, வெளிச்சங்கள், எடை மற்றும் செலுத்தும் முடுக்கி என்பன வினைத்திறனுள்ளவையாக விருத்தலையும் முறையான தொழிற்பாட்டு நிலைமையில் வைத்திருக்கப்படுதலையும் உறுதிப்படுத்துதலும், அத்தகைய ஒழுங்கு விதிகளில் பதவிப்பெயர் குறிக்கப்பட்ட, பெயர்குறிக்கப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட எவரேனுமாள் அல்லது வகுப்பினரான ஆட்கள், அத்தகைய வகுப்பினரான ஆட்கள், அத்தகைய எவையேனும் பாய்வுகளை, நெம்புகோல்களை, மௌன மாக்கிகளை, வெளியேற்றுகையை வெளிச்சங்களை, எடையை மற்றும் செலுத்தும் முடுக்கியை, ஒரு வீதியின்மீது அல்லது எவையேனும் அத்தகைய வளவுகளிலுள்ள குடியிருப்பாளரின் சம்மதத்துக்கமைய அத்தகைய வளவுகளின்மீது, பரீட்சிப்பதற்கும் பரிசோதிப்பதற்கும் அவருக்கு அல்லது அவர்களுக்குத் தத்துவமளித்தலும் ;

(ஊ) ஒரு வாகனம் அணுகுவதனைச் சைகைகாட்டுவதற்கு அல்லது பிற்புறத்திலிருந்து இன்னுமொரு வாகனம் அணுகுவதனை அறிவதற்கு மோட்டார் வாகனமொன்றின் சாரதியை இயலச்செய்வதற்கு அல்லது ஒரு மோட்டார் வாகனத்தின் ஏதேனும் உட்கருதப்பட்ட வேகத்திலான அல்லது திசையிலான மாற்றத்தை அறிவிப்பதற்குப் பொருத்தப்படவேண்டிய உபகரணங்களை ஒழுங்குபடுத்துதலும் அத்தகைய எவையேனும் உபகரணங்களைப் பயன்படுத்துவதனை ஒழுங்குபடுத்துதலும் அல்லது தடை செய்தலும் அவை வினைத்திறனுள்ளவையாகவும் முறையான தொழிற்பாட்டு நிலைமையிலும் வைத்திருக்கப்படுதலையும் உறுதிப்படுத்துதலும் ;

(எ) வாகனங்களிலும் இழுவைவண்டிகளிலும் உள்ள வெளிச்சங்களின் தன்மை தொடர்பிலேனும், அவை பொருத்தப்படவேண்டிய நிலைகள் தொடர்பிலேனும், அவை எக்காலப்பகுதியின் போது வெளிச்சமிடப்படவேண்டியனவாக அல்லது வேறுவகையாக வைத்திருக்கப்படவேண்டுமோ அக்காலப்பகுதிகள் தொடர்பிலேனும் அத்தகைய வாகனங்களிலும் இழுவைவண்டிகளிலும் நிறுவப்படவேண்டிய அத்தகைய வெளிச்சங்களை ஒழுங்குபடுத்துதல் ;

(ஏ) வாகனங்களில் நிறுவப்படவேண்டிய காப்புச் சாதனங்களை விதித்துரைத்தல் ;

(ஐ) ஒரு மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக, புகையின், எண்ணெய்ப் பதார்த்தத்தின், சாம்பல்களின் நீரின், நீராவியின், புலப்படத்தக்க ஆவியின், தீங்கு விளைவிக்கும் புகைகளின், தீப்பொறிகளின், தணல்களின், வாயுவின் அல்லது சிறுகல் பொடிகளின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல் ;

(ஒ) மோட்டார் வாகனங்களினால் மோட்டார் வாகனங்கள் இழுக்கப்படுவதனையும் அல்லது இழுத்துச் செல்லப்படுவதனையும் அதற்காகப் பயன்படுத்தப்படும் இணைப்புகளின் முறையையும் ஒழுங்குபடுத்துதல் ;

(ஓ) ஒரு மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக, வீதியைப் பயன்படுத்தும் ஏனையோருக்கு அல்லது அதன் சுற்றாடலுக்குத் தொல்லை அல்லது ஆபத்து விளைவிக்கக்கூடிய சாத்தியங்கொண்ட எவையேனும் உபகரணங்களைப் பயன்படுத்துவதனை அல்லது ஏதேனும் செயலைப் புரிவதனைத் தடைசெய்தல் ;

(ஔ) ஏதேனும் மோட்டார் வாகனத்துக்கு வரிசையாக இணைக்கக்கூடிய இழுவைவண்டிகளின் எண்ணிக்கையையும், இணைக்கும் முறையையும், இழுவை வண்டிகள் எம்முறையில் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கப்படவேண்டுமோ அம்முறையையும், அதன் ஆகக்கூடிய எடையையும் ஒழுங்குபடுத்துதல் ;

(க) மோட்டார் வாகனங்களை அல்லது இழுவை வண்டிகளை ஓட்டுவதில் அல்லது கவனிப்பதில் தொழிலுக்கமர்த்தப்பட வேண்டிய ஆட்களின் எண்ணிக்கையை விதித்துரைத்தலும், அத்தகைய ஆட்களின் கடமைகளையும் நடத்தையையும் ஒழுங்குபடுத்துதலும் ;

(ங) எவையேனும் வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வாகனங்களுக்கான ஆகக்கூடிய வேகத்தை விதித்துரைத்தலும், விசேடமான விடயங்களில் விலக்களிப்புக்காக ஏற்பாடு செய்தலும் ; ராடார் கண்டுபிடிப்பான்களையும் மற்றும் லேசர் வேகத் துப்பாக்கிகளையும் நிழற்படஞ்சார் கண்டுபிடிப்பு உபாயங்களையும் பயன்படுத்துவதன்மூலம் வேகத்தை நிச்சயிப்பதற்கான நடவடிக்கைமுறையை விதித்துரைத்தலும் ;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ஒரு வீதிதொடர்பில் அல்லது ஒரு வீதியின் பாகம் தொடர்பில் அல்லது ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஒரு வீதிதொடர்பில் ஒரு மோட்டார் வாகனத்தின் அல்லது மோட்டார் வாகனங்களினது வகுப்பின் ஆகக்கூடிய வேகமாக வித்தியாசமான வேகங்கள் விதித்துரைக்கப்படலாம் ;

(ச) ஒன்றில் பொதுவாக அல்லது குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்புகளில் அல்லது வீதிகளில் அத்துடன் ஒன்றில் எல்லா நேரங்களிலும் அல்லது குறித்துரைக்கப்பட்ட நேரங்களுக்கிடையே, இசைக்கொம்புகளின் அல்லது வேறு எச்சரிக்கை உபகரணங்களின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடைசெய்தல், அத்துடன் வெவ்வேறு வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் அல்லது சூழ்நிலைகளில் வெவ்வேறு அதே வகுப்பினவான அல்லது விவரணத்தினவான வாகனங்கள் தொடர்பில் வெவ்வேறு விதிகள் ஆக்கப்படலாம் ;

(ஞ) ஒரு மோட்டார் வாகனத்தினுள் வெளிச்சம் அனுப்பப்படும் அளவையும் வெளிச்ச ஊடுருவுதலின் தீவிரத்தன்மையையும் தீர்மானிப்பதற்கான நடவடிக்கைமுறையை விதித்துரைத்தல் ;

(ட) காற்றுத் தீழ்ப்பாக்கிகளின் வெளியேற்றுகை நியமங்களைக் குறித்துரைத்தல் ;

(ண) எவையேனும் விதித்துரைக்கப்பட்ட வகுப்பினவான வாகனங்களில் இயைபூக்கமான மாற்றிகளின் நிறுவுகையை ஒழுங்குபடுத்துதல் ;

(த) இரசாயனப்பொருட்களை, வாயுவை அல்லது வேறு அபாயகரமான பண்டங்களை இடம்பெயர்ப்பதனை ஒழுங்குபடுத்துதல் ;

(ந) ஏதேனும் வகுப்பினவான அல்லது வகையினவான மோட்டார் வாகனங்கள் கடுகதிவழியா அல்லது ஏதேனும் வீதியைப் பயன்படுத்துவதனைத் தடைசெய்தல் ; அத்துடன்

(ப) மோட்டாரர் வாகனங்களின் பதிவை அகற்றுவதற்கான நடவடிக்கை முறைகளையும் (இடாப்பிலிருந்து இல்லாதாக்குதல்) அதற்காக இறுக்கப்படவேண்டிய கட்டணங்களையும் விதித்துரைத்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 19அ, 19ஆ, 19இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 19அ, 19ஆ, 19இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"ஆணையாளர் தலைமையதிபதியின் அனுமதியுடன் தவிர, ஆளெவரும், மோட்டார் வாகனத்தை அமைத்துருவாக்குதலாகாது, உற்பத்தி செய்தலாகாது முதலியன.*

19அ. (1) ஆளெவரும் ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் தவிர, இலங்கையில் மோட்டார் வாகனமொன்றை அமைத்துருவாக்குதலோ, உற்பத்தி செய்தலோ, பொருத்துதலோ, புத்தாக்கஞ்செய்தலோ, இசைவாக்குதலோ, திரிபுபடுத்துதலோ அல்லது அதன் அமைப்பை மாற்றுதலோ ஆகாது.

(2) ஆணையாளர் தலைமையதிபதி விதித்துரைக்கப்பட்ட படிவத்திற் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மேலும், விடயத்துற்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்வதற்கு, பொருத்துவதற்கு, அமைத்துருவாக்குவதற்கு, புத்தாக்கஞ்செய்வதற்கு, இசைவாக்குவதற்கு, திரிபுபடுத்துவதற்கு அல்லது அதன் அமைப்பை மாற்றுவதற்கு அத்தகைய விண்ணப்பகாரருக்கு அங்கீகாரமளிக்கு முன்னர், எழுத்திலான அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையபதிபதி குறித்துரைக்கக்கூடிய நியதிநிபந்தனைகளுக்கு விண்ணப்பகாரர் இணங்கியொழுகுவதற்கமைய, அத்தகைய அங்கீகாரத்தை அளிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிவித்தல் மூலம் குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகள், விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தை

உற்பத்திசெய்வதற்கான, பொருத்துவதற்கான, அமைத்துருவாக்குவதற்கான, புத்தாக்கஞ் செய்வதற்கான, இசைவாக்குவதற்கான, திரிபுபடுத்துவதற்கான அல்லது அதன் அமைப்பை மாற்றுவதற்கான விண்ணப்பகாரரின் செயலிடம், அத்தகைய அறிவித்தலிற்றரப்பட்டுள்ள அளவுக் குறிப்பீடுகளுக்கு இசைந்தொழுகவிருத்தல் வேண்டுமென்ற தேவைப்பாடொன்றை உள்ளடக்கலாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, விண்ணப்பகாரர் (2) ஆம் உப்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகவில்லையென அவர் திருப்திப்படுமிடத்து, (1) ஆம் உப்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எழுத்திலான அங்கீகாரத்தை அளிக்க மறுத்தல் வேண்டும். அத்தகைய மறுத்தல் பற்றிய எழுத்திலான அறிவித்தல் விண்ணப்பகாரருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் எழுத்திலான அங்கீகாரத்தை அளிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதி மறுக்கின்றமையால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய மறுப்புப் பற்றிய எழுத்திலான அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள், 213அஅ என்னும் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட மோட்டார் வாகன மேன்முறையீடுகள் நியாயசபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் ; அதன்மீது நியாயசபையின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(6) ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தல்மூலம் ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்பவர், பொருத்துபவர், அமைத்துருவாக்குபவர், புத்தாக்கஞ்செய்பவர், இசைவாக்குபவர், திரிபுபடுத்துபவர் ஆகிய ஒருவரை அல்லது அதன் அமைப்பை மாற்றுகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளை, அத்தகைய அறிவித்தலில் அவர் குறித்துரைக்கக்கூடிய வாறான அத்தகைய சேர்த்தல்களை, சீரப்படுத்து

தல்களை அல்லது திரிபுகளை, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்திசெய்வதற்கான, பொருத்துவதற்கான, அமைத்துருவாக்குவதற்கான, புத்தாக்கஞ்செய்வதற்கான, இசைவாக்குவதற்கான, திரிபுபடுத்துவதற்கான அல்லது அதன் அமைப்பை மாற்றுவதற்கான ஏலவேயுள்ள செயலிடத்துக்குச் செய்யும்படி தேவைப்படுத்தலாம்.

(7) ஆணையாளர் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட ஓர் எழுத்திலான அங்கீகாரத்தை, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்பவர், பொருத்துபவர், அமைத்துருவாக்குபவர், புத்தாக்கஞ்செய்பவர் அல்லது அதன் அமைப்பை மாற்றுகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஆள் -

(அ) ஆறாம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்டவோர் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளாரென ; அல்லது

(ஆ) (i) ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்கின்ற, பொருத்துகின்ற, அமைத்துருவாக்குகின்ற, புத்தாக்கஞ்செய்கின்ற, இசைவாக்குகின்ற, திரிபுபடுத்துகின்ற அல்லது அதன் அமைப்பை மாற்றுகின்ற தொழிலை முறையீனமான அல்லது திருப்திகரமற்றவொரு முறையில் கொண்டுநடாத்தியுள்ளாரென ;

(ii) அத்தகைய எழுத்திலான அங்கீகாரம் எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளாரென ; அல்லது

(iii) இப்பந்தியின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளாரென அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறியுள்ளாரென,

திருப்திப்படுமிடத்து, இல்லாதாக்குதல் வேண்டும்.

(8) ஆணையாளர் தலைமையதிபதி, (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் எழுத்திலான அங்கீகாரத்தை இல்லாதாக்குவதற்கு முன்னர், அத்தகைய இல்லாதாக்குகை எத்தேதியன்று செய்யப்பட வேண்டுமோ, எழுத்திலான அறிவித்தற்றேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குக் குறையாத அத்தேதியொன்றைக் குறித்துரைத்தும், அத்தகைய எழுத்திலான அங்கீகாரம் ஏன் இல்லாதாக்கப்படலாகாதென ஆணையாளர் தலைமையதிபதிக்குக் காரணங்காட்டும்படி ஒரு மோட்டார் வாகனத்தின் அத்தகைய உற்பத்தியாளரிடம், அமைத்துருவாக்குபவரிடம், பொருத்துபவரிடம், புத்தாக்கஞ் செய்பவரிடம், இசைவாக்குபவரிடம், திரிபுபடுத்துபவரிடம், அல்லது அதன் அமைப்பை மாற்றுகின்ற ஆளிடம் கோரியும், அவ்வாறு செய்வதற்கான தமது உட்கருத்துப்பற்றிய அவ்வறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான அங்கீகாரத்தை ஆணையாளர் தலைமையதிபதி இல்லாதாக்கியுள்ளவிடத்து, அவர், எழுத்திலான அறிவித்தல்மூலம் அத்தகைய இல்லாதாக்குகை பற்றி அத்தகைய ஆளுக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(10) ஏழாம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், (9) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்

யப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள், அத்தகைய இல்லா தாக்குகைக்கெதிராக பிரிவு 213அஅ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட மோட்டார் வாகன மேன்முறை யீடுகள் நியாயசபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் ; அதன்மீது நியாயசபையின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(11) இல்லாதாக்குகைபற்றிய கட்டளையொன்று, (9) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்குகைபற்றிய அறிவித்தல் கிடைக்கப்பொற்ற தேதியிலிருந்து பதினான்கு நாட்காலப் பகுதியொன்று முடிவுறும் வரை பயனுறுதலாகாது.

(12) அக்காலப்பகுதியினுள், அத்தகைய இல்லாதாக்குகையினால் இன்னலுறும் ஆள் பிரிவு 213அஅ என்பன்கீழ் தாபிக்கக்கட்ட மோட்டார் வாகன மேன்முறையீடுகள் நியாயசபைக்கு மேன்முறயைீடு செய்தால், அத்தகைய நியாயசபை அத்தகைய இல்லாதாக்குகைபற்றிய கட்டளையை உறுதிப்படுத்தும்வரை அல்லது மேன்முறையீடு தள்ளப்படும்வரை அக்கட்டளை பயனுறுத லாகாது.

(13) ஏழாம் அல்லது (11)ஆம் உட்பிரிவுக ளின்கீழ் இல்லாதாக்குகைபற்றிய கட்டளை யொன்று பயனுறுவதாக வருமிடத்து, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்திசெய்பவர், பொருத்துபவர், அமைத்துருவாக்குபவர், புத்தாக்கஞ் செய்பவர், இசைவாக்குபவர், திரிபு படுத்துபவர் அல்லது அதன் அமைப்பை மாற்று கின்ற ஆள், அத்தகைய கட்டளை பயனுறுவதாக வருகின்ற அத்தேதியிவிருந்து, விடயத்திற்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்தல், புத்தாக்கஞ் செய்தல், இசைவாக்குதல், திரிபு படுத்துதல் அல்லது அதன் அமைப்பை மாற்றுதல் என்ற தொழிலைக் கொண்டுநடாத்தாதொழிதல் வேண்டும்.

(14) ஒரு மோட்டார் வாகனம் எந்த உற்பத்தி செய்பவருக்கு, பொருத்துபவருக்கு, அமைத்துரு வாக்குபவருக்கு, புத்தாக்கஞ்செய்பவருக்கு, இசைவாக்குபவருக்கு, திரிபுபடுத்துபவருக்கு, அல்லது அதன் அமைப்பை மாற்றுகின்ற ஆளுக்கு அத்தகைய தன்மையில் தொழிலைக்கொண்டு நடாத்த எழுத்திலான அங்கீகாரம் வழங்கப் பட்டிருந்து அத்தகைய ஏதேனும் வகுதியினதான ஆட்கள் தொடர்பில் இல்லாதாக்கல் கட்டளை யொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் கீழ் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ, அவர், அத்தகைய இல்லாதாக்குகை கட்டளைசெய்யப்பட்ட திலிருந்து ஏழு நாட்களினுள்–

(அ) அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட எழுத் திலான அங்கீகாரம்பற்றிய அத்தகைய கடிதத்தையும்;

(ஆ) விடயத்துக்கேற்ப, அத்தகைய உற்பத்தி செய்பவரின். பொருத்துபவரின். அமைத் துருவாக்குபவரின், புத்தாக்கஞ்செய்பவ ரின், இசைவாக்குபவரின், திரிபுபடுத்து பவரின் அல்லது அமைப்புமாற்றுபவரின் பதிவுச்சான்றிதழையும்,

ஆணையாளர் தலைமையதிபதியிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்.

(15) ஒரு மோட்டார் வாகனத்தின் எந்த உற்பத்தி செய்பவரின, பொருத்துபவரின், இசைவாக்குப வரின், திரிபுபடுத்துபவரின் அல்லது அதன் அமைப்பை மாற்றுகின்ற தொழிலில் ஈடுபட் டுள்ள ஆளின் தொழிலுக்கான எழுத்திலான அங்கீகாரம் இப்பிரிவின்கீழ் இல்லாதாக்குகை செய்யப்பட்ட திலிருந்து–

(அ) (6) ஆம் உப்பிரிவின்கீழ் அவருக்கனுப் பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகியுள் ளாரெனவும்;

(ஆ) அத்தகைய எழுத்திலான அங்கீகாரம் எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய முன்னர் அளிக்கப்பட்டதோ அந்த நியதி நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகியுள்ளாரெனவும்; அத்துடன்;

(இ) அத்தகைய தொழிலை முறையான, மற்றும் திருப்திகரமானமுறையில் கொண்டு நடாத்துகின்றாரெனவும்,

ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துவதன்மேல் பின்வருவனவற்றுக்கென ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்:-

(i) அவரது தொழிலுக்கான எழுத்திலான அங்கீகாரத்தை அளிப்பதற்கு ; அத்துடன்

(ii) விடயத்துக்கேற்ப, உற்பத்திசெய்பவராக, பொருத்துபவராக, அமைத்துருவாக்குபவராக, புத்தாக்கஞ் செய்பவராக, இசைவாக்குபவராக, திரிபுபடுத்துபவராக அல்லது அமைப்புமாற்றுபவராக பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு.

(16) எழுத்திலான அங்கீகாரமொன்றை மீள வழங்குவதற்கு, அல்லது எவரேனும் ஆள், விடயத்திற்கேற்ப உற்பத்திசெய்பவராக, பொருத்துபவராக, அமைத்துருவாக்குபவராக, புத்தாக்கஞ்செய்பவராக, இசைவாக்குபவராக, திரிபுபடுத்துபவராக அல்லது அமைப்புமாற்றுபவராக அத்தகைய ஆளுக்கு பதிவுச்சான்றிதழை வழங்குவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதி மறுக்கின்றமையினால் இன்னலுறும் எவரேனும் எவரேனுமாள், மறுப்புப்பற்றிய எழுத்திலான அறிவித்தல் கிடைக்கப்பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்; அதன்மீது அவரது முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(17) உட்பிரிவுகள் (1), (13) அல்லது (14) என்பவற்றின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அத்தகைய மோட்டார் வாகனம் பறிமுதல் செய்யப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(18) அமைச்சரானவர், விடயத்துக்கேற்ப, உற்பத்திசெய்பவர், பொருத்துபவர், அமைத்துருவாக்குபவர், புத்தாக்கஞ்செய்பவரின், இசைவாக்குபவர், திரிபுபடுத்துபவர் இல்லது அமைப்பு மாற்றுபவர் ஒருவரின் பதிவுச்சான்றிதழ் தொடர்பில், அத்தகைய சான்றிதழுக்கு இணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகளும் அத்தகைய சான்றிதழ் வைத்திருப்போரின் நடத்தை சான்றிதழ் வைத்திருப்போரின் நடத்தையும் உட்பட, ஒழுங்குவிதி களை ஆக்கலாம்.

*வணிகக் குறியிடப்பட்ட பாகங்களுடன் தவிர மோட்டார் வாகனங்களைப் பொருத்துதல் தடை செய்யப்படுதல்.*

19ஆ. (1) ஆளெவரும்:-

(அ) வணிகக்குறியிடப்பட்ட புதிய பாகங்களுமதி தவிரவும்,

(ஆ) அத்தகைய பாகங்களின் உற்பத்தியாளரினது எழுத்திலான முன்னனுமதியுடன் தவிரவும்,

மோட்டார் வாகனமொன்றைப் பொருத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கவன்றி வேறுவகையாக மோட்டார் வாகனமொன்றைப் பொருத்துகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீரப்பளிக்கப்படுவதன்மேல் ஜம்பதாயிரம் ரூபாவுக்குக்குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

குறித்தசில வாகனங்களை இறக்குமதி செய்வதன் மீதான தடை.

19இ. (1) ஆளெவரும்,-

(அ) ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட மூலமன்மாதிரிக்கு இசைந்தொழுகவிராததும்; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர மொன்றின் அதிகாரத்தின்கீழ் அல்லாத தும்,

ஆன மோட்டார் வாகனமொன்றை இலங்கையினுள் இறக்குமதி செய்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக்குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மூன்று இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24ஆம் பிரிவை உடனடுத் துப்பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 24அ என்னும் பிரிவாகப்பயனுறுதலும் வேண்டும்:-

"21ஆம், 22 ஆம், 23ஆம், 24ஆம் பிரிவுகளை மீறுவதற்கான தண்டம்.

24அ. (அ) இச்சட்டத்தின் 21ஆம், 22ஆம், 23ஆம், 24ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ; அல்லது

(ஆ) (i) ஏதேனும் அடையாளத்தகட்டை மோசடியான முறையில் பயன்படுத்து கின்ற அல்லது வேறெவரேனுமாள் பயன்படுத்துவதனை அனுமதிக்கின்ற; அல்லது;

(ii) ஏதேனும் அடையாளத்தகட்டைப் போலியாகச் செய்கின்ற, மாற்றுகின்ற, சிதைக்கின்ற, உருவழிக்கின்ற அல்லது அழிக்கின்ற,

ஆளொருவர் தவறொன்றான்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல் முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அல்லது மூன்றுமாதங்களை விஞ்சாதலொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"மோட்டார் வாகனங்களுக்கான அரசிறை உரிமங்கள்.*

29. (1) (அ) ஒரு மோட்டார் லொறி, பாரமற்ற மோட்டார் லொறி, பாரமான மோட்டார் லொறி, மோட்டார் கோச்சு, பாரமற்ற மோட்டார் கோச்சு, பாரமான மோட்டார் கோச்சு, மோட்டார் பிணவண்டி அல்லது மோட்டார் நோயாளர் வண்டி, என்பவற்றுக்கான அரசிறை உரிமமெதுவும், 196ஆம் பிரிவின்கீழ் அது தொடர்பில் வழங்கப்படதகுமான தகுதிச்சான்றிதழொன்றும் வெளியேற்றல் சான்றிதழொன்றும் காண்பிக்கப்பட்டாலொழிய, வழங்கப்படுதலாகாது.

(ஆ) ஒரு மோட்டார் சைக்கிள்' பாரமற்ற மோட்டார் சைக்கிள், மோட்டார் கார், இருநோக்க வாகனம், மோட்டார் முச்சக்கரவண்டி, நில வாகனம், கையுழவுயந்திரம், 196ஆம் பிரிவின்கீழ் மோட்டார் வாகனத்தின் வெளியேற்றல் நிலை தொடர்பில் வழங்கப்பட்ட வெளியேற்றல் சான்றித

ழொன்று கூற்றொன்றை உள்ளடக்கவேண்டியதும் வலுவிலுள்ளதுமான தகுதிச்சான்றிதழொன்று காண்பிக்கப்பட்டாலொழிய, எவரேனும் உரிமமளிக்கும் அதிகாரியினால் வழங்கப்படுதலாகாது.

(2) அமைச்சர் பின்வருவன தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்–

(அ) அவ்வாறு தேவைப்படுத்தப்படின் தகுதிச் சான்றிதழையும் வெளியேற்றல் சான்றிதழையும் இணைப்பதற்கு ஏற்பாடு செய்தல்;

(ஆ) எந்த புதிய வாகன வகுப்புகள் தொடர்பில் ஒன்றில் தகுதிசான்றிதழ் அல்லது வெளியேற்றல் சான்றிதழ் தேவைப் படுத்தப்படக்கூடமோ அப்புதிய வாகன வகுப்புகளை அடையாளம் காணுதல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:–

*"வருகையாளரின் தற்காலிக உரிமம்.*

44. (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு மோட்டார் வாகனத்தின் இறக்குமதி தொடர்பாக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுவதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் ஆவணங்களுடனும் சேர்த்தனுப்பப்படுவதுமான விண்ணப்பத்திரத்தின்மேல், அத்தகைய மோட்டார் வாகனம், அவ்வாகனத்தின் சொந்தக்காரராக ஆளெவரும் பதிவு செய்யப்பட்டிராமை எவ்வாறிருப்பினும்,

(அ) விளையாட்டுக்கள் என்ற விடயத்தக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மோட்டார் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக ; அல்லது

(ஆ) இலங்கைக்கு வருகைதரும்போது அவ்வாகனத்தின் சொந்தக்காரரினால் பயன்படுத்தப்படும் நோக்கத்துக்காக,

இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளதென அவர் திருப்திப்படின், இறக்குமதி செய்யப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அம்மோட்டார் வாகனத்தை உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளித்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான வருகையாளரின் தற்காலிக உரிமமொன்றைச் சொந்தக்காரருக்கு வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள், இலங்கையிலுள்ள ஏதேனும் கப்பற்றுறையினூடாக இறக்குமதிசெய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் விடயத்தில், அக்கப்பற்றுறை எந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரினால் அல்லது பிரதேச செயலாளரினால் அல்லது அக்கப்பற்றுறையின் சுங்கக் கண்காணிப்பாளரினால் பிரயோகிக்கப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரவின்கீழ் எவரேனும் அலுவருக்குச் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், எவரேனும் அலுவலரினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு வருகையாளரினதும் தற்காலிக உரிமத்தினது ஒரு பிரதியும் வழங்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) வருகையாளரின் தற்காலிக உரிமம் ஒவ்வொன்றும், மோட்டார் வாகனத்தின் வகை, மாதிரி, அடிச்சட்டக இலக்கம், என்ஜின் இலக்கம் மற்றும்

நிறம் என்பவற்றையும், 5ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் தகடுகளின் விபரங்களையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் குறித்தளிக்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் ஓர் இலக்கத்தை அல்லது இலக்கங்களைக் கொண்டுள்ள இரு தகடுகளை அத்தகைய சொந்தக்காரருக்கு வழங்குதல் வேண்டும்.

(6) அத்தகைய தகடுகள், விதித்துரைக் கப்பட்டவாறு வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உரிமம் முடிவுவதன்மேல் ஆணையாளர் தலைமயைதிபதியிடம் திருப்பிக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(7) வருகையாளரின் தற்காலிக உரிமத்தினது சொந்தக்காரர், அதனை ஏற்றுமதிசெய்யுமுன்னர் அத்தகைய வாகனத்தின் பதிவை தற்காலிகமாக இல்லாதொழித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 102ஆம் பிரிவைத் திருத்ததல்.*

***20***. முதன்மைச் சட்டவாக்கத்தின் 102ஆம் பிரிவு, அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில், ''பதினெட்டு வயதை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினேழு வயதை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 106ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***21***. முதன்மைச் சட்டவாக்கத்தின 106ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

ஏதேனும் தீர்வை தொடர்பில் காப்புறுதி யாளரின் பொறுப்பு.

"106. (1) ஏதேனும் தீர்வை தொடர்பில்-

(அ) வழக்கு நடவடிக்கை தொடங்குவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் அல்லது ஏழுநாட்களினுள், அத்தகைய தீர்வை எந்த வழக்கு நடவடிக்கையில் பதியப்பட்டதோ அந்த வழக்கு நடவடிக்கையிலான வழக்காள், காப்புறுதியாளருக்கு அத்தகைய வழக்கு நடவடிக்கைபற்றிய அறிவித்தலைக் கொடுத்திருந்தாலொழிய; அல்லது

(ஆ) மேன்முறையீடு முடிவுறாதிருக்கும் வரை அத்தகைய தீர்வையின் நிறைவேற்றம் நிறுத்திவைக்கப்படும் காலம் வரை,

105ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் காப்புறுதியாளரொருவரினால் பணத்தொகையெதுவும் செலுத்தப்படற்பாலதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அறிவித்தல் ஒவ்வொன்றும்–

(அ) அத்தகைய வழக்குநடவடிக்கை எந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதோ அந்நீதிமன்றத்தின பெயரைக்குறித்துரைத்தல் வேண்டும்;

(ஆ) வழக்குநடவடிக்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட இலக்கத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(இ) வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவர்களின் பெயர்களைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஈ) எந்தக் காப்புறுதிப்பத்திரம் தொடர்பில் வழக்கு நடவடிக்கை தொடுக்கப்படுகின்றதோ அந்தக்காப்புறுதிப்பத்திரத்தின் இலக்கத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(உ) வழக்குநடவடிக்கையின் தன்மையைக் குறித்துரைத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஊ) அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்படவேண்டியவொரு தேதிக்கு முன்னர் பிராதுக்கு மறுமொழியிறுக்கும்படி காப்புறுதியாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் அறிவித்தலும், வழக்குநடவடிக்கையில் கோப்பிடப்பட்ட பிரதியின் பிரதியொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய அறிவித்தல் எந்தக் காப்புறுதியாளருக்குக் கொடுக்கப்படுகின்றதோ அக்காப்புறுதியாளர், அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கான திறத்தவராக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வழக்குநடவடிக்கையில் எதிர் வாதிடுவதற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 112அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 112ஆம் பிரிவை உடனடுத்துப்பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 112அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"காப்பறுதிச் சான்றிதழைக் கைமாற்றுதல்.*

112அ. (1) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எவ்வாளின்சார்பில் காப்பறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாள், அத்தகைய காப்புறுதி எந்த மோட்டார் வாகனம் தொடர்பில் எடுக்கப்பட்டதோ அந்த மோட்டார் வாகனத்தின் சொத்தாண்மையை, அதுதொடர்பான காப்புறுதிப்பத்திரத்துடன் சேர்த்து இன்னோராளுக்குக் கைமாற்றுமிடத்து, காப்புறுதிச் சான்றிதழும் சான்றிதழில் விவரிக்கப்பட்ட காப்புறுதிப்பத்திரமும். மோட்டார் வாகனமானது எவ்வாளுக்குக் கைமாற்றப்படுகின்றதோ அவ்வாளின் பெயரில் அது கைமாற்றப்பட்ட தேதியிலிருந்து கைமாற்றப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*விளக்கம்* - ஐயங்களை அகற்றுவதற்காக, அத்தகைய கருதப்பட்ட கைமாற்றம், சொல்லப்பட்ட காப்புறுதிச் சான்றிதழினதும் காப்புறுதிப்பத்திரத்தினதும் உரிமைகளையும் பொறுப்புக்களையும் கைமாறுதலை உள்ளடக்குதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

(2) கைமாற்றம் பெறுபவர், காப்புறுதிச் சான்றிதழில் கைமாற்றம் பற்றிய நிகழ்வு தொடர்பாக அவசியமான மாற்றங்களைச் செய் வதற்காகக் காப்புறுதியாளருக்கு, விதித்துரைக் கப்பட்ட படிவத்தில் கைமாற்றற்றேதியிலிருந்து நாற்பத்துநான்கு நாட்களினுள் விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன், காப்புறுதியாளர், காப்புறுதிக் கைமாற்றம் தொடர்பாகக் காப்புறுதிச் சான்றித ழிலும் காப்புறுதிப்பத்திரத்திலும் அவசியமான மாற்றங்களைச் செய்தலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

“மோட்டார் வாகனங் களுக்கான சாரதி உரிமங்களை வகுப்பாக்கஞ் செய்தல்.

122. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மோட்டார் வாகனங்கள் இப்பிரிவுக்கான அட்டவணையின் நிரைகள் 1, 2 மற்றும் 5 என்ப வற்றிற் குறித்துரைக்கப்பட்ட வகுப்புகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிரைகள் 1,2 மற்றும் 5 என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்ட வகுப்புகளுக்கான உரிமமொன்று, இதன் கண்ணுள்ள ஜ.எஸ்.ஓ.நியம இல. ஜ.எஸ்.ஓ./ரீஈசீ/ எவ்டிஜஎஸ்-18013-1-2005(ஈ) என்பதில் வரை விலக்கணங் கூறப்பட்டவாறு நிரைகள் 1,2, 3 மற்றும் 5 என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்ட ஒரு வகுப்பினதான மோட்டார்வாகனத்தை ஓட்டுவ தற்கு அதனை வைத்திருப்பவருக்கு அதிகாரமளிப் பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறி ருப்பினும், அமைச்சர் விதிவிலக்கான சூழ்நிலை களில், (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட உரிமமொன்று தவிர்ந்த சாரதி உரிமமொன்று, அத்தகைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட ஒரு வகுப்பினதான மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதற்கு அதனை வைத்திருப்பவருக்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் எனும் பயன்பட ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

**அட்டவணை**

| விடயம் | நிரல் 1<br>விவரணம் | நிரல் 2<br>புதிய வகுப்புகள் | நிரல் 3<br>ஏனைய வகுப்புகளுக்கான செல்லுபடியாந்தன்மை | நிரல் 4<br>ஓவிய எழுத்து | நிரல் 5<br>தற்போதைய வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | (i) மோட்டார் சைக்கிள்கள் அவற்றின் என்ஜின் ஆற்றல் 100சீசீ யை விஞ்சுகின்ற மோட்டார் சைக்கிள்கள் | அ | அ1,எ1 | | ஈ |
| | (ii) பாரமற்ற மோட்டார் சைக்கிள்கள் அவற்றின் என்ஜின் ஆற்றல் 100சீசீ யை விஞ்சாத மோட்டார் சைக்கிள்கள் | அ1 | எ1 | | ஈ |
| 2 | இரு நோக்க மோட்டார் வாகனமும் அதன் முழுமொத்த வாகன எடை 3500 கிலோ கிராம்களை விஞ்சாததும் சாரதியின் ஆசனம்உட்பட 9 ஆசனங்களை விஞ்சாத ஆசனக் கொள்ளளவை யுடையதும் ஆகக் கூடிய அதிகாரமளிக் கப்பட்ட வெற்று எடை 750 கிலோ கிராம் களை விஞ்சாத இழுவை வண்டியுடன் இணைக்கப்படக்கூடியது; இவ்வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் ஒரு நோயாளர் வண்டியை யும் உள்ளடக்கும். எல்லாக் கார்களும் சாரரியின் ஆசனம் உட்பட 9 ஆசனங் களை விஞ்சாததும் | ஆ | எ1 | | இ, இ1 |

| விடயம் | நிரல் 1 விவரணம் | நிரல் 2 புதிய வகுப்புகள் | நிரல் 3 ஏனைய வகுப்புகளுக்கான செல்லுபடியாந்தன்மை | நிரல் 4 ஓவிய எழுத்து | நிரல் 5 தற்போதைய வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 3 | மோட்டார் முச்சக்கரவண்டி/ மோட்டார் முச்சக்கர வான். அதன் வெற்று எடை 500 கிலோ கிராம்களை விஞ்சாததும் முழுமொத்த வாகன எடை 1000 கிலோ கிராம்களை விஞ்சாததுமான மோட்டார் முச்சக்கர வண்டி அல்லது வான் ; இவ்வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள், நோயாளர் வண்டியொன்றையும் உள்ளடக்கும். | ஆ1 | எ1 | | உ, ஊ |
| 4 | (i) மோட்டார் லொறி அதன் முழுமொத்த வாகன எடை 17,000 கிலோ கிராம்களுக:கு அதிகமாகவுள்ள மோட்டார் லொறி ; 750 கிலோ கிராம்களை விஞ்சாத ஆகக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடையை யுடைய இழுவை வண்டியுடன் இணைக்கப்படக் கூடியது. | இ | இ1, எ1, ஆ, ஆ1, ஒ, எ | | ஆ |

| விடயம் | நிரல் 1<br>விவரணம் | நிரல் 2<br>புதிய வகுப்புகள் | நிரல் 3<br>ஏனைய வகுப்புகளுக்கான செல்லுபடியாந்தன்மை | நிரல் 4<br>ஓவிய எழுத்து | நிரல் 5<br>தற்போதைய வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | (ii) பாரமற்ற மோட்டார் லொறி அதன் முழுமொத்த வாகன எடை 3,500 கிலோ கிராம்களை விஞ்சுகின்றதும் 17,000 கிலோ கிராம்களை விஞ்சாததுமான மோட்டார் லொறி ; இவ்வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள், 750 கிலோ கிராம்களை விஞ்சாத ஆகக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடையையுடைய இழுவைவண்டியுடன் இணைக்கப்படலாம்; இவ்வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனம், ஒரு மோட்டார் பிணியாளர் வண்டியையும் மோட்டார் பிணவண்டியையும் உள்ளடக்கும். | இ1 | எ, எ1, ஆ, ஆ1 | | ஆ |
| 5 | (i) பாரமான மோட்டார் லொறி தொடுத்த வாகனங்களும் அவற்றின் இழுவை வண்டியும் (வண்டிகளும்) உட்பட மோட்டார் லொறியினதும் இழுவை வண்டியினதும் | இஉ | இ, இ1, ஆ, ஆ1, எ, எ1, ஓ | | ஆ |

| விடயம் | நிரல் 1<br>விவரணம் | நிரல் 2<br>புதிய வகுப்பு கள் | நிரல் 3<br>ஏனைய வகுப்புக ளுக்கான செல்லுபடி யாந்தன்மை | நிரல் 4<br>ஓவிய எழுத்து | நிரல் 5<br>தற்போதைய வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | (வண்டிகளினதும்) இணைப்பு ; இவற்றில் இழுவைவண்டியின் ஆகக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடை 750 கிலோ கிராம்களை விஞ்சுவதுடன் முழுமொத்த வாகன எடை 3,500 கிலோ கிராம்களையும் விஞ்சுகின்றது. | | | | |
| 6. | (i) மோட்டார் கோச்சு சாரதியின் ஆசனத்துடன் சேர்த்து 33 ஆசனங்களை விஞ்சுகின்ற மோட்டார் கோச்சு ; இவ்வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள், 750 கிலோ கிராம்களை விஞ்சாத ஆகக்கூடிய அதிகாரமளிக் கப்பட்ட வெற்று எடையையுடைய இழுவை வண்டியுடன் இணைக்கப்படலாம். | ஈ | ஈ1, இ, இ1, ஆ, ஆ1, எ எ1,ஒ | | அ |
| | (ii) பாரமற்ற மோட்டார் கோச்சு ஆட்களை ஏற்றிச்செல்வதற்காகப் பயன்படுத்தப் படுகின்றவையும், சாரதியின் ஆசனத்துடன் | ஈ1 | இ1, ஆ, ஆ1, எ, எ1 | | அ1 |

| *விடயம்* | *நிரல் 1* *விவரணம்* | *நிரல் 2* *புதிய வகுப்புகள்* | *நிரல் 3* *ஏனைய வகுப்புகளுக்கான செல்லுபடியாந்தன்மை* | *நிரல் 4* *ஓவிய எழுத்து* | *நிரல் 5* *தற்போதைய வகுப்பு* |
|---|---|---|---|---|---|
| | சேர்த்து 9 ஆசனங்களுக்கு குறையாததும் 33 ஆசனங்களை விஞ்சாதவற்றையும் கொண்டுள்ள மோட்டார் வாகனங்கள் ; இவ்வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள், 750 கிலோ கிராம்களை விஞ்சாத ஆகக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடையையுடைய இழுவைவண்டியுடன் இணைக்கப்படலாம். | | | | |
| 7 | பாரமான மோட்டார் கோச்சு சாரதியின் ஆசனத்துடன் சேர்த்து 33 ஆசனங்களை விஞ்சுகின்ற மோட்டார் கோச்சியினதும் அத்துடன் 750 கிலோ கிராம்களை விஞ்சாத ஆகக்கூடிய அதிகாரமளிக்கப் பட்ட வெற்று எடையையுடைய அதன் இழுவை வண்டியினதும் இணைப்பு அல்லது இரு மோட்டார் கோச்சுகளின் இணைப்பு. | ஈஉ | ஈ, ஈ1, இஉ, இ, இ1, ஆ, ஆ1, எ, எ1, ஒ | | |

| விடயம் | நிரல் 1 விவரணம் | நிரல் 2 புதிய வகுப்புகள் | நிரல் 3 ஏனைய வகுப்புகளுக்கான செல்லுபடியாந்தன்மை | நிரல் 4 ஓவிய எழுத்து | நிரல் 5 தற்போதைய வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 8 | நிலவாகனம் இழுவைவண்டியுடன் அல்லது இழுவை வண்டியின்றி கமத்தொழில்சார் நில வாகனம் | எ | எ 1 | | எ, எ 1 |
| 9 | கை உழவுயந்திரங்கள் இழுவை வண்டியுடன் இரு சில்லு உழவுயந்திரம் | எ 1 | | | |
| 10 | விசேட நோக்க வாகனம் நிர்மாண சாதனங்களுடனும் பண்டங்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்குமான சாதனங்களுடனும் அமைக்கப்பட்ட மோட்டார் லொறிகள், பாரமற்ற மோட்டார் லொறிகள் மற்றும் பாரமான மோட்டார் லொறிகள் என்பன நீங்கலாக, நிர்மாணம், ஏற்றுதல் முதலியவற்றுக்குப் பயன்படுத்தப்படும் வாகனம். | ஒ | எ 1 | | ஆ எ |

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 122அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"சாரதி உரிமங்களின் வகுப்புகள்.*

122அ. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விடயத்துக்கேற்ப, சாரதி உரிமங்கள் அல்லது அனுமதிப்பத்திரங்கள் -

(அ) 122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3, 8 மற்றும் 9 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களின் விடயத்தில் பின்வரும் வகுப்புகளினவாதல் வேண்டும் :-

(i) பழகுநர் அனுமதிப்பத்திரம் ; அத்துடன்

(ii) பாரமற்ற வாகனங்களுக்கான கிரமமான சாரதி உரிமம்.

(ஆ) 122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் (4)(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புக்களைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களின் விடயத்தில் பின்வரும் வகுப்புகளினவாதல் வேண்டும் :-

(i) பழகுநர் அனுமதிப்பத்திரம் ;

(ii) பாரமான வாகனங்களுக்கான கிரமமான சாரதி உரிமம்.

(2) நூற்றியிருபத்திரெண்டாம் பிரிவுக்கான அட்டவணையின் 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புக்களைச் சேர்ந்த வாகனங்ளுக்காக இச்சட்டத்தின்கீழ் சாரதி உரிமமொன்றைப் பெறுவதற்கு விரும்புகின்ற ஆளொவ்வொருவரும், அதற்கென விண்ணப்பிக்கின்ற நேரத்தில் அத்தகைய அட்டவணையின் 2, 3 அல்லது 8 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் மோட்டார் வாகனங்களுக்கான கிரமமான சாரதி உரிமமொன்றை உடையவராதல் வேண்டும்.".

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “பயனுள்ள சாரதி உரிமமொன்றை” என்னும் சொற்கள் அப்பிரிவில் தோன்றும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக “தகுதிகாண்நிலைக் காலப்பகுதியொன்றுக் கமைய, கிரமமான சாரதி உரிமம் மற்றும் கிரமமான சாரதி உரிமம்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) இரண்டாம் உட்பிரிவையும் அதற்கான காப்பு வாசகத்தையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

“(2) (அ) சாரதி உரிமமொன்றை வைத்திராதவரும், ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுவதற்குப் பழக விரும்புபவரும் அல்லது அனுமதிக்கப்பட விரும்புப வருமான ஆளொருவர் -

(i) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும் ; அத்துடன்

(ii) விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் விதித் துரைக்கப்பட்ட ஆவணங்களுடனும் சேர்த்தும்,

பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றுக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும்.

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியானவர், விண்ணப்ப காரர் ஒரு பழகுநர் அனுமதிப்பத்திரம் அளிக்கப்படுவதற்குத் தகுதிவாய்ந்தவராகவுள்ளாராவென்பதை நிச்சயிக்கும் நோக்கத் துக்காக விடயத்திற்கேற்றவாறு எழுத்துப் பரீட்சை அல்லது வாய் மொழிப் பரீட்சையொன்றை நடாத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பகாரர் அத்தகைய பரீட்சையில் தேறினால், அத்துடன் இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறித்துரைக் கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக ஆணையாளர் தலைமை யதிபதியைத் திருப்திப்படுத்தினால், பழகுநர் அனுமதிப்பத்திர மொன்றை அவருக்கு வழங்குதலும் வேண்டும்.

(இ) பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்ப காரர் ஒவ்வொருவரும் -

(i) பாரமற்ற வாகனங்களை ஓட்டுவதற்குப் பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில், தாம் பதினேழு வயதைப் பூர்த்திசெய்துள்ளாரென்றும், அத்துடன் பாரமான வாகனங்களை ஓட்டுவதற்குப் பழகுநர் அனுமதிப் பத்திரமொன்றுக்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில், தாம் இருபது வயதைப் பூர்த்திசெய் துள்ளாரென்றும் ; அத்துடன்

(ii) விண்ணப்பமானது எவ்வகுப்பினதான அல்லது எவ்வகுப்பினவான வாகனங்கள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அவ்வாகனங்களை ஓட்டுவதற் குத் தாம் உடல்ரீதியாகத் தகுதியுள்ளவரென்றும்,

ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தல் வேண்டும்.

(ஈ) பந்தி (ஆ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட எழுத்துப் பரீட்சையில் தேறுகின்ற ஆளொவ்வொருவரும்,

(i) இப்பிரிவின் அடுத்துப்பின்வரும் ஏற்பாடுகளுக் கிணங்க ஒரு மோட்டார் வாகனத்தில் பொருத்தப் பட்டுப் பேணப்படவேண்டிய "எல்" தகடுகளுக்காக, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலும், விதித்துரைக் கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தும், ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும் ;

(ii) 99 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் காப்புறுதி மேவுகையொன்றைப் பெறுதல் வேண்டும்.

*(உ) ஓர் "எல்" தகட்டை வைத்திருப்பவர், ஓர் "எல்" தகட்டை வைத்திருப்பவராகவிராத ஒரு மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரரை அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள வேறெவரேனுமாளை, பழகுகின்ற நோக்கத்துக்காக அத்தகட்டைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தலோ அல்லது பயன்படுத்தச் செய்தலோ ஆகாது :*

*ஆயின் –*

(i) *பழகுநர் அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரும் அவரை அறிவுறுத்தும் அவரை அறிவுறுத்தும் ஆளும் தவிர்ந்த ஆளெவரும், அத்தகைய பழகுநரை அவ்வாறு அறிவுறுத்தும் ஆள் பதிவுசெய்யப்பட்ட சாரதி அறிவுறுத்துநராகவிருக்கின்றவிடத்து, அத்தகைய மோட்டார் வாகனத்தில் பிரயாணஞ்செய்தலாகாது ; இவ்விடயத்தில், 122 ஆம் பிரிவிற்கான அட்ட வணையின் விடயம் 2 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மோட்டார் வாகனத்தில் ஏற்றிச்செல்லப்படும் பழகுநர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை மூன்று பேரையும், 122 ஆம் பிரிவிற் கான அட்டவணையின் 6*(i), *6*(ii) *மற்றும் 7 ஆம் விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களில் ஆறுபேரையும் விஞ்சுதலாகாது ;*

(ii) *அவ்வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியானதாகவுள்ள அத்துடன் ஆகக்குறைந் தது இருபத்தியொரு வயதைக்கொண்டவராக இருக்கவேண்டிய கிரமமான சாரதி உரிமமொன்றை வைத்திருப்பவர், அவரை அறிவுறுத்துகின்ற*

நோக்கத்துக்காக அவருடன் செல்லுதல் வேண்டு மென்பதுடன், அவரது பக்கத்தில் அமர்ந்திருத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இதன்கண் அடங்கியுள்ள தேவைப்பாடுகள் மோட்டார் சைக்கிள்களுக்கும் உழவுயந்திரங்களுக்கும் ஏற்புடையனவாதலாகாது ; அத்துடன்

(iii) வாகனத்தின் மீது பொருத்தப்பட்ட ஒவ்வோர் அடையாளத்தகட்டின் மேலும், அத்தகைய ஏதேனும் அடையாளத் தகட்டை மறைக்காத அத்தகையவொரு முறையில், சிவப்புநிறத்தில் அதன் மீது பூச்சிடப் பட்டதும், "எல்" என்ற எழுத்தைக் கொண்டதுமான ஒரு வெண்பலகை அல்லது தகடு கொண்டுசெல்லப் படுதல் வேண்டும்; அத்தகைய எழுத்தின் பரிமாணங் கள் அடையாளத் தகட்டின் மீதான வேறுபிரித்துக் காட்டும் இலக்கத்தின் பாகமாக அமைகின்ற ஏதேனும் எழுத்தின் நேரொத்த பரிமாணங்களின் ஆகக்குறைந் தது இருமடங்குகளாகவேனும் இருத்தல் வேண் டும்.

(ஊ) ஒரு பழகுநர் அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர், அத்தகைய பழகுநர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன்மேல், அத்துடன் 125 ஆம் பிரிவிற்றரப்பட்டுள்ள தேவைப்பாடுகளை அவர் திருப்திப்படுத்தியிருப்பின், தமது பழகுநர் அனுமதிப் பத்திரத்தைக் கிரமமான சாரதி உரிமமொன்றாக மாற்றுவதற்கு, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத் துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ் செய்யலாம்.

(ஏ) பின்வருவனவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம் :-

(i) பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றை வழங்கு வதற்கான வேறேதேனும் தேவைப்பாடு அல்லது நிபந்தனை ; அத்துடன்

(ii) ''எல்'' தகட்டின் வடிவம், அளவு, நிறம், வெளிக்காட்டுகை விபரங்கள் மற்றும் வழங்குகைக் கான நடவடிக்கைமுறை.

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (3) ஆம், (4) ஆம், (5) ஆம், (6) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூல மும் :-

"(3) (அ) கிரமமான சாரதி உரிமமொன்று, வழங்குகைத் தேதியிலிருந்து ஆகக்குறைந்தது ஓராண்டுக்கான தகுதிகாண்நிலைக் காலப் பகுதிக்கும், வழங்குகைத் தேதியிலிருந்து ஆகக் கூடியது இரண்டாண்டுகளுக்கான தகுதிகாண் நிலைக் காலப்பகுதிக்கும் அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) கிரமமான சாரதி உரிமமொன்றை வைத் திருப்பவர், ஓராண்டினதான தகுதிகாண் நிலைக் காலப்பகுதியினுள் 133அ என்னும் பிரிவின்கீழ் அவரது சாரதி, உரிமத்தின் இல்லாதாக்குகையை அல்லது இடை நிறுத்துகையை விளைவிக்கும் விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான சாரதி சீராக்கற் புள்ளிகளை அல்லது அத்தகைய விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலான பாதகமான புள்ளிகளைச் சேர்த்துள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி தகுதிகாண்நிலைக் காலப்பகுதியை மேலும் ஓராண்டுக் காலப்பகுதிக்கு நீடித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) என்பதன்கீழ் கிரமமான சாரதி உரிமமொன்றை வைத்திருக்கின்றவர், ஓராண்டினதான நீடித்த தகுதிகாண்நிலைக் காலப் பகுதியின்போது 133அ என்னும் பிரிவின்கீழ் ஒரு சாரதி உரிமத்தின் இடைநிறுத்துகையை அல்லது இலலாதாக்குகையை விளைவிக்கும் விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினவான சாரதி சீராக்கற் புள்ளிகளை அல்லது அத்தகைய விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலான பாதகமான புள்ளிகளை சேர்த்துள்ளாரென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படின், அவர் அத்தகைய தகுதிகாண்நிலை உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டும்.

(4) (அ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு சாரதி உரிமமும், அது, தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைந்த கிரமமான சாரதி உரிமமொன்றாக அல்லது கிரமமான சாரதி உரிமமாக இருப்பதனைப் பொருட்படுத்தாது, அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்காகச் செல்லுபடியான சாரதி உரிமமொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) நூற்றியிருபத்திரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீசெய்யப்பட்ட அத்தகைய ஒவ்வோர் உரிமத்தினதும் அல்லது அனுமதிப் பத்திரத்தினதும் வழங்குகை தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அறவிடப்பட்ட எல்லாக் கட்டணங்களும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செல்லுபடியான முறையில் அறவிடப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (அ) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுதன்மேல், மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஆறாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக் கும், இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல் ஆறாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டம்.

(ஆ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நான்காயிரம் ரூபாவுக்குக் குறையாததும் எட்டாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின் மேல், எட்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பன்னிரெண்டாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(6) (அ) 2 ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், 224 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(ஆ) 2 ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், 224 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(7) மூன்றாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், 224 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவை மீளவிடுதல்.*

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"பழகுநரின் அனுமதிப்பத்திரமொன்றுக்கும் கிரமமான சாரதி உரிமத்திற்குமான விண்ணப்பம்.*

124. (1) பழகுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும் :-

(அ) விண்ணப்பமானது எந்த வகுப்பினதான அல்லது வகுப்பினதான வாகனங்கள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த வகுப்பினதான வாகனங்களை ஓட்டுவதற்கு விண்ணப்பகாரர் உடல்ரீதியாகத் தகுதியுள்ளவரென்பதை சான்றுறுதிப்படுத்துகின்ற பொருள்பட, 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியப்போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திடமிருந்தான அல்லது (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவரும் அத்துடன் தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்டவருமான ஒரு மருத்துவத் தொழிலரிடமிருந்தானதுமான மருத்துவச் சான்றிதழொன்று ;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அளவினதும், விண்ணப் பத்தைச் செய்கின்ற தேதிக்கு முன்னர் ஆறுமாதங்களுக்கு முந்தாமல் எடுக்கப் பட்டதுமான விண்ணப்பகாரரின் நிழற்படமொன்றின் இரு பிரதிகள் ;

(ஈ) அவரது ஓட்டுகை, பொதுமக்களுக்கு ஆபத்து மூலமாகவிருப்பதனை விளை விக்கும் சாத்தியமேற்படுத்தக்கூடிய ஏதேனும் நோயினால் அல்லது உளரீதி யான அல்லது உடல்ரீதியான இயலாமை யினால் அவர் பீடிக்கப்பட்டுள்ளாரா அல்லாராவென்பதுபற்றி விதித்துரைக் கப்பட்ட படிவத்தில் விண்ணப்பகாரரி னால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை.

(2) நூற்றியிருபத்திரண்டாம் பிரிவிற்கான அட்டவணையின் 1 (i), 1 (ii), 2, 3, 8 மற்றும் 9 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புக்க ளைச் சேர்ந்த ஏதேனும் வகுப்பினவையான அல்லது ஒவ்வொரு வகுப்பினவையுமான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான சாரதி உரிமமொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப் பகாரரும் –

(அ) தாம் பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்துள்ளாரெனவும் ; அத்துடன்

(ஆ) தாம் ஆணையாளர் தலைமையதிபதியிட மிருந்து ‘எல்’ தகட்டைப் பெறற் தேதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்காவது சாரதிப் பழகுநராக இருந்துள்ளாரெனவும்,

ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தல் வேண்டும்.

(3) நூற்றியிருபத்திரெண்டாம் பிரிவிற்கான அட்டவணையின் 4 (i), 4 (ii), 5, 6( i), 6 (ii), 7 மற்றும் 10ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வகுப்பினவையான அல்லது ஒவ்வொரு வகுப்பினவையுமான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான சாரதி உரிமமொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பகாரரும் –

(அ) தாம் இருபத்தியொரு வயதைப் பூர்த்தி செய்துள்ளாரெனவும் ;

(ஆ) தாம் ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து 'எல்' தகடுகளைப் பெற்ற தேதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்காவது விண்ணப்பங்கள் எந்த வகுப்பினவான வாகனங்களுக்காகச் செய்யப்படுகின்றனவோ அந்த வகுப்பினவான வாகனங்களின் சாரதிப் பழகுநராக இருந்துள்ளாரெனவும் ;

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறாக மோட்டார் வாகனங்களின் பொறிமுறை பற்றிப் போதிய செயல்முறை அறிவை உடையவரெனவும் ;

(ஈ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கல்விசார் தகைமைகளையும் ஏனைய தகைமைகளையும் உடையவரெனவும் ;

(உ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உடல்ரீதியான தேவைப்பாடுகளை உடையவரெனவும் ;

(ஊ) இரண்டாண்டுகளுக்குக் குறையாத காலப் பகுதிக்கு, 122 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான அட்டவணையின் 2

*மற்றும் 3 ஆம் விடயங்களில் குறித்துரைக் கப்பட்ட வகுப்பினதான அல்லது வகுப்பி னவான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான கிரமமான சாரதி உரிம மொன்றை உடைமையில் வைத்திருந்துள் ளாரெனவும்,*

*ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தல் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 124ஆ, 124இ, மற்றும் 124ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**27**. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 124அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றனவென்பதுடன், இவை, அச்சட்டவாக்கத்தின் 124ஆ, 124இ மற்றும் 124ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-*

*"மோட்டார் வாகன மேன்முறையீட்டுச் சபை.*

*124ஆ. (1) (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்), தமது நற்கீர்த்திக்கான ஏற்றங்காரம் பெற்றுள்ள ஆட்களாகவிருக்கவேண்டிய பின்வரும் உறுப் பினர்களைக் கொண்டதுமான மோட்டார் வாகன மேன்முறையீட்டுச் சபையொன்றிருத்தல் வேண்டும்:-*

*(அ) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சின் அமைச்சுச் செயலாளரின் நியமித்தரொருவர் ;*

*(ஆ) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச் சுச் செயலாளரினால் பெயர் குறித்துநியமிக் கப்பட்ட ஓய்வு பெற்ற மோட்டார் வாகனப் பரிசோதகரொருவர் ; அத்துடன்*

*(இ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி யினால் பெயர்குறித்து நியமிக்கப்படட பொலிசுத் திணைக்களத்திலிருந்தான ஆளொருவர்.*

*(2) பிரிவு 123 இன் (2) ஆம் உட்பிரிவில் மற்றும் பிரிவு 124 இல் தரப்பட்டுள்ள தேவைப்பாடு களுக்கு இணங்கியுள்ளவரும், தமக்குச் சாரதி*

உரிமமொன்றை வழங்க மறுக்கின்ற ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபினால் இன்னலுறு கின்றவருமான சாரதி உரிமமொன்றுக்கான விண்ணப்பாகாரரொருவர், அத்தகைய முடிபுக் கெதிராகச் சபைக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம்.

(3) சபையானது, மேன்முறையீடு செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பதுநாட் காலப்பகுதியொன் றினுள், விண்ணப்பகாரருக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய மேன்முறை யீட்டின் மீதான அதன் முடிபைத் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமை யதிபதி அத்தகைய முடிபுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

மருத்துவக் குழு.

124இ. (1) அமைச்சரானவர் பின்வருவோரைக் கொண்டுள்ள மருத்துவக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும் :-

(அ) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர் ;

(ஆ) சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர் ;

(இ) குறிப்பிட்ட துறையில் விசேட கற்கைபெற்றுள்ளவரும், மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவருமான விசேட மருத்துவர்/ மருத்துவ அலுவலரொருவர் ; அத்துடன்

(ஈ) போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சிலிருந்தான பிரதிநிதியொருவர் :

ஆயின், அவ்வாறு நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது ஒருவராவது மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவத் தொழிலராக விருத்தல் வேண்டும்.

(2) மருத்துவக் குழுவின் கடமைகள், 124ஈ என்னும் பிரிவின்கீழ் மருத்துவத் தொழிலர்கள் அல்லது தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகம் மருத்துவச் சான்றிதழ்களை வழங்க மறுக்கின்றமையினால் இன்னலுறும் ஆட்களிட மிருந்தான மேன்முறையீடுகளைக் கேட்பதாதல் வேண்டும்.

(3) விண்ணப்பகாரரொருவரின் மருத்துவ நிலைமை தொடர்பாகப் பிழையானதாகவுள்ள அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட எவை யேனும் முக்கிய விபரங்கள் தொடர்பாகப் பிழை யானதாகவுள்ள மருத்துவச் சான்றிதழொன்றை வேண்டுமென்று வழங்குகின்ற மருத்துவத் தொழிலரொருவர், ஒரு மருத்துவச் சான்றிதழின் மோசடியான வழங்குகை என்ற தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக் குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ் சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய தொழிலர் இலங்கை மருத்துவப் பேரவைக்கு அறிக்கையிடப் படுதலும் வேண்டும்.

*மருத்துவக் குழுவுக்கான மேன் முறையீடுகள்.*

124ஈ. (1) மருத்துவச் சான்றிதழொன்றைத் தமக்கு வழங்குவதற்கு 124 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலரொருவரின் அல்லது தேசியப் போக்குவரத்து மருத்து நிறுவகத் தின் மறுப்பினால் இன்னலுறும் பழகுநர் அனும திப்பத்திரம் மற்றும் கிரமமான சாரதி உரிம மொன்றுக்கான விண்ணப்பகாரரொருவர், அத்த கைய மறுப்புக்கெதிராக 124இ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மருத்துவக் குழுவுக்கு மேன் முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) அத்தகைய மருத்துவக் குழு, ஏழுநாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள், (1) ஆம்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மருத்துவத் தொழிலரொரு

வரல்லாத பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழில ரொருவரினால் அத்தகைய விண்ணப்பகாரர் பரிசோதனை செய்யப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், சாரதி உரிமமொன்று வழங்கப்படுவதற்கு விண்ணப்பகாரர் தகுதி யுள்ளவரென அத்தகைய மருத்துவத் தொழிலர் சான்றுப்படுத்தினால் அவருக்கு மருத்துவச் சான்றிதழொன்றை வழங்குதலும் வேண்டும் ; அத் துடன் இலங்கை மருத்துவப் பேரவைக்கு அத்த கைய நிகழ்வை அறிக்கைசெய்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பாகமாகவமைதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாகமாகவமைதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய படிவத்திற் செய்யப்படும் ஏதேனும் புறக்குறிப்பு, அத்தகைய சாரதி உரிமத்தின்மீது செய்யப்பட்டுள்ள தாகக் கருதப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "திருப்திப்படின் வழங்கப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "திருப்திப்படின் வழங்கப்படுதலாகாது :

ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி பொது நலனுக்கு குந்தகமாகவுள்ளதென அவருக்குத் தோன்றும் சூழ்நிலைகளில் சாரதி உரிமமொன்றை வழங்க மறுக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அதன் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதி லாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(5) (அ) 122 ஆம் பிரிவிற்கான அட்டவணை யின் 1(i), 1 (ii), 2, 3, 8 மற்றும் 9 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பில் பதினெட்டு வயதை எய்திராத எவரேனுமாளுக்கும்; அத்துடன்

(ஆ) 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 4 (i), 4 (ii), 5, 6( i), 6 (ii), 7 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பில் இருபத்தியொரு வயதை எய்தியிராத எவரேனுமாளுக்கும்,

கிரமமான சாரதி உரிமமெதுவும் வழங்கப்படுதலாகாதென்பதுடன், அத்தகைய எவரேனுமாளுக்கு வழங்கப்படும் ஏதேனும் உரிமம் வலுவும் பயனெதுவும் உடையதாதலுமாகாது.".

**29**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) அமைச்சரினால் வேறுவகையாக விதித்துரைக்கப்பட்டாலொழியவும், 126அ என்னும் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளினதும் 126ஆ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமையவும்,-

(அ) 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 4 (i), 4 (ii), 5, 6( i), 6 (ii), 7 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த அல்லது ஒவ்வொரு வகுப்பினவையுமான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட ஒவ்வொரு கிரமமான சாரதி உரிமமும் அல்லது தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமமும் நான் காண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும் ;

(ஆ) 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1 (ii), 2, 3, 8 மற்றும் 9 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த அல்லது ஒவ்வொரு வகுப்பினவையுமான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட ஒவ்வொரு கிரமமான சாரதி உரிமமும் அல்லது தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமமும் எட்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்,".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(4) அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்பட்டுள்ளபோது அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ளபோது எந்நேரத்திலும் அல்லது அத்தகைய உரிமத்தின் செல்லுபடிக் காலப்பகுதி முடிவுற்றுள்ளவிடத்து ஒரு வீதியில் மோட்டார் வாகனமொன்றை ஓட்டுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(5) அமைச்சரானவர், 122 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங்களுக்காக இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சாரதி உரிமங்களின் செல்லுபடிக் காலப்பகுதியை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 126ஆ மற்றும் 126இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 126அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படு கின்றனவென்பதுடன், இவை, அச்சட்டவாக்கத்தின் 126ஆ மற்றும் 126இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"சாரதி உரிமங்களைப் புதுப்பித்தல்.*

126ஆ. (1) நூற்றியிருபத்தாறாம் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளினதும் 126அ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு சாரதி உரிமமும், அது எக்காலப் பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல், 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1 (ii), 2, 3, 8 மற்றும் 9 என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வகுப்பினவான மோட்டார் வாகனங்களின் விடயத் தில், ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொன்றும் எட்டாண்டுகளைக்கொண்ட மேலதிகக் காலப் பகுதிகளுக்காகவும், 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 4 (i), 4 (ii), 5, 6( i), 6 (ii), 7, மற்றும் 10 என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப் பட்ட வகுப்பினவான மோட்டார் வாகனங்களின் விடயத்தில், ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொன் றும் நான்காண்டுகளைக் கொண்ட மேலதிகக் காலப்பகுதிகளுக்காகவும் புதுப்பிக்கப்படலாம்.

(2) சாரதி உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வருவன வற்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும் :-

(அ) (i) 122 ஆம் பிரிவிற்கான அட்டவணை யின் 1(i), 1 (ii), 2, 3, 8 மற்றும் 9 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த மற்றும் (ஓ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப் பட்ட வகுப்பினதான அல்லது வகுப் பினவான வாகனங்களின் விடயத்தில், அத்தகைய விண்ணப்பம் எந்த வகுப் பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த வகுப் பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களை ஓட்டு வதற்கு விண்ணப்பகாரர் உடல்ரீதியா கத் தகுதியுள்ளவரென சான்றுறுதிப் படுத்துகின்ற 1997 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திடமிருந்து அல் லது (105 ஆம் அத்தியாயமான) பொருள்பட, மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வரும், தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் அதிகார மளிக்கப்பட்டவருமான அல்லது ஆணையாளர் தலைமையதிபதியி னால் அதிகாரமளிக்கப்பட்ட வருமான மருத்துவத் தொழிலரொருவரிடமிருந் தான மருத்துவச்சான்றிதழொன்று ; அத்துடன்

(ii) *122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 4 (i), 4 (ii), 5, 6(i), 6 (ii), 7 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங்களின் விடயத்தில், அத்தகைய விண்ணப்பம் எந்த வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்கு விண்ணப்பகாரர் உடல்ரீதியாக தகுதியானவரென சான்றுறுதிப்படுத்துகின்ற 1997ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திடமிருந்து அல்லது (105ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவரும், தேசியப் போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தினால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவத் தொழிலரொருவரினால் வழங்கப்பட்ட மருத்துவச்சான்றிதழ் ;*

(ஆ) *விதித்துரைக்கப்பட்ட கட்டணம் ; அத்துடன்*

(இ) *விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அளவினதானதும், விண்ணப்பத்தேதிக்கு முன்னர் ஆறுமாதங்களுக்கு முந்தாமல் எடுக்கப்பட்டதுமானவொரு நிழற்படத்தின் இருபிரதிகள்.*

(3) ஒரு சாரதி உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், தற்போது வலுவிலுள்ள உரிமமொன்று முடிவுறுவதற்கு முன்னதாக என்னோரத்திலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) சாரதி உரிமமொன்று எல்லா வகுப்பினவையுமான வாகனங்களுக்கும் செல்லுபடியானதெனக் கூறப்பட்டாலொழிய, 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 3 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்கு மட்டுமே செல்லுபடியாதல் வேண்டும்.";

(2) அதன் (2) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 128அ, மற்றும் 128ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 128அ மற்றும் 128ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"அவசரகாலச் சேவை வாகனங்களும் பொதுச்சேவை வாகனங்களும்.

128அ. (1) ஏதேனும் வகுப்பினதான அல்லது எவையேனும் வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான சாரதி உரிமமொன்றை வைத்திருக்கும் ஆளெவரும், ஏதேனும் அவசரகாலச்சேவை வாகனத்தை அல்லது பொதுச் சேவை வாகனத்தை, அவரது சாரதி உரிமத்தின் மீது ஆணையாளர் தலைமையதிபதியின் விசேட புறக்குறிப்பொன்றினால் அவ்வாறு செய்வதற்கு அவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் வீதியில் ஓட்டுதலாகாது.

(2) அவசரகாலச்சேவை வாகனமொன்றை அல்லது பொதுச்சேவை வாகனமொன்றை ஏதேனும் வீதியில் ஓட்டுவதற்கு விரும்புகின்ற ஆளொருவர், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

(3) விடயத்துக்கேற்ப, அவசரகாலச்சேவை வாகனமொன்றை அல்லது பொதுச்சேவை வாகனமொன்றை ஓட்டுவதற்கு உரிமம் வைத்திருப்பவரொருவருக்குத் தத்துவமளித்து சாரதி உரிமமொன்றின்மீதான புறக்குறிப்பொன்றுக்குத் தகைமைபெறுவதற்கான தேவைப்பாடுகள், தகைமைகள் மற்றும் நடாத்தப்படவேண்டிய பரீட்சைகள் என்பனவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.

விசேட நோக்க வாகனங்கள்.

128ஆ. (1) ஒரு விசேட நோக்க வாகனத்தை ஓட்டுவதற்கு விரும்புகின்ற ஆளொருவர், அந்நோக்கத்துக்கான உரிமத்துக்காக, விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் விசேட நோக்க வாகனமொன்றை ஓட்டுவதற்குத் தகைமையுள்ளவராவென்பதனைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகத் திருப்திப்படுத்தப்படவேண்டிய தேவைப்பாடுகள், அவசியமான தகைமைகள், நடாத்தப்படவேண்டிய பரீட்சைகள் என்பவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.".

***33.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

*(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "மூன்று மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்*

*(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "வழங்குகைக்கு ஏற்புடையனவாதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக "வழங்குகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.*

***34.*** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 132 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 132அ மற்றும் 132ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-*

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 132அ மற்றும் 132ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"சர்வதேசச் சாரதி அனுமதிப் பத்திரம்.*

*132அ. (1) இச்சட்டத்தின் VII ஆம் பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றை வைத்திருப்பவராகவுள்ளவரும், இலங்கையில் சாதாரணமாக வதிகின்றவருமான எவரேனுமாள், இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள முறையில் விண்ணப்பம் செய்வதன்மேல், ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் நவெம்பர் எட்டாம் தேதிய வீதிவாகனம் பற்றிய வியன்னா சமவாயத்தை ஏற்றுக்கொண்டுள்ள, ஒப்பந்தஞ்செய்துள்ள எவையேனும் அரசுகளுள் அல்லது ஆள்புலன்களுள், வெளி நாட்டில் இருக்கையில், மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கின்ற சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*(2) அத்தகைய ஏதேனும் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பமொன்று விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தலும் விதித்*

துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப் பப்படுதலும் வேண்டுமென்பதுடன், விதித்துரைக் கப்பட்ட கழகங்களிடம் சமர்ப்பிக்கவும்படலாம் ; அவை, அவ்விண்ணப்பத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திரமொன் றுக்கான விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், சொல் லப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் வழங்குகைக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதியினால் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட அதிகாரமளிக் கப்பட்ட அலுவலரொருவரினால் விசாரணை செய் யப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய சர்வதேசச் சாரதி அனுமதிப் பத்திரம், வழங்குகைத் தேதியிலிருந்து தொடங்கு கின்ற ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "விதித் துரைக்கப்பட்ட கழகம்" என்பது, இலங்கை மோட்டார் வாகனக் கழகம் என்று, அல்லது வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அமைச்சரினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான, சர்வதேச அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான ஒழுங்குபடுத்தும் குழுவாக வுள்ள, சுவிட்சலாந்து, ஜெனீவாவிலுள்ள எலாயன்ஸ் இன்டர்நேஷனல் டி டுவரிசம் என்பது டன் இணைந்துள்ளதுமான வேறேதேனும் கழகம் என்று பொருளாகும்.

*சர்வதேசச்சாரதி அனுமதிப் பத்திரத்தை அல்லது சான்றிதழை*

132ஆ. இலங்கைக்கு நல்லெண்ணவருகையாள ராகவுள்ளவரும், ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் நவெம்பர் எட்டாம் தேதிய வியன்னா சமவாயத்துக்கான ஒப்பந்தஞ்

இலங்கையில் ஏற்றங்கீகரித்தல்.

செய்துள்ள அரசுகளுள் அல்லது அதனை ஏற்றுக் கொண்டுள்ள அரசுகளுள் அல்லது ஆள்புலன் களுள் எவற்றினாலும் வழங்கப்பட்ட செல்லுபடி யான சர்வதேசச் சாரதி அனுமதிப்பத்திர மொன்றை வைத்திருப்பவருமான ஆளொருவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றை உடையவராகவும் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான அல்லது வகுப்பினவான வாகனங் களை ஓட்டுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வராகவும் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின்.-

(அ) அனுமதிப்பத்திரமானது, 1968 ஆம் ஆண்டின் வியன்னாச் சமவாயத்தின் 41 ஆம் உறுப்புரையின் கருத்துக்குட்பட செல்லுபடியானதாகவிருத்தல் வேண் டும் ;

(ஆ) இலங்கையில் ஓட்டும்பொழுது, அத்த கைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப் பவர் அதனைக் கொண்டுசெல்லுதலும், பொலிசு அலுவலரொருவரினால் அல்லது மோட்டார் வாகனப் பரிசோதக ரொருவரினால் கோரப்படுவதன்மீது அதனைச் சோதனைக்காகக் காண்பித் தலும் வேண்டும் ; அத்துடன்

(இ) 1968 ஆம் ஆண்டின் வியன்னாச் சமவாயத்தின் 41 ஆம் உறுப்புரையில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளை, எல்லா வகையிலும், வைத்திருப்பவர் நிறைவேற் றுதல் வேண்டும்.".

**35.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 133அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 133அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1) பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றையும் கிரமமான சாரதி உரிமமொன்றையும் வைத்திருப்பவர் இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும், நீதிமன்றம் அத்தகைய வைத்திருப்பவரின் சாரதி உரிமத்தை இடைநிறுத்தாதவிடத்தும் அல்லது இல்லாதாக்காதவிடத்தும், நீதிமன்றமானது, அத்தகைய சாரதி உரிமத்தை வைத்திருப்பவருக்கு எந்தத் தவறு தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதோ அந்தத் தவறு தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட சாரதி சீர்படுத்தற் புள்ளிகளின் அத்தகைய எண்ணிக்கையை-

(அ) அத்தகைய வைத்திருப்பவரின் பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றையும் கிரமமான சாரதி உரிமம் கிடைக்கக்கூடியதாகவிருப்பின், அத்தகைய உரிமத்தின்மீது பதிவீடுசெய்யலாம் அல்லது பதிவீடுசெய்விக்கலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய வைத்திருப்பவரின் பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றையும் கிரமமான சாரதி உரிமம் கிடைக்கக்கூடியதாகவிராதிருப்பின், அத்தகைய உரிமத்தின்மீது பதிவீடுசெய்யுமாறு ஆணையாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், நுண்சில்லு இல்லாமல் ஓர் அட்டைவடிவத்தில் வழங்கப்பட்ட பழகுநர் அனுமதிப்பத்திரமொன்றையும் கிரமமான சாரதி உரிமமொன்றின் விடயத்தில், அத்தகைய பதிவீடு, 125 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட புறக்குறிப்புப் படிவத்தில் செய்யப்படலாமென்பதுடன், அவ்வாறு செய்யப்பட்டவொரு பதிவீடு, இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய சாரதி உரிமத்தின்மீது செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை உடனடுத்து அதன் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுற வேண்டிய பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(1அ) ஒரு சாரதி உரிமத்தை வைத்திருப்பவர், பொலிசு அலுவலரொருவரினால் கண்டுபிடிக்கப்படுவதன் மேல், இப்பிரிவின் கீழ் அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பிரிவின் மீறுகைக்கான பொறுப்பை ஏற்குமிடத்தும், அத்தகைய மீறுகைக்கான குற்றவழக்குத் தொடுப்புக்குப் பதிலாக, அத்தவறு தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணக் கொடுப்பனவைச் செய்யுமிடத்தும், சாசன்ட் அல்லது அதற்கு மேற்பட்ட பதவிவரிசையிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலர், இவ்வுட்பிரிவின் கீழ் விதித்துரைக் கப்பட்ட படிவத்தில் அத்தகைய குற்றப்பணத்தைப் பதிவீடு செய்தல் வேண்டுமென்பதுடன், அதன்மீது செய்யப்பட்ட பதிவீட்டின் பிரதியொன்றை, பதிவேட்டு நோக்கத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பதிவேட்டைப் பெற்றதன் மேல், ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் கீழ் அத்தகைய தவறு தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட சாரதி சீர்படுத்தற் புள்ளிகளின் எண்ணிக்கையை அத்தகைய பழகுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் கிரமமான சாரதி உரிமத்தின் மீது பதிவீடு செய் தல் வேண்டும்.".

(3) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏனேும் சாரதி உரிமத்தின் மீது சாரதி சீர்படுத்தற் புள்ளிகளை ஏதேனும் நீதிமன்றம் பதிவீடு செய்யுமிடத்து அல்லது பதிவீடு செய்விக்குமிடத்து, நீதமன்றமானது, உரிமத்தின்மீது செய்யப்பட்ட பதிவீட்டின் பிரதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு தவறினதும் புரிகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.".

(4) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (5) ஆம் உட்பிரிவாகப் பயனுற வேண்டிய பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(5) தவறுகளைக் குறித்துரைப்பனவும் மற்றும் அத்தகைய தவறுகள் புரியப்படுவதன்மேல் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஒரு சாரதி உரிமத்தின் மீது பதிவீடு செய்யப்படவேண்டிய அல்லது குறித்தளிக்கப்படவேண்டிய சாரதி சீர்படுத்தற்புள்ளிகளின் எண்ணிக்கைகளை விதித்துரைக்கின்றனவுமான ஒழுங்குவிதிகளை அமைச்சர் ஆக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**36**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "அதன் செல்லுபடியாந்தன்மையை நீட்டிப்பதற்காக", என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதன் செல்லுபடியாந்தன்மையை நீட்டிப்பதற்காக, அதனை மாற்றீடு செய்வதற்காக, புதுப்பிப்பதற்காக அல்லது அதில் மேலதிகப் புறக்குறிப்பிடுவதற்காக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) ஓராம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (1அ), (1ஆ), (1இ) மற்றும் (1ஈ) என்னும் உட்பிரிவுகளாகப் பயனுற வேண்டிய பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) மோட்டார் வாகனமொன்றை ஓட்டுகையில், புறக்குறிப்புப் படிவமுட்பட, செல்லுபடியான தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றைக் கொண்டு செல்வதற்குத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல்,

இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(1ஆ) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி, செல்லுபடியான தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன் றுக்கமைய கிரமமான சாரதி உரிமம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றை உடைமையில் வைத்திருக்காத விடத்து, பொலிசு அலுவலரொருவர், அத்தகைய சாரதி, செல்லுபடியான தகுதிகாண் நிலைக் காலப்பகுதி யொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றைக் காண்பிக்கும்வரை அம்மோட்டார் வாகனத்தின் அத்தகைய சாரதியைத் தடுத்து வைக்கலாம். அத்தகைய சாரதி செல்லுபடியான பழகுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றை வைத்திருக்க வில்லையெனக் காணப்படுமிடத்து, அந்த மோட்டார் வாகனத்தின் அத்தகைய சாரதியும் சொந்தக்காரரும் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஆறாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆறுமாத காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரர், தாம் அறியாமல் அத்த கைய சாரதியினால் அவ்வாகனம் எடுத்துச் செல்லப் பட்டதென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுத லாகாது.

(1இ) (அ) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி பொலிசு அலுவலரொருவரினாற் கோரப்படுவதன் மீது, வேண்டுமென்று தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன் றுக்கமைய கிரமமான சாரதி உரிமம் மற்றும் கிரமமான சாரதி உரிமத்தை காண்பிக்க மறுக்குமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர், அத்தகைய சாரதியையும் வாகனத் தையும் கட்டுக்காப்பினுள் எடுக்கலாமென்பதுடன், புலனாய்வு நோக்கத்துக்காக அத்தகைய சாரதியை மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்தில் முன்னிறுத்த வும் வேண்டும்.

(ஆ) பொலிசு அலுவலரொருவரினாற் கோரப்படுவதன் மீது சாரதி உரிமத்தை அல்லது தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமத்தை காண்பிப்பதற்கு வேண்டுமென்று மறுக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதவானொருவர் முன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆளெவரும், தமது கிரமமான சாரதி உரிமம் அல்லது தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமத்தை சார்த்தப்பட்ட மீறுகை புரியப்பட்ட நேரத்தில், மேலதிகப் புறக்குறிப்பிடப்படுவதற்காக அல்லது அதன் செல்லுபடியாந்தன்மையை நீட்டிப்பதற்காக, அல்லது மாற்றீடு செய்யப்படுவதற்காக அல்லது அது புதுப்பிக்கப்படுவதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்ததென நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், இப்பிரிவின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

"(1ஈ) (அ) ஆளெவரும், மங்கலான உருக்குலைந்த சேதமடைந்த அல்லது தெளிவற்ற கிரமமான சாரதி உரிமமொன்றை அல்லது தகுதிகாண் நிலைக் காலப்பகுதியொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமத்தை கொண்டுசெல்பவராய் அல்லது உடைமையில் வைத்திருப்பவராய், மோட்டார் வாகனமொன்றை ஓட்டுதலாகாது.

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், 224 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "அவர் எந்த நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்படுகின்றாரோ அந்த நீதிமன்றம், அனுமதிப்பத்திரத்தின் மீது செய்யப்பட்ட புறக்குறிப்பின்மூலம் குறித்துரைக்கக்கூடியவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவர் எந்த நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்படுகின்றாரோ அந்த நீதிமன்றம், அனுமதிப்பத்திரத்தின் மீது செய்யப்பட்ட புறக்குறிப்பின்மூலம் குறித்துரைக்கப்படச் செய்விக்கக் கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் .".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**37**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(1அ) (அ) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தமை சம்பந்தமாக அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் மோட்டார் வாகனமொன்றை ஓட்டுதலுடன் தொடர்புபட்ட தவறொன்றைப் புரிந்தமை சம்பந்தமாக எவ்வாளின் அல்லது தகுதிகாண் நிலைக் காலப்பகுதி யொன்றுக்கமைய கிரமமான சாரதி உரிமம் மற்றும் கிரமமான சாரதி உரிமம் பொலிசாரின் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தின் கட்டுக்காப்பில் உள்ளதோ, அவ்வாள் எவரும், புதிய பழகுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றுக்காக அல்லது இணைப் பிரதி பழகுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் கிரமமான சாரதி உரிமமொன்றுக்காக விண்ணப்பித்தால், அவ்வாள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு பெறப்பட்ட ஏதேனும் உரிமம் சட்டத்தில் எப்பயனும் கொண்டிருத்தலுமாகாது.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பின் மீது, பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அவரது சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(இ) ஏதேனுமொரு நேரத்தில் எவரேனுமாள், ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட சாரதி உரிமங்களை தமது உடைமை யில் வைத்திருப்பின் , அல்லது சட்டமுறையான அதிகார மின்றி இன்னோராளின் சாரதி உரிமத்தை தமது உடைமை யில் வைத்திருப்பின், அவர் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படு வதன் மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பதினை யாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன் றுக்கும், அத்தகைய உரிமம் பறிமுதலாக்கப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 138அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**38.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 138 ஆம் பிரிவை உடனடுத்து, பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 138அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"வதிவிட மாற்றம் பற்றி ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்தல்.*

138அ. (1) சாரதி உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அவரது வதிவிட மற்றும் அஞ்சல் முகவரிகளிலான எவையேனும் மாற்றங்கள் பற்றி, அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், ஒன்றில் பதிவஞ்சல் மூலம் அல்லது நேரடியான ஒப்படைப்புமூலம் ஆணையார் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய மாற்றங்களை அந்தந்தப் புறக்குறிப்புப் படிவத்தில் புறக்குறிப்பிடுதலும், தோதான இடாப்புக்களில் பதிதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், 224 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.".

*VIIஅ என்னும் பாகத்துக்கான தலையங்கத்தை உட்புகுத்துதல்.*

**39.** முதன்மைச் சட்டவாக்கத்தின் VIIஅ என்னும் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய தலையங்கம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது:-

"சாரதி பாடசாலைகளுக்கும் அறிவுறுத்துநர்களுக்கும் உரிமமளித்தல்."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**40.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப் படுகின்றது :-

"(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல்,

ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அல்லத ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும், அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும், அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின் மேல் பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும், அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**41.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆ என்னும் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(2) ஏதேனும் வகுப்பினதான அறிவுறுத்துநர் உரிமமெதுவும், எவரேனும் ஆளுக்கு,-

(அ) 139ஆஆ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வகுப்பினதான அறிவுறுத்துநர் உரிமமொன்று வழங்கப்படுவதற்கு அவரைத் தகவுடையவராக்குவதற்கு அப்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான செல்லுபடியுள்ள சாரதி உரிமமொன்றை அவர் வைத்திருப்பவராகவிருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொருத்தமான தகைமைகளையும் அனுபவத்தையும் அவர் உடையவராகவிருந்தாலொழியவும்,

வழங்கப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 139ஆஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**42.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 139ஆஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"அறிவுறுத்துநர் உரிமமும் உதவி அறிவுறுத்துநர் உரிமமும்.*

139ஆஆ. (1) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்துநர் உரிமமொன்று மூன்று வகுப்புகளாக, அதாவது, வகுப்பு அ, வகுப்பு ஆ மற்றும் வகுப்பு இ என்பனவாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.

(2) உதவி அறுவுறுத்துநர் உரிமமொன்று வகுப்பு இ என்பதனைச் சேர்ந்ததாகவிருத்தல் வேண்டும்.

(3) அறிவுறுத்துநர் அல்லது உதவி அறிவுறுத்துநர் ஒருவர், விண்ணப்பஞ் செய்யப்படுவதற்கு நேர் முன்னர் ஆகக் குறைந்தது ஐந்தாண்டுக் காலப்பகுதிக்கு, 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1 (i), 1(ii), 2 மற்றும் 3 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியானதெனக் கூறப்பட்ட செல்லுபடியுள்ள கிரமமான உரிமமொன்றை வைத்திருந்தவராக அவர் இருந்திருப்பின், வகுப்பு இ வைச் சேர்ந்த உரிமமொன்று வழங்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய அறிவுறுத்துநர் உரிமம் அல்லது உதவி அறிவுறுத்துநர் உரிமம், 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3, 8 மற்றும் 9 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களின் பழகுநர்களை அறிவுறுத்துவதற்கு அவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(4) ஆளொருவர், விண்ணப்பஞ்செய்யப்படுவதற்கு நேர்முன்னர் ஆகக்குறைந்தது ஐந்தாண்டு காலப்பகுதிக்கு, 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i) மற்றும் 6 ஆம் விடயங்களில் குறித்து

ரைக்கப்படும் மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான தெனக் கூறப்பட்ட செல்லுபடியுள்ள கிரமமான உரிமமொன்றை அவர் வைத்திருந்தவ ராக இருந்திருப்பின், வகுப்பு ஆ வைச் சேர்ந்த அறிவுறுத்துநர் உரிமமொன்று வழங்கப்படு வதற்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய அறிவுறுத்துநர் உரிமம், 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3, 4(i), 4(ii), 6(i), 6(ii), 8, 9 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புக்களைச் சேர்ந்த பந்திகளிற் குறித்துரைக்கப் படுகின்றவாறான அத்தகைய வகுப்பினதான அல்லது வகுப்பினவான மோட்டார் வாகனங்களின் பழகுநர்களை அறிவுறுத்தவதற்கு அவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

(5) ஆளொவருவர் விண்ணப்பஞ்செய்யப்படு வதற்கு நேர்முன்னர் ஆகக்குறைந்தது ஐந்தாண்டுக் காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியான அவசர காலச்சேவை வாகன மற்றும் பொதுச் சேவை வாகனப் புறக்குறிப்புகளுடன் சேர்த்து, 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 5 மற்றும் 7 ஆம் விடயங்களில் குறித்துரைக்கப்படும் வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியானதெனக் கூறப்பட்ட செல்லுபடியுள்ள கிரமமான உரிமமொன்றை வைத்திருந்தவராக அவர் இருந்திருப்பின், வகுப்பு அ யைச் சேர்ந்த அறிவுறுத்துநர் உரிமமொன்று வழங்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும். அத்தகைய அறிவுறுத்துநர் உரிமம், 122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3, 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7, 8, 9 மற்றும் 10 ஆம் விடயங்களில் குறித் துரைக்கப்படும் வகுப்பைச் சேர்ந்த அத்தகைய மோட்டார் வாகனங்களின் பழகுநர்களை அறிவுறுத் துவதற்கு அவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139உ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**43.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139உ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "அல்லது" என்னும் சொல்லை விட்டுவிடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "மீறியுள்ளாரென" என்னும் சொல்லுக்குப் பதிலாக "மீறியுள்ளாரென; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்து, அதன் (ஈ) என்னும் பந்தியாகப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஈ) சாரதி சீர்ப்படுத்தற் புள்ளிகளின் குறித்துரைக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட புள்ளிகளை ஒன்று திரட்டியுள்ளாரென.";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "அமைச்சுச் செயலாளருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "அமைச்சுச் செயலாளருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்.

(4) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில், "அதனை உடனடியாக ஆணையாளரிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய இல்லாதாக்குகைத செய்யப்பட்டதிலிருந்து ஏழு நாட்களினுள் அத்தகைய உரிமத்தை ஆணையாளர் தலைமையதிபதியிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**44.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஊ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ங என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**45.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ங என்னும் பிரிவு, "சாரதி அறிவுறுத்துநர்" என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவ தன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**46.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:-

*"மோட்டார் வாகனங்களின் நிலைமை.*

145. (1) மோட்டார் வாகனமெதுவும்,-

(அ) அவ்வாகனத்திலுள்ள எவரேனுமாளுக்கு அல்லது வீதியைப் பயன்படுத்தும் எவரே னுமாளுக்கு ஆபத்தை, அசௌகரியத்தை, தொந்தரவை அல்லது தீங்கை;

(ஆ) வீதியிலுள்ள ஏதேனும் வாகனத்துக்கு ஆபத்தை; அல்லது

(இ) வீதியின் மீதுள்ள அல்லது அதற்கருகா மையிலுள்ள ஏதேனும் ஆதனத்துக்கான சேதத்தை,

விளைவிக்காத அல்லது விளைவிக்கும் சாத்தியங் கொண்டிராத அத்தகையவொரு நிலைமையில் எல்லாவகையிலும் இருந்தாலொழிய, வீதியில் பயன்படுத்தப்படுதலாகாது.

(2) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ஆம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்து, அத்தகைய சாரதியும், அத்தகைய மோட்டார்

வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுமிடத்தும், அதன் மூலம் எவரேனுமாளுக்கு ஊறுவிளைவிக்குமிடத்தும், அத்தகைய சாரதியும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும், அத்துடன் ஆறுமாதங்களைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ஆம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்தும், அதன்மூலம் எவரேனுமாளுக்குப் பாரதூரமான ஊறை விளைவிக்குமிடத்தும், அத்தகைய சாரதியும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் முப்பத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம்,

மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் ஆறுமாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ஆம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்தும், அதன்மூலம் எவரேனுமாளின் மரணத்தை விளை விக்குமிடத்தும், அத்தகைய சாரதியும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல், ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் எழுபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல் லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன் றுக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்த கைய குற்றப்பணம், மறியற்றணடனைக்கு ஆகிய இரண்டுக்கும், அத்துடன் பன்னிரெண்டு மாதங்க ளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடை நிறுத்தப்படுவதற்கும் ஆளாத லும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**47**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "வினைத்திறன் வாய்ந்தவொரு கருவியை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வினைத்திறன்வாய்ந்தவோர் எச்சரிக்கைக் கருவியை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை, அதன் (4) ஆம், (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(3) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவுகளாகப் பயனுற வேண்டிய பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்தவதன் மூலமும் :-

"(2) (அ) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறாயிருப்பினும், ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி, அத்தகைய வாகனத்தின் எச்சரிக்கைக் கருவியை, பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர, பயன்படுத்துதலோ, அல்லது பயன்படுத்துவித்தலோ அல்லது பயன்படுத்தப்படுவதற்கு அனுமதித்தலோ ஆகாது :-

(i) ஒரு விபத்தைத் தவிர்ப்பதற்காக வாகனப் போக்குவரத்து எச்சரிக்கையொன்றாக அவசியமாகும் போது; அல்லது

(ii) இன்னுமொரு வாகனத்தை முந்திச் செல்வதற்கான அவரது உட்கருத்தைச் சுட்டிகாட்டுவதற்காக ; ஆயின், எவ்வாறாயினும், இரவில், அத்தகைய சாரதி அத்தகைய நோக்கத்துக்காக முன் விளக்குகளைப் பளிச்சென ஒளிவிடச் செய்யலாமென்பதுடன், எச்சரிக்கைக் கருவியொன்றை ஒலிக்கவும் செய்யலாம்.

(3) தொடர்ச்சியாகவுள்ள வித்தியாசமான இசைகளை ஒலிக்கச் செய்கின்ற பல்வகைத் தொனிகளைக் கொண்ட இசைக் கொம்பொன்று, அல்லது காதுக்கு அருவருப்பான, காதைத் துளைக்கின்ற, உரத்த அல்லது திடுக்கிடச் செய்கின்ற சத்தத்தைத் தருகின்ற வேறேதேனும் ஒலியைத் தோற்றுவிக்கின்ற உபாயமொன்று பொருத்தப்பட்டுள்ளவொரு மோட்டார் வாகனத்தை ஆளெவரும் பயன்படுத்துதலாகாது:

ஆயின், அத்தகைய பல்வகைத்தொனிகளைக் கொண்ட இசைக்கொம்பொன்று அல்லது வேறு ஒலியைத் தோற்றுவிக்கும் உபாயமொன்று —

(அ) தீயணைப்புப் படையினரினால் பயன்படுத்தப்படும் வாகனமொன்றின் மீது ;

(ஆ) பொலிசு அல்லது ஆயுதந்தாங்கிய படைச் சேவைகளின் உறுப்பினர்களினால் பயன்படுத்தப்படும் வாகனமொன்றின்மீது ; அல்லது

(இ) அவசரநிலைமை காரணமாக அழைப்பொன்றின் மீது செல்கின்ற பிணியாளர் வண்டியொன்றின் மீது,

பொருத்தப்படலாம் அல்லது பயன்படுத்தப்படலாம்.".

(4) அதன் மீள இலக்கப்பமிடப்பட்ட (4) ஆம் உட்பிரிவில், "ஒரு நகர இடப்பரப்பின் எல்லைகளினுள்ளான ஏதேனும் பெருவழியின் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் வீதியின் மீது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(5) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(5) (அ) நாளின் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் மணித்தியாலங்களின்போது ஏதேனும் இடப்பரப்பில் அல்லது அதன் பாகத்தில் எல்லா எச்சரிக்கைக் கருவிகளையும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருவியைப் பயன்படுத்துவதனை இப்பிரிவின் நோக்கங்களுக்காகத் தடைசெய்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற ;

(ஆ) இயந்திரத்திலிருந்தாயினுஞ்சரி, புகைபோக்கி உபாயத்திலிருந்தாயினும்சரி அல்லது இசைக்கொம்பிலிருந்தாயினுஞ் சரி, ஒரு வாகனதிலிருந்து வெளிப்படக் கூடிய ஆகக்கூடுதலான சத்தத்தின் மட்டத்தை விதித்துரைக்கின்ற ;

(இ) ஏதேனும் வகுப்பினதான வாகனத்தின் மீது அல்லது எவையேனும் வகுப்பினவான வாகனங்களின் மீது பொருத்தப்பட்ட ஓர் எச்சரிக்கை உபாயம் அல்லது பின்னோக்கிச் செல்லும் போதான எச்சரிக்கை உபாயம் அல்லது எவையேனும் ஒலிபெருக்குகின்ற உபாயங்கள் தொடர்பாக அத்தகைய ஏதேனும் வகுப்பினதான வாகனத்துக்கு அல்லது எவையேனும் வகுப்பினவான வாகனங்களுக்கு அனுமதிக்கப்படற்பாலதான ஆகக்கூடிய சத்தத்தின் மட்டத்தின் விதித்துரைக்கின்ற,

ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.";

(6) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (6) ஆம் உட்பிரிவில் "(3) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "(5) ஆம் உட்பிரிவின் கீழ்" என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்.

(7) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (6) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (7) ஆம் உட்பிரிவாகப் பயனுற வேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(7) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அத்தகைய கருவிகள் பறிமுதலாக்கப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 155அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**48.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 155அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"வெளியேற்றுகை சில சந்தர்ப்பங்களில் தவறாதல்.*

155அ. (1) (அ) எவரேனுமாளின் உடனலத்துக்கு ஆபத்தாகவமையும் அல்லது அவருக்குத் தொந்தரவை அல்லது ஊறை விளை விக்கும் ;

(ஆ) வேறெவரேனும் வீதிபயன்படுத்துநரின் புலப்படு தன்மையை மறைக்கும்; அல்லது

(இ) ஏதேனும் வீதிக்கு அல்லது வேறு பொது இடத்து அல்லது ஆதனத்துக்குச் சேதம் விளைவிக்கும்,

சாத்தியங்கொண்ட புகையை, புலப்படத்தக்க ஆவியை, சிறு கல்பொடிகளை, தீப்பொறிகளை, சாம்பல்களை, தணல்களை, மசகெண்ணெய்யை

அல்லது எண்ணெய்ப் பதார்த்தங்களை வெளியேற்றும் ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுகின்ற அல்லது பயன்படுத்துகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படு வதன்மேல், இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரானவொரு குற்றத்தீர்ப்பின்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஒரு வீதியின் மீதுள்ள அல்லது வேறு பொது இடத்தின் மீதுள்ள ஒரு மோட்டார் வாகனம் தொடர்பில் (1) ஆம் உப்பிரிவின் கீழ் தவறொன்று புரியப்படுகின்றது என நம்புவதற்குக் காரணங் கொண்டுள்ள பரிசோதகரொருவர் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவர் –

(அ) அத்தகைய வாகனத்தை நிறுத்திப் பரிசோதனை செய்யலாமென்பதுடன், அத்தகைய வாகனத்திலிருந்து புகையின் அல்லது புலப்படத்தக்க ஆவியின் வெளியேற்றத்தை விதித்துரைக்கப்பட்ட உபகரண மொன்றின் மூலம் அளவீடு செய்யலாம் அல்லது அளவீடு செய்விக்கலாம் ; அல்லது

(ஆ) ஒன்றில் நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அவ்வாகனத்தின் சொந்தக்காரருக்குச் சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம், பின்வரும் நோக்கத்துக்காக, அறிவித்தலிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய தேதியன்றும் அத்தகைய

நேரத்திலும் அத்தகைய வாகனத்தை வாகனப் பரிசோதனை நிலையமொன்றில் அல்லது பொலிசு நிலையமொன்றில் காண்பிக்கும்படி தேவைப்படுத்தலாம் :-

(i) விதித்துரைக்கப்பட்டவோர் உபகரணத்தின்மூலம் புகையின் அல்லது புலப்படத்தக்க ஆவியின் வெளியேற்றத்தை அளவீடு செய்தல்;

(ii) அதன் நிலைமையானது, அதனைப் பயன்படுத்துவது இப்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிவதனை விளைவிக்கின்ற அத்தகையதாக இருக்கிறதாவென்பதை நிச்சயிப்பதற்கு அத்தகைய வாகனத்தைப் பரிசோதனை செய்தல்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டவரும், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்றும், அந்நேரத்திலும், அவ்விடத்திலும் நியாயமான காரணமின்றி ஒரு மோட்டார் வாகனத்தைக் காண்பிக்கத் தவறுகின்றவருமான அத்தகைய வாகனத்தின் சொந்தக்காரரொருவர் தவறொன்றக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(4) (அ) மோட்டார் வாகனங்கள் தொடர்பில் ஏற்புடையற்பாலதாகவிருக்க வேண்டிய

வெளியேற்றுகை நியமத்தை அமைச்சர் ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக் கலாம்;

(ஆ) அத்தகைய ஒழுங்குவிதிகள், வெவ்வேறு வகுப்பினவான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வெவ்வேறு நியமங்களை ஏற்பாடு செய்யலாம்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பரி சோதகர்" என்பது, இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப் பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவரென்று, அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதி பதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரென்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 157அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**49**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 157அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

*"ஆசனப் பட்டிகளைப் பயன்படுத்துதல்.*

157அ. (1) ஆளெவரும், அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட வகையினதான ஆசனப் பட்டியொன்றை அவர் பயன்படுத்தினாலொழிய, விதித்துரைக்கப்பட்ட வகுப்பினதான அல்லது விவரணத்தினதான வாகனமொன்றிலுள்ள விதித் துரைக்கப்பட்ட ஆசனமொன்றில் பிரயாணஞ் செய்யதலாகாது.

(2) பின்வருவனவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :-

(அ) தேவைப்பாடு எந்த ஆசனங்களுக்கு ஏற்பு டையதாக வுள்ளதோ அந்த ஆசனங்கள் ;

(ஆ) வாகனங்களின் வகுப்பு அல்லது விவர ணம் ; அத்துடன்

*(இ) (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆசனப்பட்டிகளின் வகை அல்லது விவரணம்.*

*(3) அமைச்சரினால் விதித்துரைக்கப்பட்ட வகையினதாகவிராத ஏதேனும் ஆசனப்பட்டியை ஆளெவரும் விற்பனை செய்தலோ அல்லது விற்பனைக்கு முனைதலோ அல்லது விற்பனைக்காக தனதுடைமையில் வைத்திருத்தலோ ஆகாது.*

*(4) ஓராம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை அல்லது இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் 224 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்துக்கு ஆளாதலும் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**50.** *முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-*

*"சத்தம்.*

*160. (1) ஓடிக்கொண்டிருக்கும் அல்லது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒரு வாகனத்தின் சாரதி, அவ்வாகனத்தில் பொருத்தப்பட்ட அல்லது அதன் மீது கொண்டுசெல்லப்படும் ஒலிபெருக் கியுடனான ஏதேனும் ஒலிபெருக்குகின்ற சாதனத்தைப் பயன்படுத்துதலோ அல்லது எவரேனுமாள் பயன்படுத்துவதனை அனுமதித்தலோ, அத்துடன் அவ்வாகனத்திலுள்ள ஆளெவரும் அதனைப் பயன்படுத்துதலோ ஆகாது :*

*ஆயின், எவ்வாறாயினும், ஓர் ஒலிபெருக்குகின்ற சானத்திலிருந்து வெளிப்படும் ஒலியின் அளவு ஒரு*

மோட்டார் வாகனத்தினுள்ளே மட்டப்படுத்தப் பட்டிருப்பதையும், அதிற் செல்வோருக்குமட்டும் கேட்க வேண்டும் எனும் உட்கருத்தையும் உறுதிப் படுத்தும்வகையில் அது ஒழுங்குபடுத்தப்படின் அத்தகைய சாதனம் அத்தகைய வாகனத்திற் பயன்படுத்தப்படலாம்.

(2) உள்ள எரிதல் இயந்திரமொன்றைக் கொண்டுள்ள எல்லா மோட்டார் வாகனங்களும் வினைத்திறன்வாய்ந்த மௌனமாக்கும் உபாய மொன்று பொருத்தப்பட்டனவாதல் வேண்டும். இதனூடாக இயந்திரத்திலிருந்தான எல்லா வெளிவிடுகைகளும் புறஞ்செலுத்தப்படுவதுடன், தகாத சத்தம் தோற்றுவிக்கப் படுவதனையும் இது தடுக்கும்.

(3) பரிசோதகரொருவர், அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவல ரொருவர், சத்தத்தின் மட்டத்தை வாசிப்பதனை இயலச் செய்யும் நோக்கத்துக்காக எச்சரிக்கை உபாயத்தை ஒலிக்கும்படி ஏதேனும் வாகனத்தின் சாரதியைப் பணிக்கலாம்.

(4) பின்வருவனவற்றை விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :-

(அ) இயந்திரப் புறம்போக்கி உபாயத்தி லிருந்து வெளிப்படக்கூடிய ஆகக்கூடு தலான சத்தத்தின் மட்டங்கள்; அத்துடன்

(ஆ) இசைக்கொம்பு, எச்சரிக்கை உபாயம் அல்லது பின்னோக்கிச் செல்லும் போதான எச்சரிக்கை உபாயம் அத்துடன் வெவ்வேறு வகுப்பினதான வாகனத்தின் மீது அல்லது வகுப்பினவான வாகனங் களின்மீது பொருத்தப்பட்ட ஒலிபெருக்கு கின்ற உபாயங்கள் தொடர்பாக அத்த கைய வகுப்பினதான வாகனத்துக்கு அல்லது வகுப்பினவான வாகனங்களுக்கு அனுமதிக்கக்கூடியதான ஆகக்கூடிய சத்தத்தின் மட்டம்.

(5) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) இப்பிரிவின நோக்கங்களுக்காகப் "பரிசோதகர்" என்பது, இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவரான அல்லது நியமிக்கப்பட்டவரெனக் கருதப்பட்டவரான மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் என்று பொருளாகுமென்பதுடன், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரையும் உள்ளடக்கும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**51.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :-

(அ) பந்தி (அ) வின் (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்து, அப்பந்தியின் (v) ஆம் உட்பந்தியாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(v) மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அத்தகைய விபத்தை உடனடியாக அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு செய்யத்தவறுகின்ற சாரதியொருவர், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.";

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து அதன் (ஈ) என்னும் பந்தியாகப் பயனுறவேண்டிய பின்வரும் பந்தியைச் சேர்ப்ப தன் மூலமும் :-

"(ஈ) அத்தகைய விபத்து சம்பந்தமாகக் காப்பு றுதிக்கான உரிமைக் கோரிக்கை யொன்று எந்தக் காப்புறுதியாளருக்குச் செய்யப்படுகின்றதோ அந்தக் காப்புறுதியாளர். பின்வருவனவற்றைக் கொடுத்து, விபத்துக்கள் தொடர்பான புள்ளிவிபரப் பதிவேடுகளைத் தொகுக் கும் நோக்கத்துக்காக, அத்தகைய விபத்துப் பற்றி மிக்க அண்மையிலுள்ள பொலிசு நிலையத்தின் பொறுப்பலு வலருக்கு அறிவித்தல் வேண்டும்:-

(i) அத்தகைய விபத்துத் தொடர் பான விபரங்கள் ; அத்துடன்

(ii) உரிமைக்கோரிக்கையைச் செய்யும் ஆளினால் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு, அத்த கைய விபத்தில் சம்பந்தப்பட்ட திறத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பிணைப்பொறுப்புச் சான்றிதழை" என்னும் சொற்களை விட்டுவிடுவதன் மூலமும்.

(3) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (3) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(3) ஓராம் உட்பிரிவின் பந்தி (ஈ) இன் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்

படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பண மொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 194 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**52.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 194 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவைத விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அடுத்தப் பின்னரான குற்றத்தீர்ப்பொன்றின் மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத் தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**53.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படு கின்றது:-

*"அங்கீரிக்கப் பட்ட ஊர்திச் சாலைகளும், சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையங் களும், சான் றுப்படுத்தும் அலுவலர் களும்.*

195. (1) ஆணையாளர் தலைமையதிபதி, ஓர் ஊர்திச்சாலை, சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரி னால் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதற் கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேலும், விதித்துரைக்கப்படட கட்டணம் மற்றும் சேவை அற வீட்டுக் கொடுப்பனவின் மேலும், கட்டளை மூலம்-

(அ) அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப் பட்ட ஊர்திச்சாலை, சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையம், 29 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக வாகனங்களின் வருடாந்தப் பரிசோதனைக்காகவும் மற்றும் சான்றுப்படுத்துகைக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலைச் சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலைய மொன்றாகவிருத்தல் வேண்டுமென்றும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரரும், அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையில் அல்லது அங்கீகரிக் கப்பட்ட சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வரும் அல்லது தொழிலுக்கமர்த்தப் பட்டவர்களும், கட்டளையிற் குறித்துரைக் கப்பட்டவர்களுமான அல்லது அத்தகைய வேறு ஆள் அல்லது ஆள் ஒவ்வொரு வரும் , அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையில் அல்லது அங்கீகரிக் கப்பட்ட சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையத்தில் மோட்டார் வாகனங்களை அவ்வாறு பரி சோதனை செய்யும் மற்றும் சான்றுப்படுத்தும் நோக்கத்துக்காக, அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலரொருவராகவிருத்தல் வேண்டு மென்றும்,

வெளிப்படுத்தலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, அவர், ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத் தும் அலுவலருக்கும் அதிகாரப்பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும்; அத்தகைய அதிகாரப்பத்தி ரம் எந்த நிபந்தனைகளுக்குமைய வழங்கப்படுகின் றதோ அந்த நிபந்தனைகளை அவர் அதன்கண் தெரிவித்தல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்ட ளையை, அத்தகைய கட்டளை எந்த அங்கீகரிக் கப்பட்ட ஊர்திச்சாலை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையம் தொடர்பில் ஆக்கப்பட்டதோ அந்த அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச் சாலையின் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையத்தின் எவரேனும் அங்கீ

கரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பத்திரத்திற் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் நிபந்தனையின் மீறுகையொன்றி ருப்பின், இல்லாதொழிக்கலாம் அல்லது மாற்ற லாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையம் தொடர்பாகவும், ஒரு நாளின்போது அங்கீகரிக்கப்பட்ட அந்த ஊர்திச்சாலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அந்த சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையத்தில் பரிசோதனை செய்யப்பட்டுச் சான்றுப்படுத்தப்படக்கூடிய மோட்டார் வாகனங்களின் ஆகக்கூடிய எண்ணிக் கையைக் குறித்துரைக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை ஆணையாளர் தலைமையதி பதி நிராகரிக்குமிடத்து, அதற்கான காரணங்களை அவர் எழுத்தில் கூறுதல் வேண்டும்.

(6) அமைச்சர், பின்வருனவற்றை விதித்துரைக் கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையத்தில் கிடைக்கக் கூடியனவாக்கப்படவேண்டிய சாதனங் களும் வசதிகளும் ;

(ஆ) ஓர் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலருக்குத் தேவையான தகைமைகள் ;

(இ) வெவ்வேறு வகுப்பினவான அல்லது விவர ணங்களினவான மோட்டார் வாகனங்க ளுக்கான கட்டாயச் சோதனையின் அடிக்க டியாந்தன்மை;

(ஈ) அங்கீகரிக்கப்பட்டவோர் ஊர்திச்சாலையினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையத்தினால் செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை.”

முதன்மைச் சட்டவாக்கத்தின் 196 ஆம் பிரிவை மீளவிடுதல்.

**54**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 196 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“வெளியேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழை வழங்குதல்.

196. (1) இருபத்தொன்பதாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வெளியேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழொன்றைப் பெறும் நோக்கத்துக்காக 195 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பரிசோதகரொருவர் முன்னர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலரொருவர் முன்னர் மோட்டார் வாகனமொன்றைக் காண்பிப்பதன்மீதும், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவு அல்லது சேவைக்கட்டணக் கொடுப்பனவுமீதும், பரிசோதகரொருவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலரொருவர் அத்தகைய வாகனத்தை விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய உரைகற்கள் மீது பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சான்றிதழ்கள் இச்சட்டத்திற்கமைய வழங்கப்படக்கூடுமோ அல்லனவா என்பதை சான்றுப்படுத்தலும் வேண்டும்.

(2) ஒரு மோட்டார் வாகனம் தொடர்பில் வழங்கப்பட்ட வெளியேற்றுகைச் சான்றிதழொன்று மற்றும் தகுதிச்சான்றிதழொன்று, வழங்குகைத் தேதியிலிருந்து ஓராண்டுக்கு அல்லது அத்தகைய சான்றிதழிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக மூன்று மாதங்களுக்கு குறையாத அத்தகைய குறுகிய காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(3) மோட்டார் வாகனமொன்று பயன்பாட்டுக்குத் தகுதியற்றதெனப் பரிசோதகரொருவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலு

வலரொருவர் சான்றுப்படுத்துமிடத்து, அதற்கான அவரது காரணங்களை அவர் கூறுதல் வேண்டும்.

(4) பயன்பாட்டுக்குத் தகுதியற்றதென இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழான பரிசோதனையின் பின்னர் சான்றுப்படுத்தப்படுகின்றவொரு மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீது, அத்தகைய சான்றிதழின் வழங்குகைக்கெதிராக ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டின் மீதான ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபு இறுதியானதாதலும் மீது வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் மோட்டார் வாகனமொன்று தொடர்பில் வழங்கப்பட்ட வெளியேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச்சான்றிதழ் –

(அ) எல்லா நேரத்திலும் அவ்வாகனத்தில் கொண்டு செல்லப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒரு பொலிசு அலுவலரினால், கிராம சேவை அலுவலரினால் அல்லது பரிசோகரினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியி னால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் கோரப்படுவதன் மீது சோதனைக்குக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய சான்றிதழ், ஒரு நீதிமன்றத்தின் முன்னர், ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னர் அல்லது உரிமமளிக்கும் அதிகாரசபையின் முன்னர், தேவைப்படுத்தப்படும் போது காண்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையொன்றின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர், அடுத்துவரும் மாதத்தின் பத்தாம் நாளுக்கு முன்னர், ஒவ்வொரு மாதத்தின் போதும் அவரினால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழ்களின் மாதாந்தச் சுருக்கமொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அனுப்புதல் வேண்டும்.

(7) (அ) அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையொன்றின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர், ஒவ்வொரு மாதத்தினதும் பத்தாம் நாளுக்கு முன்னர் (6)ஆம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த சுருக்கத்தை அனுப்பத் தவறுவாராயின், ஆணையாளர் தலைமையதிபதி, முதற்படியாக, (6) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய மாதாந்தச் சுருக்கம் அனுப்பப்படாவிடின், அத்தகைய ஊர்திச்சாலை தொடர்பில் 195 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை இல்லாதொழிக்கப்படலாமென்ற எச்சரிக்கையொன்றை அவருக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான அத்தகைய மாதாந்தச் சுருக்கத்தை அனுப்பத் தவறுவாராயின், ஆணையாளர் தலைமையதிபதி, அந்த அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலை

தொடர்பில் அல்லது அங்கீகரிக்கப் பட்ட சோதனை அல்லது பரீட்சிப்பு நிலையம் தொடர்பில் 195 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லா தொழித்தல் வேண்டும்.

(இ) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப் படுவதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன் றுக்கும், இரண்டாவது அல்லது அடுத் துப் பின்னரான குற்றத்தீர்ப்பின் மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறை யாததும் பதினையாயிரம் ரூபாவை விஞ்சாத துமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) வெளியேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழ்களை வழங்கும் நோக்கத்துக்காக மோட்டார் வாகனங்களைப் பரிசோதனை செய்வ தற்கான நடவடிக்கை முறைகளுக்கு ஏற்பாடு செய்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 196ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**55.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 196அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 196ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"வெளியேற் றுகைச் சான்றிதழ் மற்றும் தகு திச் சான்றித ழின் மோசடி யான வழங் குகையின் விளைவு.*

196ஆ. (1) எவரேனுமாள் மோசடியான வெளி யேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றித ழொன்றை வழங்குமிடத்து, அல்லது அங்கீகரிக் கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலரொருவருக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பத்திரத்திற் குறித்துரைக் கப்பட்ட நிபந்தனைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் ஏதேனுமொன்

றின் அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மீறுகை யொன்று உள்ளவிடத்து, ஆணையாளர் தலைமை யதிபதி அல்லது வேறேதேனும் அதிகாரசபை –

(அ) அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலை யினால் செலுத்தப்பட்ட முழுவைப்புப் பணத் தையும் எடுத்துக்கொள்ளல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய ஊர்திச் சாலைக்கும் அத்தகைய ஊர்திச்சாலையின் அத்தகைய அங்கீகரிக் கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலருக்கும் அளிக்கப்பட்ட அதிகாரத்தை இல்லா தொழித்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) மோசடியான வெளியேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழின் அடிப்படையின் மீது பெறப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்தி ரத்தை, உரிமத்தை அல்லது சான்றிதழை இல்லாதாக்குதல் வேண்டும்.

(2) மோசடியான வெளியேற்றுகைச் சான்றிதழ் மற்றும் தகுதிச் சான்றிதழொன்றை வழங்குகின்ற அல்லது எவரேனும் அங்கீகரிக்கப்பட்ட சான்றுப் படுத்தும் அலுவலருக்கு வழங்கப்படட அதிகாரப் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிபந்தனையை மீறுகின்ற அத்தகைய அங்கீகரிக்கப் பட்ட சான்றுப்படுத்தும் அலுவலர், தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இருபதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன் றுக்கு ஆளாதலும் வேண்டும்.”.

**56.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 198 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 198 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவில் “லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானை”, “லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான்”, “லொறிக்கு அல்லது மோட்டார்

முச்சக்கரவானுக்கு" மற்றும் "லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "ஏதேனும் மோட்டார் வாகனத்தை", "ஏதேனும் மோட்டார் வாகனம்", "ஏதேனும் மோட்டார் வாகனத்துக்கு" மற்றும் "ஏதேனும் மோட்டார் வாகனத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(10) ஒன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான தவறொன்றின் விடயத்தில், பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும், அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 199 ஆம் பிரிவை நீக்கஞ் செய்தல்.*

**57**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 199 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 200 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**58**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 200 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (3) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(3) ஒராம் உப்பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் நீதிவானொருவர் முன் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன் மேல் மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 201 ஆம் பிரிவை நீக்கஞ்செய்தல்.*

**59**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 201 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்படுகிறது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 213அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**60**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 213அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 213அஅ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"மோட்டார் வாகன மேன்முறை யீடுகள் நியாய சபை.*

213அஅ. (1) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்ததும் (இதனகத்துப்பின்னர் "நியாய சபை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) மோட்டார் வாகன மேன்முறையீடுகள் நியாயசபை யொன்றிருத்தல் வேண்டும்; அவ்வுறுப்பினர்கள் நாணயமும் மற்றும் தத்தமது முறையான துறைகளில் திறமையும் கொண்ட ஆட்களாவிருத் தல் வேண்டும் :-

(அ) அறிவியல் மற்றும் தொழினுட்பவியல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்டவரும், 1992 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, இலங்கை மோட்டார் இரதவியந் திரப் பொறியியலாளர் நிறுவுகம் (கூட்டி ணைத்தல்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மோட்டார் இயந்திரப் பொறியியலாளர் நிறு வகத்திலிருந்தான வருமான ஆளொருவர் ;

(ஆ) நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரும், சட்டத்துறையில் ஏற்றங்கீகாரம் பெற்றவருமான ஆளொரவர்; அத்துடன்

(இ) போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும், போக்கு வரத்து அமைச்சிலிருந்தானவருமான ஆளொருவர்.

(2) அமைச்சர், நியாயசபையின் தவிசாளராக விருப்பதற்கென உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(3) நியாயசபையின் ஒவ்வோர் உறுப்பினரும், இறப்பின்மூலம் அல்லது அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் அதன்சார்பிலான கடிதத்தினூடான பதவி விலகுதிலின்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் அவர் அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டா லொழிய, அவரது நியமனக் கடிதத்தில் அமைச்ச ரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக் குப் பதவிவகித்தல் வேண்டும். காலங்கழிவதன் மூலம் பதவியை வறிதாக்குகின்ற எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய வராதல் வேண்டும்.

(4) அமைச்சர், குறித்துரைக்கப்பட்ட காரணங்க ளுக்காக நியாயசபையின் எவரேனும் உறுப்பின ரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) எவரேனும் உறுப்பினர், பதவியை வறிதாக்கு கின்ற பட்சத்தில், அமைச்சர் அத்தகைய உறுப்பி னரை அடுத்துறுவதற்கு இன்னோராளை நியமித் தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு நியமிக்கப்

பட்ட உறுப்பினர், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு அத்தகைய பதவியை வகித்தலும் வேண்டும்.

(6) நியாயசபையின் தவிசாளர், அவர் அவசிய மெனக் கருதும்போதெல்லாம் அத்தகைய நியாய சபையின் கூட்டங்களைக் கூட்டலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய தவிசாளர், அத்தகைய நியாயசபையின் இரு உறுப்பினர்களினால் அத்தகைய நியாயசபையின் கூட்டமொன்றைக் கூட்டும்படி அவருக்கு எழுத்தில் வேண்டுகோள் விடுக்கப்படும் போதெல்லாம் அவ்வாறு செய்தல் வேண்டும்.

(7) நியாயசபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் இரு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(8) நியாயசபையின் அலுவல்களை நடாத்த வதற்கு ஏற்பாடு செய்கின்றவையும், அத்தகைய நியாசபையின் கூட்டங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கையை முறையை விதித்துரைக்கின்றவையுமான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம். அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கும் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அமைய, நியாய சபையானது அதன் சொந்த நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(9) நியாயசபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன்கண் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாகமட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

(10) நியாயசபையின் பணிகள், ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்வதற்கு, பொருத்துவதற்கு, அமைத்துருவாக்குவதற்கு, புத்தாக்கஞ் செய்வதற்கு, இசைவாக்குவதற்கு, திரிபுபடுத்துவதற்கு அல்லது அதன் அமைப்பை மாற்றுவதற்கு—

(அ) 19அ என்னும் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்திலான அங்கீ காரத்தை அளிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியின் மறுப்பினால் ; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் அளிக்கப்பட்ட ஏதேனும் எழுத்திலான அங்கீகாரம் 19அ என்னும் பிரிவின் (7)ஆம் உட்பிரிவின் கீழ் இல்லாதாக்கப் பட்டமையினால்,

இன்னலுறுகின்ற ஆட்களிடமிருந்தான மேன்முறையீடுகளைக் கேட்பதாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 213இ, 213ஈ, மற்றும் 213உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**61.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 213ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 213இ, 213ஈ மற்றும் 213 உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"குற்றப் பணங்களின் அரைவாசித் தொகை, பொலிசு வெகுமதி நிதியத்துக்கு வரவு வைக் கப்படுதல்.

213இ. பிரிவு, 213ஈ இன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட பணங்களைத் தவிர, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அறவிடப்பட்ட, ஆனால் நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள் தவிர்த்து, எல்லாக் குற்றப்பணங்களினதும் அரைவாசித் தொகை, திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மற்றைய அரைவாசித் தொகை, (53 ஆம் அத்தியாயமான) பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் தாபிக் கப்பட்ட பொலிசு வெகுமதி நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

மோட்டார் வாகன வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம்.

213ஈ. (1) (இதன் பின்னர் "வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) மோட்டார் வாகன வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம் எனவழைக்கப்பட வேண்டிய நிதியமொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) பின்வருவன வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) 213உ என்னும் பிரிவின் கீழ் அல்லது சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அல்லது வேறேதேனும் எழுத்தி லான சட்டத்தின் கீழ் அதற்குச் செலுத்தப் படும்படி பணிக்கப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட குற்றப் பணங்களைத் தவிர்த்து மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் தொடுக் கப்பட்ட நீதிமன்ற வழக்குகளின்கீழ் அறவிடப்பட்ட குற்றப்பணங்களின் அரைவாசித்தொகை ; அத்துடன்

(இ) இச்சட்டங்களின் கீழ் இறுக்கப்பட்ட கட்டணங்கள் மிகைக்கட்டணங்களின் ஒரு சதவீதம்.

(3) பின்வருவன வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக் கிணங்க வாகனங்களை ஒழுங்குபடுத்து தல், மேற்பார்வை செய்தல், சோதனையி டுதல், நுண்ணாய்வு செய்தல், கண்டு பிடித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள அலுவலர் களுக்கு வெகுமதிகளாகக் கொடுக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் ;

(ஆ) நிதியத்தை நிருவகிப்பதில் உறப்பட்ட செலவுகள் ; அத்துடன்

(இ) விதித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

(4) (அ) நிதியமானது எம்முறையில் நிருவகிக்கப் பட வேண்டுமோ அம்முறையை விதித்துரைக்கின் றனவான ;

(ஆ) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட் டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்றவையும், நிதியத்துடன் சம்பந்தப்பட்டவையுமான கருமங்கள் தொடர்பிலான ;

(இ) நிதியத்தைத் தாபிப்பதன் மற்றும் நிருவகிப்பதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் தொடர்பிலான,

ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(5) நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படு தல் வேண்டும்.

வாகனங்களைத் திரிபுடுத்துவதற்கும் மாற்றியமைப்பதற்குமான மிகைக் கட்டணம்.

213உ. (1) வாகனமொன்று, அதன் நிர்மாணம் மற்றும் அடையாளம் என்பன தொடர்பாகத் திரிபுபடுத்தப்படுமிடத்து, மாற்றியமைக்கப்படு மிடத்து அல்லது மாற்றப்படுமிடத்து அல்லது அதன் பொறிமுறைசார் ஆக்கக்கூறுகளுக்கு எவையேனும் மாற்றங்கள் செய்யப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக் கிணங்க அத்தகைய மிகைக் கட்டணங்களை விதிப்ப தற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்ப துடன், அத்தகைய விதிப்பனவு இறுதியானதும் முற்றானதுமாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்களின் தொகை, 213ஈ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மோட்டார் வாகன வெகுமதி நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 215ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**62**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 215ஆ என்னும் பிரிவு, "ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**63**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"காப்புறுதிச் சான்றிதழ் அல்லது தகுதிச் சான்றிதழ் அல்லது வெளியேற்றுகைச் சான்றிதழ் இன்றி ஓட்டுவதற்கான தண்டம்.*

218. பிரிவு 99 இன் அல்லது 196 ஆம் பிரிவின் (5) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அத்துடன் பன்னிரண்டு மாதகாலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 219 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**64**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 219 ஆம் பிரிவு, "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "இருபத்தையாயிரம் ரூபாவுக்குக்

குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் வழங்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆவணங் கள், அத்தகைய வழங்குகை அல்லது பதிவுத் தேதியிலிருந்து செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 220 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**65.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 220 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (1அ) என்னும் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(1அ) சாரதி உரிமமொன்றை மோசடியான முறையில் வழங்குகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்ற வாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல், இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பின்மேல், ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஓர் இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்–

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் "அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழை" என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில் "அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழை" என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(இ) அதன் (இ) என்னும் பந்தியில் ''அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழொன்றை'' என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும் ;

(ஈ) ''ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப் பணத்துக்கு'' என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் வழங்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள், அத்தகைய வழங்குகை அல்லது பதிவுத் தேதியிலிருந்து செல்லுபடியற்றனவாகக் கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்–

(அ) ''அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழொன்றை'' என்னும் சொற்களை விட்டுவிடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) "ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு'' என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "பதினையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 223 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**66.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 223 ஆம் பிரிவு, "பொய்யானதென அவர் அறிந்துள்ள அல்லது நம்புகின்ற, தவறு தொடர்பிலான ஏதேனம் தகவலைக் கொடுக்கின்ற எவரேனுமாள்" என்னும் சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "பொய்யானதென அவர் அறிந்துள்ள அல்லது நம்புகின்ற, தவறு தொடர்பிலான ஏதேனும் தகவலைக் கொடுக்கின்ற அல்லது ஏதேனும் கூற்றை அளிக்கின்ற எவரேனுமாள், அத்தவறு தண்டனைச் சட்டக்கோவையின் 38(3) மற்றும் 198 ஆகிய பிரிவுகளின் கருத்துக்குட்பட்ட தவறொன்றாக இராதவிடத்து, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**67.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவு இத்தால் நீக்கம்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"பொதுவான தண்டம்.*

224. எந்தத் தவறுக்காக இச்சட்டத்தில் வேறு தண்ட மெதுவும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட வில்லையோ, அந்த ஏதேனும் தவறுக்காகக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், இரண்டாவதுமுறையாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இரண்டாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் மூவாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும், மூன்றாவது அல்லது அடுத்துப் பின்னரானவொரு குற்றத்தீர்ப்பின்மேல் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாத குற்றப்பண மொன்றுக்கும், மற்றும் அவரது சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 232ஆ, 232இ, 232ஈ, 232உ மற்றும் 232ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**68.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 232அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 232ஆ, 232இ, 232ஈ, 232உ மற்றும் 232ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"வாகனங்களைக் கைப்பற்றுதலும் இழப்பிக்கச் செய்தலும்.*

232ஆ. (1) மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர், 19அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைத்துருவாக்கப்பட்டுள்ள, உற்பத்தி செய்யப் பட்டுள்ள, பொருத்தப்பட்டுள்ள, புத்தாக்கஞ் செய்யப்பட்டுள்ள, இசைவாக்கப்பட்டுள்ள, திரிபுபடுத்தப் பட்டுள்ள அல்லது அதன் அமைப்பு மாற்றப்பட்டுள்ள ஒரு மோட்டார் வாகனம், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்காக அல்லது அதனைப் புரிதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதென நம்புவதற்கு அவருக்குக் காரண மிருப்பின், ஏதேனும் விசாரணையின் நோக்கங்க ளுக்காக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய காலத்துக்கு அத்தகைய மோட்டார் வாகனத்தைக் கைப்பற்றித் தடுத்துவைக்கலாம்.

(2) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் மோட்டார் வாகனத்தைக் கைப்பற்றுமிடத்து, அத்தகைய மோட்டார் வாகனம், விசாரணை முடிவுறும்வரை ஆணையாளர் தலைமையதி பதியின் கட்டுக் காப்பிலும் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(3) மோட்டார் வாகனப் பரிசோதகரினாலான அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு வரினாலான அல்லது பொலிசு அலுவலரொரு வரினாலான உரிய விசாரணையின் பின்னர், கைப்பற்றப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம்,-

(அ) 19அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைத்துருவாக்கப்பட்டுள்ளது, உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, பொருத்தப்பட்டுள்ளது, புத்தாக்கஞ் செய்யப்பட்டுள்ளது, இசைவாக்கப்பட்டுள்ளது, திரிபுபடுத்தப்பட்டுள்ளது அல்லது அதன் அமைப்பு மாற்றப்பட்டுள்ளது எனவும் ; அத்துடன்

(ஆ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் ஒரு தவறைப் புரிவதற்காக அல்லது புரிதல் சம்பந்தமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

அத்தகைய மோட்டார் வாகனப் பரிசோதகர், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் திருப்திப்படுமிடத்து, அத்தகைய அலுவலர், அத்தகைய விசாரணையின்போது வெளிக்கொணரப்பட்ட நிகழ்வுகள் பற்றிய அறிக்கையொன்றை மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், 2அ என்னும் பிரிவின் கீழும் அத்தகைய வேறு சட்டத்தின்கீழும் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில் அத்தகைய வாகனத்தின் சாரதிக்கெதிராக வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தலும் வேண்டும்.

(4) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி, அறிக்கையில் அடங்கியுள்ள நிகழ்வுகளின் உண்மைபற்றித் திருப்திப்படின், அத்தகைய வாகனத்தை இழப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களை விடுத்தல்வேண்டுமென்பதுடன் அத்தகைய வாகனம் அதன்மேல் இழப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் இழப்பிக்கப்படுவதன்மேல் அரசுக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்குத லானது–

(அ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக எக்காலப் பகுதியினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அக்காலப்பகுதி முடிவுற்ற பின்னர் ; அல்லது

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கெதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறை யீடொன்று செய்யப் பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக் கப்பட்டதன் மேல்,

பயனுறுதல் வேண்டும்.

(6) விண்ணப்பத்தில், இன்னலுற்ற ஆள் வழக் காளியாகவும், விடயத்துக்கேற்ப, பரிசோதகர், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது பொலிசு அலுவலர் எதிராளியாகவும் விவரிக்கப் படுதல் வேண்டும். விண்ணப்பமானது பின்வரு வனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பெய ரையும் நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ் செய்யப்பட்ட தேதியையும்; அல்லது

(ஆ) மோட்டார் வாகனப் பரிசோதகரின், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அல்லது பொலிசு அலுவலரின் பெயரையும் முகவரியையும் ; அத்துடன்

(இ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டிய கருமம் பற்றிய எளிமையான தும் சுருக்கமானதுமான கூற்றொன்றை யும், அதாவது, விண்ணப்பத்தின் விடயப் பொருளாகவுள்ள மோட்டார் வாகனத் தின் கைப்பற்றுகையும் இழப்பித்தலும் சட்டமுறையற்றதென்றும், நீதிமன்றம்-

(i) அத்தகைய கைப்பற்றுதலும் இழப்பித்தலும் சட்டமுறையற்ற தென்றும் ; அத்துடன்

(ii) அத்தகைய வாகனம் உடனடியாக வழக்காளிக்குத் திருப்பிக் கொடுக் கப்படுதல் வேண்டுமென்றும்,

தீர்மானித்தல் வேண்டுமென்றும்.

(7) ஏதேனும் மோட்டார் வாகனத்தைக் கைப் பற்றுதலும் இழப்பித்தலும் தொடர்பில் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஏதே னும் விண்ணப்பத்தின்மீது அந்நீதிமன்றத் திலான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், அவ்வுட்பிரி வின்கீழ் அத்தகைய கைப்பற்றுதலும் இழப்பித் தலும் சட்டவிரோதமாக விருந்ததென்பதை எண் பிப்பதற்கான பொறுப்பு வழக்காளியைச் சார்ந்த தாதல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் இழப்பிக்கப்பட்ட வாகனங் களைக் கையுதிர்ப்பதற்கான நடவடிக்கை முறை யைக் குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை அமைச் சர் ஆக்கலாம்.

தகைமையீனக் காலப்பகுதியை குறைத்தல்.

232இ. (1) ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவ றொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும் மற்றும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத ஏதேனும் காலப்பகுதிக்கு வாகனம் ஓட்டுவதற்கு அவரைத் தகைமையற்றவராக்கும் கட்டளையை நீதிமன்றம் ஆக்குமிடத்தும், அத்தகைய தகைமை யீனக் காலப்பகுதி, இப்பிரிவின்கீழான கட்டளை யிற் குறித்துரைக்கப்பட்டவொரு தேதிக்கு முன்னர் இப்பிரிவின் நோக்கத்துக்காக அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதும், ஒரு நீதிமன்றத்தினால் பெயர்குறிக்கப்பட்டதுமானவொரு கற்கைநெறியை அத்தகைய ஆள் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வா ராயின், நீதிமன்றத்தினால் குறைக்கப்படலாம்.

(2) நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தகைமையீனக் காலப்பகுதியில் இப்பிரிவின் கீழான கட்டளையொன்றினால் ஆக்கப்பட்ட குறைப்பு, கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குக் குறையாததும் குறைக்கப்படாத காலப் பகுதியின் நாலிலொன்றுக்கு மேற்படாததுமான காலப் பகுதியொன்றாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, விதிக்கப்பட்ட காலப்பகுதி பன்னிரண்டு மாதங்களாகவுள்ளவிடத்து, குறைக்கப்பட்ட காலப்பகுதி ஒன்பது மாதங்களாகவிருத்தலும், கட்டளையினால் விதிக்கப்பட்ட காலப்பகுதி ஆறு மாதங்களாகவுள்ளவிடத்து, குறைக்கப்பட்ட காலப் பகுதி மூன்று மாதங்களாகவிருத்தலும் வேண்டும்.

(3) (அ) கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட கற்கைநெறியிலானவோர் இடம் தவறாளருக்குக் கிடைக்கக்கூடியதாக வுள்ளதென நீதிமன்றம் திருப்திப் பட்டாலொழியவும் ;

(ஆ) கட்டளையின் பயனை நீதிமன்றம் தவறாளருக்கு விளக்கியிருந்து கற்கைநெறிக்கான கட்டணத்தொகை பற்றியும் கற்கைநெறி தொடங்குவதற்குமுன்னர் அவர் அதனைச் செலுத்தவேண்டுமென்ற தேவைப்பாடு பற்றியும் அவருக்கு அறிவித்திருந்தாலொழியவும் ; அத் துடன்

(இ) கட்டளை ஆக்கப்படவேண்டுமெனத் தவறாளர் உடன்பட்டிருந்தாலொழியவும்,

நீதிமன்றம் இப்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குதலாகாது.

(4) ஒரு கற்கைநெறியைப் பூர்த்திசெய்வதற்கான மிகப்பிந்திய தேதியாகக் கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்ட தேதி, கட்டளையினால் குறைக்கப்பட்டவாறு தகைமையீனக் காலப்பகுதியின் கடைசி நாளுக்கு ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னரேனும் இருத்தல் வேண்டும்.

(5) கற்கைநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதன்மேல், சான்றிதழொன்று, கட்டளையை ஆக்கிய நீதிமன்றத்தின் பதிவாளருக்குக் கற்கைநெறியை நடாத்திய அலுவலரினால் வழங்கப்படுதல் வேண்டும். குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழ், விதிக்கப்பட்ட தகைமையீனக் காலப் பகுதி முடிவடையுமுன்னர், ஆனால் கட்டளையினால் குறைக்கப்பட்டிருக்கக்கூடியவாறான காலப்பகுதி முடிவடைந்த பின்னர் நீதிமன்றப் பதிவாளரினாற் பெறப்படின், நீதிமன்றத்தினால் சான்றிதழ் பெறப்படும் நாளன்று குறைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்தது என்றாற்போன்று கட்டளையானது பயனுறுதல் வேண்டும்.

(6) நீதிமன்றத்தினாற் குறைக்கப்பட்டவாறு தகைமையீனக் காலப்பகுதி முடிவடையு முன்னர் கற்கைநெறி பூர்த்திசெய்யப்படாதவிடத்து, அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படும்வரை தகைமையற்றவராகத் தொடர்ந்திருக்கும்படி நீதிமன்றமானது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்குக் கட்டளையிடலாம்.

வழக்கு நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

232ஈ. (1) இச்சட்டத்தின்கீழ் எவரேனும் அலுவலரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அத்தகைய அலுவலருக்கெதிராகத் துடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய அலுவலரினால் இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அரசினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

சாரதிகளைத் தடுத்து வைத்தல்.

232உ. பொலிசு அலுவலரொருவர்,–

(அ) தமது பெயரையும் முகவரியையும் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்படுவதன்மேல் அவ் வாறு செய்ய மறுக்கின்ற அல் லது தவறுகின்ற, அல்லது பொய் யானதென அப்பொலிசு அலு வலர் நியாயமான முறையில் சந்தேகிக்கும் ஒரு பெயரையும் முகவரியையும் கொடுக் கின்ற ;

(ஆ) மரணத்தை அல்லது பாரதூர மான ஊறை விளைவிக்கும் விபத்தொன்றில் சம்பந்தப்பட்டி ருக்கின்ற ;

(இ) மதுசாரத்தை அல்லது போதைப் பொருட்களை உட்கொண்டுள்ளா ரென அவர் நியாயமான முறை யில் சந்தேகிக்கின்ற ;

(ஈ) அவரது அபிப்பிராயத்தில் பொய் யான அல்லது போலியாகப் புனையப்பட்ட ஆவணங்களை அல்லது பொய்யான அடையாள இலக்கத் தகடுகளை உடைமையில் வைத்திருக்கின்ற ;

(உ) அவரது அபிப்பிராயத்தில் போலி புனையப்பட்ட அல்லது மாற்றப்பட்ட அடிச்சட்டக மற்றும் இயந்திர இலக்கத்தைக் கொண்ட மோட்டார் வாகனமொன்றை உடைமையில் வைத்திருக்கின்ற ; அல்லது

(ஊ) களவாடப்பட்ட வாகன மொன்றை உடைமையில் வைத்திருக்கின்றாரென அவர் நியாய மான முறையில் சந்தேகிக்கின்ற,

மோட்டார் வாகனமொன்றின் சாரதியை, விசாரணை மற்றும் புலனாய்வு நோக்கங்களுக்காக நியாயமான முறையில் அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஒரு பொலிசு நிலையத்தில் தடுத்துவைக்க லாம்.

வாகனங்களைத் தடுத்து வைத்தல்.

232ஊ. (1) நிர்மாணம், சாதனம் மற்றும் பயன்பாடு தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ஏதேனும் வாகனம் தொடர்பில் இணங்கியொழுகப் பட்டிருக்க வில்லையென நம்புவதற்குக் காரண முள்ள மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர், அத்தகைய வாகனத்தை மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்கு ஓட்டிச் செல்லும்படி அதன் சாரதியைத் தேவைப் படுத்தலாமென்பதுடன், சோதனை மற்றும் புலனாய்வு நோக்கத்துக்கு நியாயமானமுறையில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத் துக்கு அவசியமாயின் அதனைத் தடுத்தும் வைக்க லாம்.

(2) பொலிசு அலுவலரொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களிலும் ஒரு மோட்டார் வாகனத்தை ஏதேனும் பொலிசு நிலையத்தில் தடுத்துவைக்க லாம் :-

(அ) 99 ஆம் பிரிவின்கீழ் செல்லுபடியான காப்புறுதிப்பத்திரமொன்றைச் சாரதி காண்பிக்க இயலாதவராக விருப்பின் ;

(ஆ) சாரதியானவர், செல்லுபடியான சாரதி உரிமமொன்றை உடையவராக இராதிருப் பின் ; அல்லது

(இ) வியாபாரிப் பதிவுச் சான்றித ழொன்றை, திருத்துநர் பதிவுச் சான்றிதழொன்றை அல்லது உற்பத்தியாளர் பதிவுச் சான்றித ழொன்றை வைத்திராத ஒரு வியாபாரிக்கு, திருத்துநருக்கு அல்லது உற்பத்தியாளருக்கு வாகனம் சொந்தமாகவிருப்பின்.

(3) மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர், பின்வருவன பற்றி நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருப்பின், ஏதேனும் பொலிசு நிலையத்தில் அல்லது மோட்டார் வாகனத் திணைக்களத்தின் எவையேனும் வளவுகளில் மோட்டார் வாகன மொன்றைத் தடுத்தும் வைக்கலாம் :-

(அ) அத்தகைய வாகனத்தை பதிவு செய்வதற் காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பொய்யானவை அல்லது போலியாகப் புனையப்பட்டவை என ;

(ஆ) வாகனத்துக்குப் போலியாகப் புனையப் பட்ட, அதனுடன் தலையிடப்பட்ட அல்லது மாற்றப்பட்ட அடிச்சட்டக அல்லது இயந்திர இலக்கம் உள்ளது என ;

(இ) வாகனமானது பொறிமுறை ரீதியில் குறைபாடுள்ளது என ;

(ஈ) வாகனமானது களவாடப்பட்டது எனவும் அல்லது அது களவாடப்பட்டது என அவர் நியாயமான முறையில் சந்தேகிக்கின்றார் என ; அல்லது

(உ) வாகனமானது பொய்யான அல்லது போலியாகப் புனையப்பட்ட அடையாளத் தகடுகள் பொருத்தப்பட்டது என.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 239ஈ மற்றும் 239உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**69**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 239இ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப் படுகின்றனவென்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 239ஈ, 239உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"தவறுகள், பிடியாணை யின்றிக் கைது செய்யத்தக்கன வாகவிருத்தல்.*

239ஈ. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத் தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவி யில் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எவ்வாறிருப் பினும், இச்சட்டத்தின் கீழான ஒவ்வொரு தவறும், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங் களுக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்வது தவறொன்றாதல் வேண்டும்.

*தவறுகள், நீதிவான் நீதிமன்றத் தினால் விளங்கப்படற் பாலனவாதல்.*

239உ. இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுக ளும், நீதிவான் நீதிமன்றமொன்றினால் விளங்கப் படற்பானவாதல் வேண் டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**70**. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**71**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "விலங்கு" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக் கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக் கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

"விபத்து" என்பது,-

(அ) ஒரு வீதியில், தெருவில் அல்லது பொது வாகனப் போக்குவரத்து இடம்பெறும் வேறேதேனும் இடத்தில் ஏற்படுகின்றதும் அல்லது எழுகின்ற தும் ;

(ஆ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் கொல்லப்படுவதனை அல்லது ஊறுக்குட்படுவதனை விளைவிக்கின்றதும் அல்லது ஆதனத்துக்குச் சேதமேற்படுத்துகின்றதும் ; அத்துடன்

(இ) அதில் ஆகக்குறைந்தது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு வாகனமானது சம்பந்தப்பட்டிருக்கின்றதும்,

ஆன ஒரு விபத்து என்று பொருளாகுமென்பதுடன், வாகனங்களுக்கிடையேயானவையும், வாகனங் களுக்கும் பாதசாரிகளுக்கும் இடையேயானவையும், வாகனங்களுக்கும் விலங்குகளுக்கும் அல்லது நிலையான பொருட்களுக்கும் இடையேயான மோதல்களையும் உள்ளடக்கும் ; அத்துடன் ஒரு வாகனம் மட்டுமே சம்பந்தப்படுகின்ற விபத்துக்களையும் உள்ளடக்கும் ;

“சட்டம்” என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் என்று பொருளாகும் ;

“ஆதாரப் பொருத்தி” என்பது, ஒரு வாகனத்துடன் அல்லது ஆசனத்துடன் இணைக்கப்படுவதற்கு வடிவமைக்கப்பட்ட ஆசனப்பட்டியொன்றின் முடிவிடப்பாகம் என்று பொருளாகும் ;

“அங்கீகரிக்கப்பட்ட சான்றுப்படுத்தும் அலுவலர்” என்பது, 196 ஆம் பிரிவின்கீழ் தகுதிச் சான்றிதழொன்றை வழங்கும் நோக்கத்துக்காக மோட்டார் வாகனமொன்றைப் பரிசோதனை செய்கின்ற, 195 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவரான சான்றுப்படுத்தும் அலுவலரொருவர் என்று பொருளாகும் ;

“அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலை” என்பது, வருடாந்த அரசிறை உரிமங்களை வழங்குவதற்கு முன்னர் மோட்டார் வாகனங்களின் பரிசோதனை மற்றும் தகுதிச் சான்றுப்படுத்துகை என்பவற்றின் நோக்கத்துக்காக 195 ஆம் பிரிவின்கீழான

கட்டளைமூலம் அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச் சாலை ஒன்றென மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது மோட்டார் வாகன மாகாண ஆணையாளரினால் வெளிப்படுத்தப்பட்டவோர் ஊர்திச் சாலை என்று பொருளாகும் ;

(2) "விலங்கு" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"சட்டமுறையற்றவகையில் பொருத்தப்பட்ட" என்பது, ஒரு மோட்டார் வாகனத்தை-

(அ) வணிகக் குறியிடப்பட்ட புதிய பாகங்களுடனல்லாது வேறுவகையாக ;

(ஆ) அப்பாகங்களின் உற்பத்தியாளரினது எழுத்திலான முன்னனுமதியின்றி ; அல்லது

(இ) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி,

பொருத்துதல் என்று பொருளாகும் ;

(3) "தொடுத்த வாகனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"தொடுத்த வாகனம்" என்பது, முதன்மையான இயக்குங் கருவியையும் பகுதியளவிலான இழுவை வண்டியையும் கொண்டுள்ள ஒரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும்.";

(4) "இரவில்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"வணிகக்குறியிடப்பட்ட" என்பது, வியாபாரச் சின்னங்கள் பதிவாளருடன் அல்லது வணிகக்குறியிடப்பட்ட பாகங்கள் எந்த வெளிநாட்டிலிருந்து தோற்றுவிக்கப்பட்டனவோ அந்த வெளிநாட்டின் சமநிலையிலுள்ள அதிகாரியுடன் பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளரொருவரின் வியாபாரப் பெயருடன் வணிகக் குறியிடப்பட்ட என்று பொருளாகும் என்பதுடன், அத்தகைய பாகங்களின் மூல உற்பத்தியாளருடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள உற்பத்தியாளரொருவரினால் வணிகக்குறியிடப்பட்ட பாகங்களையும் உள்ளடக்கும் ;

"வார்ப்பூட்டு ஆக்கக்கூறு" என்பது, வார்ப்பூட்டுப் பொருத்துகையைப் பூர்த்திசெய்வதற்கு ஒன்றோடொன்று இணைக்கப்படுவதற்கு வடிவமைக்கப்பட்ட வார்ப்பூட்டுப் பொருத்துகையின் இரு பாகங்களுள் ஒவ்வொன்றும் என்று பொருளாகும் ;

"தகுதிச் சான்றிதழ்" என்பது, இச்சட்டத்தின் 196 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டவொரு சோதனைச் சான்றிதழ் என்று பொருளாகுமென்பதுடன், வாகனத்தின் பொறிமுறை நிலைமை பற்றிய கூற்றொன்றையும், உள்ளடக்கும் ;";

(5) "காப்புறுதிச் சான்றிதழ்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"பதிவுச் சான்றிதழ்" என்பது, மோட்டார் வாகனமொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரியமுறையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதென்ற பொருள்பட ஆணையாளர் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று என்று பொருளாகும் ;";

(6) "ஆணையாளர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, இச்சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி" என்று பொருளாகும்;";

(7) "ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

"வியாபாரி" என்பது, அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையொன்றில் மோட்டார் வாகனங்களின் அடைமானம், விற்பனை, இறக்குமதி, குத்தகை அல்லது வாடகைக் கொள்வனவு என்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருளாகுமென்பதுடன், இறக்குமதியாளரொருவரையும் உள்ளடக்கும் ;

"மரணம்" என்பது, ஒரு மோட்டார் வாகன விபத்தின்மூலம் உடனடியாகக் கொல்லப்பட்ட அல்லது அவ்விபத்தின் விளைவாக அம்மோட்டார் வாகனவிபத்திலிருந்து முப்பது நாட்களினுள் ஏற்பட்ட எவரேனுமாளின் மரணம் என்று பொருளாகும்;";

(8) "சாரதி அறிவுறுத்துநர்" என்ற சொற்பதத்திற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"சாரதி அறிவுறுத்துநர் அல்லது உதவிச் சாரதி அறிவுறுத்துநர்" என்பது, செல்லுபடியான அறிவுறுத்துநர் உரிமத்தை உடையவரும், சாரதிப் பாடசாலையொன்றில் தொழிலுக்கமர்த்

*தப்பட்டவரும், ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காக ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுவதில் அறிவுறுத்தல்களைக் கொடுக்கின்றவருமான ஆளொருவர் என்று பொருளாகும்;";*

*"சாரதி உரிமம்" என்பது, இச்சட்டத்தின் VII ஆம் பாகத்தின்கீழ் வழங்கப்பட்டவோர் உரிமம் என்று பொருளாகும் ;*

*"சாரதிப் பாடசாலை" என்பது, கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காக மோட்டார் வாகனங்களை ஓட்டுதலிலான அறிவுறுத்தலை ஆட்களுக்குப் புகட்டுவதும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்டதுமானவொரு தாபனம் என்று பொருளாகும் ;*

*"இருநோக்க வாகனம்" என்பது, ஒரே நேரத்தில் ஆட்களையும் பண்டங்களையும் கொண்டு செல்லும் நோக்கத்துக்காக வடிவமைக்கப்பட்டு அமைக்கப்பட்டவொரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும் ; ஆயின், கொண்டு செல்லப்படும் ஆட்களின் எண்ணிக்கை (சாரதியுட்பட) ஒன்பது பேரை விஞ்சுதலாகாதென்பதுடன், முழுமொத்த வாகன எடை, மூவாயிரத்து ஐந்நூறு கிலோ கிராம்களை விஞ்சுதலுமாகாது ;*

*"அவசரகாலச் சேவை வாகனம்" என்பது-*

*(அ) அவசர அழைப்பொன்றைப் பெற்றதன் மீது செல்கின்ற தீயணைப்புப் படையி*

னரினால் அல்லது பொலிசாரினால் அல்லது பிணியாளர் வண்டியொன்றினால் பயன்படுத்தப்படுவதும்,–

(i) தீயணைப்புப் படையினரின் விடயத்தில், ஒரு சிவப்புநிற வெளிச்சத்தினைப் பயன்படுத்துவதன் மூலமும் ;

(ii) பொலிசாரினால் பயன்படுத்தப்படும் வாகன மொன்றின் விடயத்தில், சிவப்புநிற மற்றும் நீலநிற வெளிச்சத்தைப் பயன்படுத்துவதன்மூலமும் ; அத்துடன்

(iii) பிணியாளர் வண்டியொன்றின் விடயத்தில், சிவப்புநிற வெளிச்சத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் ;

அடையாளங்காணப்படுவதுமான வாகனமொன்று, அல்லது பிணியாளர் வண்டியொன்று என்று பொருளாகும் ; அத்துடன்

(ஆ) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன், இமைக்கின்ற நீலநிற வெளிச்சத்தை அல்லது இமைக்கின்ற அம்பர் நிற வெளிச்சத்தைப் பயன்படுத்தி அவசர

*அழைப்பொன்றின்மீது செல்கின்ற வேறேதேனும் வாகனம் என்று பொருளாகும் ;*

*''வெளியேற்றுகைச் சான்றிதழ்'' என்பது வாகனத்திலிருந்து வெளிப்படும் புகை, புலப்படத்தக்க ஆவி, தீங்குவிளைவிக்கும் புகைகள், தீப்பொறிகள், சாம்பல்கள், தணல்கள், மசகெண்ணெய்கள் அல்லது எண்ணெய்ப் பதார்த்தம் என்பவற்றின் வெளியேற்றம், அனுமதிக்கப்பட்ட வரையறையினுள் உள்ளதென்ற கூற்றொன்றையும் உள்ளடக்குதலும் வேண்டும்;";*

*(9) "பரிசோதகர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-*

*"பரிசோதகர்" என்பது, இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட மோட்டார் வாகனப் பரிசோதகரொருவர் என்று பொருளாகும் என்பதுடன், பிரதானப் பரிசோதகரொருவரையும் பிரதிப் பிரதானப் பரிசோதகரொருவரையும் உள்ளடக்கும் ;";*

*(10) "பரிசோதகர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்கு உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-*

*"சட்டமுறையற்றவகையில் அமைத்துருவாக்கப்பட்ட" என்பது, ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, ஒரு மோட்டார் வாகனத்தின் மூலமுன்மாதிரிக்கு*

*மாற்றங்களை விளைவிக்கின்றதும், அதன் அடிச்சட்டகத்தின் மீது அல்லது அடிச்சட்ட கத்தின் பாகத்தின்மீது அல்லது உடற்கோப்பின் மீது அல்லது உடற்கோப்பின் பாகத்தின் மீது நிறைவேற்றப்பட்டதுமான அமைத்துருவாக்கம் என்று பொருளாகும்;";*

*''மரணத்தை ஏற்படுத்தும் விபத்து'' என்பது, தனியொரு ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்தை அல்லது பல ஓடிக்கொண்டிருக்கும் வாகனங் களை உட்படுத்தியதாகவமைந்து அதில் அத்தகைய விபத்திலிருந்து முப்பது நாட்களினுள் ஒன்று அல்லது அதற்கு மேற் பட்ட ஆட்கள் கொல்லப்படுதல் என்று பொருளாகும் ;*

*"பண்டங்கள்" என்பது, உயிருள்ள ஆளொருவர் தவிர, ஒரு வாகனத்திற் கொண்டுசெல்லப்படும் கால்நடையையும், (வாகனத்துடன் சாதாரண மாகப் பயன்படுத்தப்படும் சாதனமல்லாத) வேறெதனையும் உள்ளடக்கும் ; ஆனால் ஒரு மோட்டார் காரில் அல்லது ஒரு மோட்டார் வாகனத்துடன் இணைக்கப்பட்ட ஓர் இழுவை வண்டியில் கொண்டு செல்லப்படும் பயணப் பொதிகளை அல்லது உடைமைப் பொருட்களை அல்லது அவ்வாகனத்தில் பயணஞ்செய்யும் பயணிகளின் பயணப்பொதிகளை உள்ளடக் காது;";*

*(11) "கிராமசேவை அலுவலர்" என்னும் சொல்லமைப்புக் கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"பாரதூரமான ஊறு" என்பது, (19 ஆம் அத்தியாய மான) தண்டனைச் சட்டக்கோவையின் 311 ஆம் பிரிவில் எடுத்துக்கூறப்பட்ட ஊறுபாட்டின்*

*ஒன்று அல்லது அதற்கதிகமான வகைகளை விளைவிக்கின்ற ஊறொன்று என்று பொருளாகும் ;*

*"முழுமொத்த வாகன எடை" என்பது, ஒரு வாகனத்துக்கு அனுமதிக்கப்படற்பாலதெனப் பதிவுசெய்யும் அதிகாரியினால் சான்றுப்படுத்தப்பட்டு பதிவுசெய்யப்பட்ட அவ்வாகனத்தின் மொத்த எடையும் சுமையும் என்று பொருளாகும் ;";*

*(12)* *"கையுழவுயந்திரம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும் :-*

*"பாரமான மோட்டார் கோச்சு" என்பது, சாரதியின் ஆசனத்துடன் சேர்த்து முப்பத்தி மூன்று ஆசனங்களை விஞ்சாத ஆசன வசதியுடன் எழுநூற்றைம்பது கிலோகிராம்களை விஞ்சுகின்ற ஆகக்கூடிய அதிகார மளிக்கப்பட்ட வெற்றெடையைக் கொண்டுள்ளதுமான ஒரு மோட்டார் கோச்சினதும் அதன் இழுவை வண்டியினதும் இணைப்பு அல்லது இரு மோட்டார் கோச்சுகளின் இணைப்பு என்று பொருளாகும் ;*

*"பாரமான மோட்டார் லொறி" என்பது, ஒரு மோட்டார் லொறியினதும் இழுவைவண்டியினதும், அல்லது இழுவைவண்டியினதும் அல்லது தொடுத்த வாகனத்தினதும் மற்றும் அதன் இழுவைவண்டியினதும் இணைப்பு என்று பொருளாகும் ; அத்தகைய இழுவைவண்டி, எழுநூற்றைம்பது கிலோகிராம்களுக்கு விஞ்சுதலான அதிகாரமளிக்கப்பட்ட வெற்றெடையைக் கொண்டதாகவும், அத்தகைய மோட்டார் லொறியும் இழுவைவண்டியும் அல்லது இழுவைவண்டிகளும் அல்லது தொடுத்த வாகனமும் இழுவைவண்டியும் அல்லது இழுவை வண்டிகளும் முந்நூற்றைம்பது கிலோகிராம்களுக்கு விஞ்சுதலான முழுமொத்த வாகன எடையைக் கொண்டனவாகவும் இருக்கும் ;";*

(13) “பெருவழி” என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(14) “பாரமான மோட்டார் லொறி” என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் ;

“சோதனைச் சான்றிதழ்” என்பது, ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், ஒரு மோட்டார் வாகனத்தைப் பரிசோதனை செய்தபின்னர், அவ்வாகனத்தின் உடற்கோப்பும், இயந்திரமும், அடிச்சட்டகமும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இசைந்தொழுகின்றனவெனத் திருப்திப்படுமிடத்து, அவரினால் வழங்கப்பட்டவொரு சான்றிதழ் என்று பொருளாகும் ;

“சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையம்” என்பது, 195 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட சோதனை மற்றும் பரீட்சிப்பு நிலையமொன்று என்று பொருளாகும் ;

"அறிவுறுத்துநர்" என்பது, உதவி அறிவுறுத்துநர் ஒருவரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"அறிவுறுத்துநர் உரிமம்" என்பது, உதவி அறிவுறுத்துநர் உரிமமொன்றையும் உள்ளடக்கும் ;

(15) "நில வாகனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"நில வாகனம்" என்பது, அதன் முழுமொத்த வாகன எடை மூவாயிரத்து ஐந்நூறு கிலோகிராம்களை விஞ்சாததும் இழுவை வண்டியொன்றை உட்படுத்தியதும் ஒரு கமத்தொழில் நோக்கம்

*அல்லது நிர்மாணப் பொருட்களையும் குப்பை கூளத்தையும் கொண்டுசெல்லும் நோக்கம் சம்பந்தமாக நிலத்தில் பயன்படுத்தப்படு வதற்காக முழுமையாக அல்லது பிரதானமாக நிர்மாணிக்கப்பட்டதும், பொறிமுறையாக அல்லது மின்சாரரீதியில் அல்லது சூரியவெப்ப வலுவினால் அல்லது திரவ பெற்றோலிய வாயுவினால் உந்தப்பட்டதுமான வாகனம் என்று பொருளாகும்";*

*(16)* "*நில வாகனம்*" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரை விலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

"*மடிப்பட்டி*" என்பது, இடுப்புவளையத் தடுப்புக் காப்பை மட்டுமே வழங்குவதற்கு வடிவமைக் கப்பட்டவோர் ஆசனப்பட்டி என்று பொரு ளாகும் ;

"*மடிப்பட்டிகை ஆசனப்பட்டி*" என்பது, இடுப்பு வளையத் தடுப்புக்காப்பை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட மடிவாரும், மேலுடல் முண்டப்பகுதித் தடுப்புக்காப்பை வழங்குவதற்கு வடிவமைக்கப்பட்ட உடல் முண்டப்பகுதி வாரும் இணைந்துள்ளவோர் ஆசனப்பட்டி என்று பொருளாகும் ;

*(17)* "*உரிமமளிக்கும் அதிகாரி*" என்னும் சொல்லமைப் புக்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"*உரிமமளிக்கும் அதிகாரி*" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பின் கீழ் அரசிறை உரிமங்களை வழங்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரி என்று பொரு ளாகும் ;

(18) "உரிமமளிக்கும் அதிகாரி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"பாரமற்ற மோட்டார் கோச்சு" என்பது, பத்து அல்லது அதற்கு மேற்பட்டதும் சாரதியின் ஆசனம் உட்பட முப்பத்தி நான்கிற்கு குறைவானதுமான ஆசனவசதி கொண்ட, அவர்களின் உடைமைப் பொருட்களையும் கொண்டுசெல்வதற்கு அமைக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப் பட்டதும் மோட்டார் பிணியாளர் வண்டியாக அல்லது மோட்டார் பிண வண்டியாகவிராதது மானவொரு மோட்டார் வாகனம் என்று பொருளாகுமென்பதுடன், அதன் அதிகாரமளிக் கப்பட்ட வெற்றெடை எழுநூற்றைம்பது கிலோகிராம்களை விஞ்சாததும், அவ்வாறு அமைக்கப்பட்டு இசைவாக்கப்பட்டதுமான இழுவைவண்டியொன்றையும் உள்ளடக்கும் ;

"பாரமற்ற மோட்டார் லொறி" என்பது, அதன் முழு மொத்த வாகன எடை 3,500 கிலோகிராம்களை விஞ்சுகின்றதும், 17,000 கிலோகிராம்களை விஞ்சாததும், 750 கிலோ கிராம்களை விஞ்சாத ஆகக்குறைந்த அதிகாரமளிக்கப்பட்ட வெற்றெடையைக் கொண்டுள்ளவோர் இழுவை வண்டியுடன் இணைக்கப்படக்கூடியதுமான ஒரு மோட்டார் லொறி என்று பொருளாகுமென்பதுடன், மோட்டார் பிணவண்டியொன்றையும், மோட்டார் பிணியாளர் வண்டியொன்றையும் உள்ளடக்கும்";

(19) "லொறி" என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்கி விடுவதன்மூலமும் ;

(20) "உள்ளூரதிகாரசபை" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும் :-

"உற்பத்தியாளர்" என்பது, அங்கீகரிக்கப்பட்டவொரு தொழிற்சாலையில் அடிச்சட்டகத்துடன் இணைக்கப்படுவதற்காக உடற்கோப்புகளைக் கட்டுகின்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் என்று பொருளாகும் ;"

"சட்டமுறையற்றவகையில் உற்பத்திசெய்யப்பட்ட, புத்தாகக் கஞ்செய்யப்பட்ட இசைவாக்கப்பட்ட, திரிபுபடுத்தப்பட்ட அல்லது அதன் அமைப்பு மாற்றப்பட்ட" என்பது, 19அ என்னும் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ், ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி மோட்டார் வாகனமொன்றை உற்பத்திசெய்தல், புத்தாக்கஞ்செய்தல், இசைவாக்குதல், திரிபுபடுத்துதல் அல்லது அதன் அமைப்பை மாற்றுதல் என்று பொருளாகும் ;".

(21) "உந்தமைவுடைய மிதிவண்டி" என்னும் சொல்லமைப்புக்கான வரையிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"உந்தமைவுடைய மிதிவண்டி" என்பது, ஐம்பது கன சென்றி மீற்றர்களை விஞ்சாத உருளைக்கொள்ளளவைக் கொண்டதும், அதனை உந்தமுடியுமான மிதிக்கட்டைகள் பொருத்தப்பட்டதும், உள்ளக எரிதல் இயந்திரத்துட னானதுமான மோட்டார் சைக்கிள் என்று பொருளாகும்.".

(22) "மோட்டார் கோச்சு" என்பதற்கான வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன்மூலமும் :-

"மோட்டார் கோச்சு" என்பது, ஒரு மோட்டார் பிணியாளர் வண்டியாக அல்லது மோட்டார் பிண வண்டியாக இராததுதம், முப்பத்திமூன்று பேருக்கு மேற்பட்டதுமான ஆசன வசதியையும் (சாரதியுட்பட) அவர்களின் உடைமைப்

பொருட்களையும் கொண்டு செல்வதற்கு அமைக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப் பட்டதுமானவொரு மோட்டார் வாகனம் என்று பொருளாகுமென்பதுடன், எழுநூற்றைம்பது கிலோகிராம்களை விஞ்சாததும் அவ்வாறு அமைக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப் பட்டதுமான இழுவை வண்டியொன்றையும் உள்ளடக்கும் ;

"மோட்டார் சைக்கிள்" என்பது, மூன்று சில்லுகளுக்கு மேற்படாதவற்றின் மீது பயணஞ் செய்வதற்கு வடிவமைக்கப்பட்டதும், அதினோடிணைக்கப் பட்ட ஏதேனும் பக்கக் காரின் வெற்றெடையுடன் சேர்த்து இருநூற்றைம்பது கிலோ கிராம்களை விஞ்சாத வெற்றெடையை உடையதுமான மோட்டார் முச்சக்கரவண்டி அல்லது மோட்டார் முச்சக்கர வான் தவிர்ந்த, உந்தமைவுடைய மிதிவண்டி உட்பட்ட மோட்டார் வாகனம் என்று பொருளாகும் ;

(23) "மோட்டார் பிணவண்டி" என்னும் சொல்லமைப்புக் கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"மோட்டார் லொறி" என்பது, முழுமையாக அல்லது பிரதானமாகப் பண்டங்களைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப்பட்டதும், அதன் முழுமொத்த வாகன எடை 17000 கிலோகிராம்களுக்கு மேற்பட்டதும், 750 கிலோகிராம்களை விஞ்சாத ஆகக்கூடிய அதிகாரமளிக்கப்பட்ட வெற்றெடையைக் கொண்டுள்ளதாக அவ்வாறு அமைக்கப் பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட இழுவை வண்டியுடன் இணைக்கப்படக்கூடியதுமான ஒரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும் ;

*(24)* "மோட்டார் முச்சக்கரவண்டி" மற்றும் "மோட்டார் முச்சக்கரவான்" என்பவற்றுக்கான வரைவிலக்கணங் களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணங்களை இடுவதன்மூலமும் :-

"மோட்டார் முச்சக்கரவண்டி" என்பது, மூன்று சில்லு களில் பயணஞ்செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட தும், 500 கிலோகிராம்களை விஞ்சாத வெற்றெ டையைக் கொண்டுள்ளதும், முழுமையாக அல்லது பிரதானமாக பயணிகளைக் கொண்டு செல்வதற்கு அமைக்கப்பட்டதுமான ஒரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும் ;

"மோட்டார் முச்சக்கர வான்" என்பது, மூன்று சில்லுகளில் பயணஞ்செய்வதற்கு வடிவமைக்கப் பட்டதும், 500 கிலோகிராம்களை விஞ்சாத வாகன எடையை உடையதும், அதன் முழு மொத்த வாகன எடை 1000 கிலோகிராம்களை விஞ்சாததும், முழுமையாக அல்லது பிரதான மாக பண்டங்களைக் கொண்டுசெல்வ தற்காக அமைக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப் பட்டதுமான ஒரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும் ;

(25) "மோட்டார் வாகனம்" என்பதற்கான வரைவிலக்க ணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"மோட்டார் வாகனம்" என்பது-

(அ) வீதிகளில் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப் பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட உழவுயந்திரம் அல்லது இழுவைவண்டி உட்பட்ட பொறிமுறை யாக அத்துடன்/ அல்லது மின்சார ரீதியில் அத்துடன் அல்லது சூரிய வெப்பவலுவினால் உந்தப்படும் அல்லது திரவத்தன்மையான

*பெற்றோலிய வாயுவினால் உந்தப்படும் அல்லது மாற்று எரிபொருளினால் உந்தப்படும் ஏதேனும் வாகனம் என்று பொருளாகும், ஆனால் வீதி உருளியொன்றை உள்ளடக்காது ;*

*(ஆ) மட்டமாக்குதல், சேறுவாருதல், மண்ணகற்றுதல், காட்டியல் போன்ற கமத்தொழில் அல்லது நிர்மாண நோக்கம் சம்பந்தமாக அல்லது ஏதேனும் ஒத்த தொழிற்பாடு சம்பந்தமாக நிலத்தில் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட பொறிமுறையாக அத்துடன்/அல்லது மின்சார ரீதியில் அல்லது அத்துடன் சூரிய வெப்ப வலுவினால் உந்தப்படும் அல்லது திரவத் தன்மையான பெற்றோலிய வாயுவினால் மாற்றீடான எரிபொருளினால் உந்தப்படும் ஏதேனும் வாகனம் அல்லது மாற்று எரிபொருளினால் உந்தப்படும் ஏதேனும் வாகனம் என்று பொருளாகும், ஆனால் வீதி உருளியொன்றினை உள்ளடக்காது;";*

*(26) "சொந்தக்காரர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-*

*"சொந்தக்காரர்" என்பது, ஒரு மோட்டார் வாகனம் தொடர்பாக, எந்த ஆளின் பெயரில் மோட்டார் வாகனமொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் என்றும், அத்தகைய ஆள் பராய மடையாதவராகவுள்ளவிடத்து, அத்தகைய பராயமடையாதவரின் பாதுகாவலர் என்றும், ஒரு வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் அல்லது குத்தகை உடன்படிக்கையின் அல்லது அடைமான உடன்படிக்கையின் விடயப்பொருளாகவுள்ள ஒரு மோட்டார் வாகனம் தொடர்பாக, அவ்வுடன்படிக்கையின்கீழ் அவ்வாகனத்தை உடைமையில் வைத்திருக்கும் ஆள் என்றும் பொருளாகும்;";*

*(27) "பயணி" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"அனுமதிப்பத்திரம்" என்பது, ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்;";*

*(28) "தனியார் கோச்சு" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்து வதன்மூலமும் :-*

*"பொது இடம்" என்பது, அதனை அணுகுவதற்கான உரிமையைப் பொதுமக்கள் கொண்டுள்ள, ஒரு பொதுவழியாகவிருப்பினுஞ்சரி இல்லாதிருப்பினுஞ்சரி, ஒரு வீதி, தெரு, வழி அல்லது வேறு இடம் என்று பொருளாகும் என்பதுடன், ஒரு பேரூந்துவினால் பயணிகள் ஏற்றப்படும் அல்லது இறக்கப்படும் ஏதேனும் இடத்தையும் அல்லது தரிப்பிடத்தையும் உள்ளடக்கும் ;*

*"பொதுச் சேவை வாகனம்" என்பது, ஒரு கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காகப் பயணிகளைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப் படுவதற்கு இசைவாக்கப் படும் அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனும் மோட்டார் வாகனம் என்று பொருளாகும்;";*

*(29) "இடாப்பு" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன் மூலமும் :-*

*"பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர்" என்பது, ஒரு மோட்டார் வாகனம் அல்லது இழுவைவண்டி தொடர்பாக, அத்தகைய மோட்டார் வாகனம் அல்லது இழுவைவண்டி எந்த ஆளின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் என்று பொருளாகும்;";*

(30) "நீக்கப்பட்ட கட்டளைச்சட்டம்" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும் :-

"வீதி" என்பது, பொதுமக்கள் அணுகுகையைக் கொண்டுள்ள ஏதேனும் பொதுவழியின் அல்லது வேறேதேனும் வீதியின் முழுமையும் என்று பொருளாகும் என்பதுடன், ஒரு தேசியப் பெருவழியையும், கடுகதி வழியையும், மட்டுப்படுத்தப்பட்ட அணுகுகைப் பெருவழியையும், அத்தகைய வீதி எந்தப் பாலத்தின்மீது அல்லது மதகின்மீது செல்கின்றதோ அந்த ஏதேனும் பாலத்தையும் அல்லது மதகையும் உள்ளடக்கும்;

"பட்டிகை வழிகாட்டி" என்பது, மடிப்பட்டிகை ஆசனப் பட்டியின் மேலுடல் முண்டப்பகுதி வாரைக் கண்டறியும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உபாயங்களைக் கொண்டவொரு முறைமை என்று பொருளாகும் ;

"ஆசனப்பட்டி" என்பது, ஒரு தாக்கம் அல்லது விபத்து ஏற்படும் பட்சத்தில் ஒரு மோட்டார் வாகனத்தில் பயணஞ்செய்பவரைத் தடுத்துக்காப்பதற்காக வடிவமைக்கப்பட்ட வார்கள், ஆதாரப் பொருத்திகள், பிணைக்கும் வார்ப்பூட்டு, சீர்செய்கின்ற உபாயங்கள் மற்றும் ஆகக்குறைந்தது ஒரு பட்டிகை வழிகாட்டி என்பனவற்றின் ஒழுங்குமுறை என்று பொருளாகும் ;

"விசேட நோக்க வாகனம்" என்பது, கமத்தொழில், நிர்மாண அல்லது பண்டங்களை ஏற்றும் மற்றும் தரையிறக்கும் நோக்கங்களுக்காக விசேடமாக அமைக்கப்பட்ட பொறிமுறையாக உந்தப்பட்ட வாகனம் என்று பொருளாகும் ;

"நிறுத்திடம்" என்பது, பயணிகளை ஏற்றும் அல்லது இறக்கும் நோக்கத்துக்காகப் பேரூந்துகள் நிறுத்திவைக்கப்படக்கூடிய ஓரிடமென ஏதேனும் சட்டத்தின்கீழ் தரப்பட்டுள்ள இடமொன்று என்று பொருளாகும் ;

"வார்" என்பது, சரியானதும் வசதியானதுமான அணிகையை வசதிப்படுத்துவதற்கான நெகிழ்வுடன் வடிவமைக்கப்பட்ட ஓர் ஆசனப்பட்டியின் பாகமொன்று என்று பொருளாகும்;";

(31) "இழுவைவண்டி" என்பதற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"வாகனம்" என்பது, ஏதேனும் வழிவகை மூலம் உந்தப்படுவதற்கு அல்லது இழுக்கப்படுவதற்கு வடிவமைக்கப்பட்ட, அவ்வாறு உந்தப்படுவதற்கு அல்லது இழுக்கப்படுவதற்கு அது இயன்றதாகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, ஓர் ஊர்தி என்று பொருளாகும் என்பதுடன், ஒரு பைசிக்கிளையும், அல்லது மிதிக்கட்டையினால் ஏவப்பட்ட வேறு வாகனத்தையும், இழுவை வண்டியையும், வண்டிலையும், கோச்சையும், டிராம்காரையும், பொறிமுறையாக உந்தப்பட்ட வாகனத்தையும், அத்துடன்/அல்லது மின்சார ரீதியில் உந்தப் பட்ட வாகனத்தையும் அத்துடன்/ அல்லது சூரியவெப்ப வலுவினால் உந்தப்பட்ட வாகனத்தையும் அத்துடன்/ அல்லது திரவத் தன்மையான பெற்றோலிய வாயுவினால் உந்தப்படும் வாகனத்தையும் அல்லது மாற்று எரிபொருளினால் உந்தப்பட்ட வாகனத்தையும் நிலத்தின்மீது போக்குவரத்து வழிவகையாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு இயன்ற தாகவுள்ள ஏதேனும் செயற்கைப் பொறியமைவையும் உள்ளடக்கும், ஆனால் ஒரு புகையிரதத் தன்னாற்றலாலியங்கும் பொறியை உள்ளடக்காது.".

**72.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அதன் (3), (4), (5), (6) மற்றும் (7) என்னும் உட்பிரிவுகளாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளை சேர்ப்பதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"*(3)* இச்சட்டம் தொடங்கும் தேதியன்று, விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்தல், பொருத்துதல், அமைத்துருவாக்குதல், புத்தாக்கஞ் செய்தல், இசைவாக்குதல், திரிபுபடுத்துதல் அல்லது அதன் அமைப்பை மாற்றுதல் என்ற தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற ஆளொருவர், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்தி செய்தல், பொருத்துதல், அமைத்துருவாக்குதல், புத்தாக்கஞ்செய்தல், இசைவாக்குதல், திரிபுபடுத்துதல் அல்லது அதன் அமைப்பை மாற்றுதல் என்ற அத்தகைய தொழிலுக்காக, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன், ஆணையாளரின் எழுத்திலானக அங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

*(4)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்திசெய்தல், பொருத்துதல், அமைத்துருவாக்குதல், புத்தாக்கஞ் செய்தல், இசைவாக்குதல், திரிபுபடுத்துதல் அல்லது அதன் அமைப்பை மாற்றுதல் என்ற தொழிலைக் கொண்டுநடாத்தியவரும், அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட, பொருத்தப்பட்ட, அமைத்துருவாக்கப்பட்ட, புத்தாக்கஞ்செய்யப்பட்ட, இசைவாக்கப்பட்ட, திரிபு படுத்தப் பட்டஅல்லது அதன் அமைப்பு மாற்றப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்திராத வருமான ஆளொருவர், விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தின் அத்தகைய உற்பத்தி, பொருத்துகை, அமைத்துருவாக்கம், புத்தாக்கம், இசைவாக்கம், திரிபுபடுத்துகை அல்லது அமைப்பு மாற்றம் என்பவற்றுக்காக, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின் மீதும், விடயத்துக்கேற்ப, ஒரு மோட்டார் வாகனத்தின் அத்தகைய உற்பத்தி, பொருத்துகை, அமைத்துருவாக்கம், புத்தாக்கம், இசைவாக்கம், திரிபுபடுத்துகை அல்லது அமைப்பு மாற்றம் என்பவற்றுக்காக அங்கீகாரமளிக்கலாம்.

(6) ஆணையாளர் தலைமையதிபதியானவர், விண்ணப்பகாரர் ஒரு மோட்டார் வாகனத்தை உற்பத்திசெய்தல், பொருத்துதல், அமைத்துருவாக்குதல், புத்தாக்கஞ்செய்தல், இசைவாக்குதல், திரிபுபடுத்துதல் அல்லது அதன் அமைப்பை மாற்றுதல் என்ற தொழிலை–

(அ) முறையீனமான அல்லது திருப்திகரமற்றவொரு முறையில் ; அல்லது

(ஆ) அதன் காப்பு நியமங்கள், வடிவமைப்பு, அமைப்பு அல்லது ஏதேனும் நிபந்தனை அல்லது சாதனம் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இசைந்தொழுகவிராத அத்தகையவொரு முறையில் ; அல்லது

(இ) வீதிக்காப்புக்கு அல்லது சூழலுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சாத்தியமுள்ளவாறான அத்தகைய முறையில்,

கொண்டுநடாத்தியுள்ளாரெனத் திருப்திப்படுமிடத்து, எழுத்திலான அறிவித்தல்மூலம் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எழுத்திலான அங்கீகாரத்தை வழங்க மறுத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் எழுத்திலான அங்கீகாரத்தை அளிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதி மறுக்கின்றமையினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய மறுப்புப் பற்றிய எழுத்திலான அறிவித்தலைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள் நியாயசபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், அதன்மீது நியாயசபையின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*